வெளியீடு : 25-11-2002 Issued : 25-11-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை ஏப்ரல் 8, 2002 – தொகுதி 19 – எண் 1

**Monday the 8th April, 2002 – Volume 19 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

V211, 31'P02.
P02.19.1
224484

[Price Rs. 3.00

130
2003

## 8-4-2002

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் .. | iii-vii |
| Governor and Council of Ministers .. | ix-xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் .. | xiii-xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) .. | xvii-xxvii |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (ஐந்தாவது பட்டியல்) .. .. | 1-34 |
| **2. இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு .. .. | 35 |
| **3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 .. .. | 35-36 |
| **4. தகவல் கோரல்—** | |
| சென்னை, வடபழனி பகுதியில் சுமதி என்பவர் படுகொலை .. .. | 36-38 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்—தொடர்ச்சி** .. | 38-90, 91-135 |
| *திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் .. | 38-56 |
| *பேராசிரியர் க. அன்பழகன் .. | 56-89 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. | 90-135 |
| **6. அறிவிப்பு—** | |
| உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி 70 பேரோடு கைது குறித்து காவல் துறையிடமிருந்து வந்த செய்தி .. | 90 |
| **7. அரசினர் தீர்மானம்—** | |
| விதி 32-ஐத் தளர்த்தல் .. | 135 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** .. | 136-137 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :**

   பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

3. **நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**

   நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

4. **கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

   கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

5. சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :

சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை :

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்று குடும்பநலன்.

8. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரக கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரக குடிநீர் வழங்கல்.

9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால் :

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்று புள்ளியியல்.

10. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22487
சென்னை-600 008
நூலகம்



11. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள். தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

12. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

14. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மின் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :

மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.

17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. மோகன் :

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :

வீட்டுவசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :

கால்நடை பராமரிப்பு.

21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின நலன்.

22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



23. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சு.க. பாலசுப்ரமணியன் :

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

26. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :

மீன்வளம்.

27. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர் :

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services. District Revenue Officers. Home, Police and Minorities Welfare.

2. **Minister for Public Works & Prohibition and Excise** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

   Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption and Prisons.

3. **Minister for Finance and Information Technology** .. **The Hon. Thiru C. Ponnaiyan:**

   Finance, Planning, Elections and Legislature. Legislation. Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies and Information Technology.

4. **Minister for Education** .. **The Hon. Dr. M. Thambidurai:**

   Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

5. **Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

9. **Minister for Co-operation, Food & Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

10. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

11. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess Sugarcane Development.



12. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-servicemen.

14. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity and Non-conventional Energy Development.

16. **Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines & Minerals, Electronics and Commercial Taxes.

17. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests & Environment and Pollution Control.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vilwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi and Village Industries Board.

19. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.,

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Animal Husbandry.

21. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K. Sudarsanam:**

Backward Classes, Most Backward Classes and De-notified Communities.

22. **Minister for Labour** .. **The Hon. Thiru Va. Thu. Natarajan:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

23. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

24. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.

25. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

26. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

27. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

*மாற்றுத் தலைவர்கள்**

திரு. பி.ஆர். சுந்தரம்

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. எம்.ஏ. ஹக்கீம்

திரு. செ.கு. தமிழரசன்

திரு. லா. சந்தானம்

*முதன்மைச் செயலாளர்*

திரு. செ.சு. ஜானகிராமன்

*செயலாளர்*

திரு. வெ. இராசாராமன்

---

*12-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. (விடுப்பு) | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ. பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந., ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ் | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சீ. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ் .. கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா. தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்கரபாணி, திரு. ஆர் .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

| | | |
|---|---|---|
| 112. | செல்வராஜ், திரு. ஏ.கே. | .. மேட்டுப்பாளையம் |
| 113. | செல்வி முருகேசன், திருமதி | .. காங்கேயம் |
| 114. | சேகரன், திரு. கே.என். | .. திருவெறும்பூர் |
| 115. | சேகர்பாபு, திரு. பி.கே. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 116. | சோமசுந்தரம், திரு. வி. | .. உத்திரமேரூர் |
| 117. | ஞானசேகரன், திரு. சி. | .. வேலூர் |
| 118. | ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | .. திருநாவலூர் |
| 119. | தமிழரசன், திரு. செ.கு. | .. நன்னிலம் (செ.வ.) |
| 120. | தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி | .. மேல்மலையனூர் |
| 121. | தம்பிதுரை, டாக்டர் மு. | .. பர்கூர் |
| 122. | தவமணி, திரு. க. | .. திருவிடைமருதூர் |
| 123. | தளவாய் சுந்தரம், திரு. ந. | .. கன்னியாகுமரி |
| 124. | தனபால், திரு. ப. | .. சங்கரி (செ.வ.) |
| 125. | தாமோதரன், திரு. எஸ். | .. விருதுநகர் |
| 126. | தாமோதரன், திரு. செ. | .. கிணத்துக்கடவு |
| 127. | தாமோதிரன், திரு. ப.வெ. | .. பொங்கலூர் |
| 128. | திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | .. பேராவூரணி |
| 129. | திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். | .. காஞ்சிபுரம் |
| 130. | திருமாவளவன், திரு. இரா. | .. மங்களூர் (செ.வ.) |
| 131. | துரைமுருகன், திரு. | .. காட்பாடி |
| 132. | துரைராஜ், திரு. சி. | .. சேடப்பட்டி |
| 133. | தென்னரசு, திரு. கே.எஸ். | .. ஈரோடு |



| | | |
|---|---|---|
| 134. | நடராஜன், திரு. அ. | .. குத்தாலம் |
| 135. | நடராஜன், திரு. எஸ். | .. நாட்ராம்பள்ளி |
| 136. | நடராஜன், திரு. பி.கே.டி. | .. ஆத்தூர் |
| 137. | நடராஜன், திரு. வது. | .. இளையான்குடி |
| 138. | நயினார் நாகேந்திரன், திரு. | .. திருநெல்வேலி |
| 139. | நரசிம்மன், திரு. பி.எம். | .. பள்ளிப்பட்டு |
| 140. | நளினி மனோகரன், திருமதி | .. போளூர் |
| 141. | நன்மாறன், திரு. என். | .. மதுரை கிழக்கு |
| 142. | நீலகண்டன், திரு. ப. | .. ஆற்காடு |
| 143. | நெப்போலியன், திரு. து. | .. வில்லிவாக்கம் |
| 144. | பச்சைமால், திரு. தா. | .. குளச்சல் |
| 145. | பதினெட்டாம்படியான், திரு. க. | .. முதுகுளத்தூர் |
| 146. | பரணிகுமார், திரு. பா. | .. திருச்சிராப்பள்ளி-I |
| 147. | பரிதி இளம்வழுதி, திரு. | .. எழும்பூர் (செ.வ.) |
| 148. | பவானி கருணாகரன், திருமதி கே. | .. அரக்கோணம் (செ.வ.) |
| 149. | பழனிசாமி, திரு. கே.எஸ். | .. பெருந்துறை |
| 150. | பழனிசாமி, திரு. ஜி. | .. திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 151. | பழனியப்பன், திரு. பெ. | .. மொரப்பூர் |
| 152. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. குறிஞ்சிப்பாடி |
| 153. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. பெரியகுளம் |
| 154. | பாண்டுரங்கன், திரு. கே. | .. அணைக்கட்டு |
| 155. | பாப்பா சுந்தரம், திரு. அ. | .. குளித்தலை |
| 156. | பாரமலை, திரு. க. | .. மானாமதுரை (செ.வ.) |

157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ர்மணியன், திரு. க.க. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்



179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. .. கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
195. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
196. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
197. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
198. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
199. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
200. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
201. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்

| | | |
|---|---|---|
| 202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. | பேரூர் |
| 203. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 204. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 205. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 206. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 208. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 209. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 210. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 211. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 213. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 214. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 215. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 216. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-1 |
| 217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 218. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 219. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 220. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 221. வைதியலிங்கம், திரு. மீ. அ. | .. | தாம்பரம் |
| 222. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 223. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 225. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 226. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 227. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |
| 228. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 229. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 230. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |
| 233. (வெற்றிடம்) | .. | சைதாப்பேட்டை |
| 234. (வெற்றிடம்) | .. | வாணியம்பாடி |
| 235. (வெற்றிடம்) | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | தலைமை வழக்கறிஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 25, விசு-திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 ஏப்ரல் 8, திங்கட்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்*
*பெருமையின் பீடுடையது இல்"*

*உரிய கடமையைச் செய்வதில் சோர்வு காணாமல் முயற்சிகளை மேற்கொள்பவருடைய பெருமைக்கு மேலாக வேறொரு பெருமை கிடையாது.*

### 1. வினாக்கள்-விடைகள்

**உடுக்குறியிடாத வினாக்கள்@**

**(ஐந்தாவது பட்டியல்)**

**சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்**

**வினா 9463—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்ராம்பள்ளியிலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

---

*@விடைகள், அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளவாறு அமைந்தனவாகும்.*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர்:**

*(அ)* சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு, ஆவணங்கள் பாதுகாப்பு, ஆவணங்கள் ஆண்டு பதிவு, மேற்படி சார்பதிவகத்தில் பெறப்படும் ஆண்டு வருமானம், கட்டடம் கட்டத் தேவையான இடவசதி, பொதுமக்கள் வசதி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அரசின் நிதிநிலைக்கேற்ப சொந்தக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. அரசின் தற்போதைய நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, வேலூர் பதிவு மாவட்டத்தைச் சேர்ந்த நாட்றாம்பள்ளி சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு, தற்போதைக்கு அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* எழவில்லை.

2—

### பரிசுச் சீட்டுகள்

**வினா 10476—டாக்டர் சி. விஜயபாஸ்கர் :** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாட்டில் வெளி மாநில பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* 1998 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மத்திய லாட்டரி ஒழுங்குமுறை சட்டம் பிரிவு எண் 5-இன்படியும், உச்சநீதிமன்றம் அந்தச் சட்டத்தின்மீது அளித்த தெளிவுரையின்படியும், வெளி மாநில பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்படுவதற்குத் தடை ஏதும் இல்லை.





3—

### நிலுவைத் தொகை

**வினா 10586—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாட்டில் 1-6-1996 முதல் 31-3-1998 வரை பணி மூப்பு அடிப்படையில் ஓய்வு பெற்றவர்களுக்கு நிறுத்தப்பட்டுள்ள அவர்களுக்குச் சேர வேண்டிய 60% பென்ஷன்-கம்ப்யூடேஷன், மற்ற பணப் பயன்களைத் திரும்ப வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் சட்ட அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மீதமுள்ள 60% நிலுவைத் தொகையினை 2003-2004 நிதியாண்டில் வழங்க அரசு ஏற்கெனவே கொள்கை முடிவு எடுத்துள்ளது. தற்பொழுதுள்ள நிதி நிலையில், நடப்பு நிதியாண்டில் நிலுவைத் தொகையினை வழங்க இயலாது.

4—

### அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி

**வினா 2813—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி இந்த நிதியாண்டில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002 ஆம் கல்வியாண்டில் திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லியில் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி திறக்கக் கருத்துரு

[ 2002 ஏப்ரல் 8

ஏதும் பெறப்படவில்லை. பூவிருந்தவல்லியில் ஏற்கெனவே தனியார் மகளிர் மேல்நிலைப் பள்ளி ஒன்று உள்ளது. பூவிருந்தவல்லியில் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி தொடங்குவது குறித்து, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டு உயர்மட்டக் குழுவால் பரிந்துரைக்கப்படுமானால், அரசின் நிதி நிலைமைக்குட்பட்டு, மகளிர் உயர்நிலைப் பள்ளி அமைக்கக் கருதப்படும்.

5—

## விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

**வினா 3443—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் இளைஞர்களுக்கான ஊரக விளையாட்டுப் போட்டிகள் நடத்த அரசு அனுமதித்த தொகை எவ்வளவு?

(ஆ) இந்தத் தொகையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) 2000-2001ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் இளைஞர்களுக்காக மட்டும் ஊரக விளையாட்டுப் போட்டிகள் நடத்த தனியாக தொகை ஏதும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால், தற்போது வட்டார அளவில் மட்டும் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள், மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்படும் ஊரக விளையாட்டு மையங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் ஆகிய இரு திட்டங்களையும் ஒருங்கிணைத்து 2000-2001ஆம் நிதியாண்டிலிருந்து அனைவரும் பங்கேற்கக்கூடிய விளையாட்டுப் போட்டிகளை வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் செயல்முறைப்படுத்த அரசு முன்னர் ஒதுக்கிய ரூ.12.94 இலட்சத்தினை, ரூ.25 இலட்சமாக உயர்த்தி, 7-7-2000 நாளிட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசாணை நிலை எண் 21-இல் ஆணை வெளியிட்டுள்ளது.



2002 ஏப்ரல் 8 ]

(ஆ) தற்போதைக்கு செயற்குறிப்பு ஏதும் இல்லை.

6—

## மழைநீர் அகற்ற நடவடிக்கை

**வினா 3485—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதியில் காந்தி விளையாட்டரங்கத்தில் மழைக் காலங்களில் மழைநீர் தேங்கி நிற்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் சரி செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு அரங்கில் மழைக் காலங்களில் மழைநீர் தேங்கி நிற்பதை சரி செய்வதற்கு உரிய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் வெகு விரைவில் தொடங்கப்பட உள்ளன. நடப்பாண்டிலேயே இப்பணி மேற்கொள்ளப்படும்.

7—

## ஆசிரியர் நியமித்தல்

**வினா 4149—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒரு வருடமாக காலியாக உள்ள பொருளாதாரம் (Economics) முதுகலை பாடப் பிரிவுக்கு ஆசிரியரை உடனடியாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

ஆம். எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள முதுகலை பொருளாதார ஆசிரியர் பணியிடம், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்படும் நபரைக் கொண்டு நிரப்பப்படும்.

[ 2002 ஏப்ரல் 8

8—

**நூலகத்திற்குக் கட்டட வசதி**

**வினா 5473—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, சத்தியமங்கலம் ஊராட்சி நூலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, சத்தியமங்கலம் ஊராட்சியில் பொது நூலகத் துறையைச் சார்ந்த நூலகமோ, ஊராட்சி மன்ற நூலகமோ ஏதும் இல்லை. எனவே, இங்கு நூலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான வினா எழ வாய்ப்பில்லை.

9—

**மேல்நிலைப் பள்ளியாக மாற்றுதல்**

**வினா 10213—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஒன்றியத்தைச் சேர்ந்த நெமிலிச்சேரி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படத் தொடங்கும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002-ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நெமிலிச்சேரி உயர்நிலைப் பள்ளி குறித்து, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.



2002 ஏப்ரல் 8 ]

10—

**மேல்நிலைப் பள்ளியாக மாற்றுதல்**

**வினா 10384—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், கண்டிரமாணிக்கம் ஊராட்சியில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002-ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. குடவாசல் ஒன்றியம், கண்டிரமாணிக்கம் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளி குறித்து, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

11—

**கோயில் கட்டுதல்**

**வினா 5562—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சஞ்சீவிராயன் கோயில் புதுநகரில் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு அங்கு கோயில் கட்டிக் கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சஞ்சீவிராயன் கோயில் புதுநகரில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்குப் புதிதாகக் கோயில் கட்ட அரசிடம் திட்டம் ஏதுமில்லை. புதிய திருக்கோயில்கள் கட்டிக் கொடுக்க விதிமுறைகளிலும் இடமில்லை.*

**12—**

## கோயில் பராமரிப்பு

**வினா 7395—திருமதி ஆர். சசிகலா:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதியில் உள்ள அனைத்துக் கோயில்களையும் ஆய்வு செய்து நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதியில், குளித்தலை-2 ஆய்வர் பிரிவில், 224 திருக்கோயில்கள் உள்ளன. அவற்றில் 10 திருக்கோயில்கள், ரூ.10000-க்கு மேல் வருமானம் உள்ள, திருச்சி இணை ஆணையர் பிரிவைச் சேர்ந்த திருக்கோயில்களாகும். மேற்படி திருக்கோயில்கள் பத்தும், திருச்சி இணை ஆணையரால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 214 திருக்கோயில்களும், ரூ.10000-க்குக் குறைவான வருமானம் உள்ளவை. இவற்றில் சிறிய திருக்கோயில்களும் அடங்கும். மேற்படி 214 திருக்கோயில்களும் குளித்தலை பிரிவு ஆய்வரால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வு அறிக்கைகளின் நகல்கள் தனித்தனியாக திருக்கோயில் நிர்வாகிகளுக்கு அனுப்பப்பட்டு, சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை உடன் நிவர்த்தி செய்து, ஒரு மாதத்திற்குள் அறிக்கை*





*அனுப்பிட உரிய அறிவுரைகள் உதவி ஆணையரால் வழங்கப்பட்டுள்ளன. கிருஷ்ணராயபுரம் தொகுதியில் ரூ.2000-க்குக் கீழ் வருமானம் உள்ள கோயில்கள் 87-ம், ரூ.2000-க்கு மேல் ரூ.5000-க்குள் வருமானம் உள்ள கோயில்கள் 118-ம், ரூ.5000-க்கு மேல் ரூ.10000-க்குள் வருமானம் பெறும் கோயில்கள் 9-ம், ரூ.10000-க்கு மேல் வருமானம் பெறுபவை 10-ம் உள்ளன. ரூ.2000-க்கும் கீழ் வருமானமுள்ள கோயில்கள் பெரும்பாலானவற்றில் வரவு-செலவுக் கணக்குகள் பேணப்படாமல் உள்ளதால், வரவு-செலவுக் கணக்குகள் பேணவும், ஆதாரப் பதிவேடுகள் பேணவும், ரூ.2000-க்கு மேல் ரூ.10000-க்குள் வருமானம் பெறும் திருக்கோயில்களுக்கு ஆதாரப் பதிவேடுகள் பேணப்பட வேண்டுமெனவும், திருப்பணி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும், ஆய்வறிக்கைகளில் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு, சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் நிர்வாகிகள் அறங்காவலர் குழு எடுக்கும் தொடர் நடவடிக்கை, உதவி ஆணையரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.*

**13—**

## மின் அதிர்வு சிகிச்சை

**வினா 8225—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தனியார் மன நோயாளி காப்பகத்தில் மன நோயாளிகளுக்கு அதிக அளவு மின்சார ஷாக் அளிக்கப்படுவது உண்மையா?*

*(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மின் அதிர்வு சிகிச்சை* shock treatment *ஒரு சில வகையான மன நோய்களுக்குத் தரவேண்டிய அத்தியாவசியமான சிகிச்சை முறை ஆகும். மன நோயாளியின் மனநோய் மற்றும் உடல் ஆரோக்கியத்தைப் பொறுத்து மனநல மருத்துவர் இந்த மின் அதிர்வு சிகிச்சையை அளிக்கலாமா என்று தீர்மானிப்பார்.*

(ஆ) தனியார் மனநலக் காப்பகத்தில் அதிக அளவு ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுக்கப்படுகிறது என்று எந்த நபரிடமிருந்தும் தகவல் பெறப்படவில்லை.

**14—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா 14112—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே கடையம், கோவிலூத்து ஆகிய இரண்டு இடங்களில் செயல்படுகின்றன. எனவே இவ்வூராட்சி ஒன்றியத்தில், மேலும் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**15—**

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா 1177—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி 7-வது வார்டு மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம் தெருவில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சி 7-ஆவது வார்டு மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகம் தெருவில் தார்ச் சாலை வசதி செய்ய ரூ.20.00 இலட்சம் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் இப்பணியை எடுத்துச்செய்ய இயலவில்லை.

**16—**

## குடிநீர் விநியோகம்

**வினா 3454—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி, இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் நீரேற்றும் நிலைய ஊழியர்கள் கவனக் குறைவால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் எடப்பாடி இராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் எடப்பாடி, இராசிபுர நகராட்சிகள், ஒன்பது பேரூராட்சிகள் மற்றும் வழியோர கிராமங்களுக்கு சோதனை ஓட்டத்திலுள்ள குடியிருப்புகளுக்கும் சேர்த்து, தற்போத சராசரியாக நாளொன்றுக்கு 156 இலட்சம் லிட்டர்கள் குடிநீ வழங்கப்பட்டு வருகிறது. ஆறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நீரேற்று நிலையங்களில் 24 மணி நேரமும் தொடர்ந்து பம்பிங் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் சென்ற ஆண்டு வாரியப் பராமரிப்பிற் எடுத்துக்கொள்ளப்பட்டதால், வாரிய ஊழியர்களும் மற்றும் ஒப்பந் ஊழியர்களும் ஈடுபடுத்தப் பட்டுள்ளார்கள். அவர்கள் தம் பணிகளை முறையே மேற்கொள்கின்றார்கள். இதை வாரிய அதிகா மேற்பார்வையிட்டு கவனித்து வருகிறார். நீரேற்று நிலைய ஊழியர்களு மிகவும் பொறுப்புடன் பணிகளை கவனித்து வருகிறார்கள். மேலும், கடந் 30-7-2001 முதல் 1-08-2001 முடிய 3 நாட்கள் மட்டும் பிரதான குழாயி பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டதற்காக குடிநீர் விநியோக நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது இத்திட்டத்தின் அனைத்து உள்ளாட்

[ 2002 ஏப்ரல் 8

அமைப்புகளுக்கும் தேவையான குடிநீர், வழக்கம்போல் வழங்கப்பட்டு வருகிறது. அடிக்கடி ஏற்படும் மின்சாரத் தடையினால் மட்டும் அவ்வப்போது மின் மோட்டார்கள் இயக்கம் பாதிக்கப்படுகிறது.

17—

## நிழற்கூடம் அமைத்தல்

**வினா 3774—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், ஜெகதளா பேரூராட்சி, அருவங்காடு பிரதான சாலையில் பயணிகள் நிழற்கூடம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், ஜெகதளா பேரூராட்சி, அருவங்காடு பிரதான சாலையில் பயணிகள் நிழற்கூடம் அமைக்கப்படும்.

(ஆ) நீலகிரி மாவட்டம், ஜெகதளா பேரூராட்சி அருவங்காடு பிரதான நெடுஞ்சாலையின் ஓரத்தில் பயணிகள் நிழற்கூடம் 2001-2002-ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டின்கீழ் அமைக்க ஜெகதளா பேரூராட்சியில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

18—

## குடிநீர் வசதி

**வினா 4064—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. புதூர் ஊராட்சி, ராவுத்தக்காட்டில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?



2002 ஏப்ரல் 8 ]

(ஆ) ஆம் எனில், அப்பகுதிக்குக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. புதூர் ஊராட்சி, ராவுத்தக்காடு குடியிருப்பில் கையிறைப்பான் கொண்ட ஆழ்துளைக் கிணற்றில் நீராதாரம் குறைந்துள்ளதால் தற்பொழுது குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இக்குடியிருப்பில் உள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்கும்பொருட்டு காவிரி ஆற்று நீரை நீராதாரமாகக் கொண்ட இருப்பாளி பெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 175 வழியோரக் குடியிருப்புகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டத்தில் இக்குடியிருப்பு சேர்க்கப்பட்டு பணிகள் உடன் தொடங்கப்படவுள்ளன. மேலும் இத்திட்டப் பணிகளை 12-12-2002-க்குள் முடிக்க இலக்கிடப்பட்டுள்ளது.

19—

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா 4162—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்குட்பட்ட வெள்ளார் நாயக்கன்பாளையம் நகராட்சி தொடக்கப் பள்ளி முன்புள்ள ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி, நகராட்சிக்குட்பட்ட வெள்ளார் நாயக்கன்பாளையத்திலுள்ள நகராட்சி தொடக்கப் பள்ளி முன்புள்ள பெட்டிக்கடை ஆக்கிரமிப்பு, 30-10-2001 அன்று அகற்றப்பட்டது.

20—

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா 4395—திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[ 2002 ஏப்ரல் 8

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், பெரிய வாளவாடி I-வது வார்டு, சுண்ணாம்புக் கால்வாய் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பெரியவாளவாடி ஊராட்சியிலுள்ள பெரிய வாளவாடி குடியிருப்பின் ஒரு பகுதியே பெரிய வாளவாடி I-வது வார்டு ஆகும். தற்போது இக்குடியிருப்புக்கு பெரிய வாளவாடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் அத்தியாவசிய தேவைக்கான குடிநீர் போதுமான அளவு வழங்கப்படுவதால், புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**21—**

## திரைப்படமாக்குதல்

**வினா 14819—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுத்துத் திரையிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

திருவள்ளுவர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.



2002 ஏப்ரல் 8 ]

**22—**

## சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சலுகை

**வினா 7774—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 2000-2001 ஆம் நிதியாண்டில் தமிழக அரசு தமிழ்நாடு முழுமையிலுமுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கியுள்ள சலுகைக்கான நிதி ஒதுக்கம் எவ்வளவு?

(ஆ) அதில் அவ்வாண்டு செலவழிக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பது அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைத் துறை திட்டங்கள் அனைத்தும் தமிழ்நாடு முழுவதும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்காகவே வழங்கப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டு மாநில அரசு, திட்டங்களுக்காக ஒதுக்கிய நிதி ரூ.5991.58 இலட்சங்கள். இதில் 100% சாதனை அடையப்பட்டு, ரூ.5991.63 இலட்சங்கள் சிறு மற்றும் குறு விவசாயிகளின் திட்டங்களில் செலவிடப்பட்டன.

**23—**

## பருத்தி உற்பத்தி

**வினா 8271அ—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நடப்பாண்டில் பருத்தி எத்தனை ஏக்கரில் பயிர் செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் நடப்பு ஆண்டில், 22-10-2001 முடிய சுமார் 82,000 எக்டரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது (2,02,540 ஏக்கர்).

கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர்த்து, இதர அனைத்து மாவட்டங்களிலும், பருத்தி சாகுபடியாகிறது. நடப்பு ஆண்டிற்கான பருத்தி பரப்பு குறியீடு 3.00 இலட்சம் எக்டர் ஆகும். இதற்கான உற்பத்திக் குறியீடு 6.50 இலட்சம் பேல்கள் பஞ்சு ஆகும். கடந்த ஆண்டில் (22-10-2000) இதே தருணத்தில் 1.00 இலட்சம் எக்டரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஆண்டு மார்ச் முடிய (2000-2001) 1.94 இலட்சம் எக்டரில் பருத்திச் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

**24—**

### நடமாடும் மண் பரிசோதனைக் கூடம்

**வினா 11378—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற விவசாயிகளின் நலனைக் கருதி, நடமாடும் மண் பரிசோதனைக் கூடம் அமைக்க அரசிடம் செயல்திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிராமப்புற விவசாயிகளின் நலனை முன்னிட்டு, தமிழ்நாட்டில் 16 நடமாடும் மண் பரிசோதனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மாதமும் தீர்மானிக்கப்படும் முன் பயணத் திட்டத்திற்கு ஏற்ப, குறிப்பிட்ட கிராமங்களுக்கு நடமாடும் மண் பரிசோதனைக்கூட ஊர்தி சென்று, பெறப்படும் மண் மாதிரிகளை, அவ்விடத்திலேயே பகுப்பாய்வு செய்து, முடிவுகளையும், அவற்றிற்கான பரிந்துரைகளையும் வழங்குகின்றன. கிராமப்புறங்களுக்கே நேரில் சென்று விவசாயிகளுக்கு அங்கேயே மண் பரிசோதனை சேவை செய்து, மண் ஆய்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், மண் வளத்தைக் காப்பதற்கான தொழில்நுட்பங்களையும் வேளாண் பெருமக்களுக்கு எடுத்துரைக்கின்றன.



அவற்றின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நடமாடும் மண் பரிசோதனைக் கூடத்தின் தலைமையிடம் | சேவை அளிக்கும் மாவட்டங்கள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், திருவள்ளூர் |
| 2 | கடலூர் | கடலூர், விழுப்புரம் |
| 3 | மேலாலத்தூர் (குடியாத்தம்) | வேலூர், திருவண்ணாமலை |
| 4 | தருமபுரி | தருமபுரி |
| 5 | சேலம் | சேலம், நாமக்கல், ஈரோடு |
| 6 | ஈரோடு | ஈரோடு |
| 7 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 8 | உதகமண்டலம் | நீலகிரி |
| 9 | ஆடுதுறை | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் |
| 10 | குடுமியான்மலை | புதுக்கோட்டை |
| 11 | திருச்சி | திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர். |
| 12 | மதுரை | மதுரை, திண்டுக்கல், தேனி |
| 13 | பரமகுடி | இராமநாதபுரம், சிவகங்கை |
| 14 | அருப்புக்கோட்டை | விருதுநகர் |
| 15 | கோவில்பட்டி | தூத்துக்குடி, திருநெல்வேலி |
| 16 | நாகர்கோவில் | கன்னியாகுமரி |

ஏற்கெனவே போதுமான அளவில் நடமாடும் மண் பரிசோதனைக் கூடங்கள் செயல்பட்டு வருவதால், புதிதாக அமைப்பதற்கான திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

**25—**

**சொட்டு நீர்ப்பாசனம்**

**வினா 11407—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சொட்டு நீர்ப் பாசனத்திற்காக எவ்வளவு பேர் மனு செய்து இருந்தார்கள்?

(ஆ) அவர்களில் எவ்வளவு நபருக்கு சொட்டு நீர்ப்பாசன அனுமதி வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 2000-2001 ஆம் ஆண்டில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க மனு செய்திருந்தோர் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| தென்னைக்கு | .. | 2,594 மனுதாரர்கள் |
| தோட்டக்கலைப் பயிர்களுக்கு | .. | 2,623 மனுதாரர்கள் |
| மொத்தம் | .. | 5,217 மனுதாரர்கள் |

(ஆ) சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க மனு செய்திருந்த 5,217 நபர்களில் 4,338 மனுதாரர்கள் மட்டும் தங்களது பங்கினைச் செலுத்தி இத்திட்டத்தில் பங்கேற்க தயார் நிலையில் இருந்ததால் அவர்களுக்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைத்துத் தரப்பட்டது. மீதமுள்ள விண்ணப்பங்களை இவ்வாண்டு 2001-2002-ல் முன்னுரிமையின் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் பங்குத் தொகையினைச் செலுத்த முன்வந்தால் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து பயனடையும் வகையில் தர மாவட்ட அலுவலர்களுக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**26—**

**மரவள்ளிக் கிழங்கின் அளவு**

**வினா 11422—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியத்தில் மரவள்ளிக் கிழங்கு எவ்வளவு ஏக்கரில் பயிரிடப்படுகிறது?



(ஆ) அப்படிப் பயிரிடப்படும் மொத்த மரவள்ளிக் கிழங்கின் அளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியத்தில் 1,875 ஏக்கர் பரப்பளவில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படுகிறது.

(ஆ) மரவள்ளிக் கிழங்கின் மொத்த மகசூல் அளவு சுமார் 16875 மெட்ரிக் டன் ஆகும்.

**27—**

**மரவள்ளிக் கிழங்கு**

**வினா 11423—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்தில் மரவள்ளிக் கிழங்கு எவ்வளவு ஏக்கரில் பயிரிடப்படுகிறது?

(ஆ) அப்படிப் பயிரிடப்படும் மொத்த மரவள்ளிக் கிழங்கின் அளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்தில் மரவள்ளிக் கிழங்கு 50 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது.

(ஆ) மரவள்ளிக் கிழங்கின் மொத்த மகசூல் அளவு சுமார் 450 மெட்ரிக் டன் ஆகும்.

**28—**

**விவசாயிகளுக்குக் கருவிகள்**

**வினா 13612—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் விவசாயிகளுக்கு மருந்து தெளிக்கும் கருவி, மண்வெட்டி, கடப்பாரை ஆகியவற்றைக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய-மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டங்களான எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம், தேசிய பயறு பெருக்குத் திட்டம் மற்றும் பருத்தி தொழில் நுட்பவியல்-சிறுகுழுத் திட்டம்- ஆகியவற்றின் கீழ் மருந்து தெளிக்கும் கருவி, மானிய விலையில் 2001-2002 ஆம் ஆண்டில் வழங்கப்படுகிறது. அதன் விவரம் வருமாறு:

1. எண்ணெய் உற்பத்தி திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.12.00 இலட்சம் மானிய ஒதுக்கீட்டில் 857 எண்கள் மருந்து தெளிக்கும் கருவிகள் விவசாயிகளுக்கு 50 சதம் மானியத்தில் விசைத் தெளிப்பான் ஒன்றுக்கு மானியம் ரூ.2,000/-க்கு மிகாமலும், கைத் தெளிப்பான் ஒன்றுக்கு ரூ.800-க்கு மிகாமலும் வழங்கப்படுகிறது.

2. தேசிய பயறு பெருக்குத் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ5.00 இலட்சம் மானியத்தில் 200 எண்கள் விசைத் தெளிப்பான்களும் 220 எண்கள் கைத் தெளிப்பான்களும் வழங்கப்படுகின்றன. கைத்தெளிப்பான் ஒன்றிற்கு 50 சதம் மானிய விலையில் ரூ.800/-க்கு மிகாமலும், விசைத் தெளிப்பான் ஒன்றிற்கு 50 சதம் மானிய விலையில் ரூ.2,000/-க்கு மிகாமலும் வழங்கப்படுகிறது.

3. பருத்தி தொழில் நுட்பவியல் சிறுகுழுத் திட்டம் 2-ன்கீழ் மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு ரூ.700/- ஒன்றுக்கு என மானிய விலையில் 500 எண்கள் கைத்தெளிப்பான்களும் (ரூ3.50 இலட்சம் மொத்த அளவில்) ரூ.1,500/-ஒன்றுக்கு என மானிய விலையில் 500 எண்கள் விசைத் தெளிப்பான்களும் (மொத்தம் ரூ.7.50 இலட்சம் மானியத்தில்) 2001-2002ல் வழங்கப்படுகிறது.

**29—**

## மானிய விலையில் விதைகள்

**வினா 13614—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) மணிலா, நெல் ஆகியவற்றை மானிய விலையில் உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மணிலா மற்றும் நெல் விதைகள் வேளாண்மைத் துறை விரிவாக்க மையங்களின் மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

(ஆ) மணிலா விதைகள் மானிய விலையில் மத்திய மாநில அரசுத் திட்டமான எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன. 2001-2002ஆம் ஆண்டு மணிலா சான்று விதைகளுக்கு விநியோக மானியமாக கிலோவிற்கு ரூ. 8 அல்லது விதை விலையில் 30 சதவீதம் இதில் எது குறைவோ அது வழங்கப்படுகிறது. மணிலா சான்று விதைகள் மானியத்தில் விநியோகிக்க ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மணிலா ஆதார விதை மற்றும் சான்று விதை கொள்முதலுக்கு கிலோவிற்கு ரூ5/-வீதம் மானியம் வழங்கப்படுகிறது. விதை கொள்முதல் மானியம் வழங்க ரூ.72 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. சான்றளிக்கப்பட்ட நெல் விதைகள் மத்திய அரசுத் திட்டமான தானிய உற்பத்தித் திட்டத்தின்கீழ் கிலோ ஒன்றிற்கு ரூ.2 (ரூபாய் இரண்டு) வீதம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் இந்த வருடத்திற்காக (2001-2002) ரூ.230 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**30—**

## பயிற்சி நிலையம்

**வினா 13690—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் விவசாயிகளுக்கு பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

[ 2002 ஏப்ரல் 8

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் விவசாயிகளுக்கு பயிற்சி நிலையம் புதியதாக தொடங்க அரசிடம் கருத்துரு எதுவும் இல்லை.

*(ஆ)* கேள்வி எழவில்லை.

**31—**

**பழுது பார்த்தல்**

**வினா 14170—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற் குட்பட்ட பகுதியிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சம்பந்தப்பட்ட வேளாண்மை இணை இயக்குநரிடமிருந்து வேளாண்மை விரிவாக்க மையத்தில் பழுது குறித்து திட்ட மதிப்பீடு வரப்பெற்றால் பரிசீலிக்கப்படும். சம்பந்தப்பட்ட வேளாண்மை இணை இயக்குநரிடமிருந்து வரப்பெறும் திட்ட மதிப்பீடு குறித்த முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பி நிதி ஒதுக்கீடு பெற்ற பின்னர் வேளாண்மை விரிவாக்க மைய பழுதுகள் சரி செய்ய தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**32—**

**மர அட்டகங்கள்**

**வினா 14189—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 8 ]

*(அ)* சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி, வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு மர அட்டகங்கள் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கடையம் ஊராட்சி பகுதியிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு மர அட்டகங்கள் வழங்க அரசு ஆவன செய்யும். வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு மர அட்டகங்கள் வழங்குவது குறித்து இந்நிதியாண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மர அட்டகங்கள் வழங்கும் பட்சத்தில் தேவையின் அடிப்படையில் கடையம் பகுதியிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கும் மர அட்டகங்கள் வழங்க சம்பந்தப்பட்ட வேளாண்மை இணை இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கப்படும்.

**33—**

**நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

**வினா 14201—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உற்பத்தியை நிலை நிறுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட் பட்ட பகுதியில் தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

34—

**குழாய்க் கிணறு திட்டம்**

**வினா 4202—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு குழாய்க் கிணறு திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு புதிய குழாய்க் கிணறு அமைக்கவும், வறண்டுபோன கிணறுகளில் பக்கவாட்டில் துளையிடவும், ஆழப்படுத்தவும் அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குழாய்க் கிணறு திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு புதிய குழாய்க் கிணறு அமைக்கவும், வறண்டுபோன கிணறுகளில் பக்கவாட்டில் துளையிடவும், ஆழப்படுத்தவும் தேவையான கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. கடையம் ஊராட்சி ஒன்றிய விவசாயிகள் தங்களுக்குத் தேவையான இயந்திரங்களை சேரன்மகாதேவியில் உள்ள உதவி செயற் பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தை அணுகி வாடகைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

35—

**கோகோ அபிவிருத்தித் திட்டம்**

**வினா 14204—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றிய கோகோ அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோகோ நடவு செடிகளை மானிய விலையில் விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?





விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது, கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டுமே ஒருங்கிணைந்த கோகோ அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கோகோ நடவுப்பொருட்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு தென்னந்தோப்புகளில் ஊடு பயிராக கோகோ சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியத்தில் கோகோ அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோகோ நடவு செடிகளை மானிய விலையில் விநியோகிக்க கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் விவசாயிகள் இத்திட்டத்தை ஏற்க முன்வந்தால் 2002-2003-ல் இப்பகுதியில் நடைமுறைப்படுத்துதல் குறித்து பரிசீலிக்கப்படும்.

36—

**காளான் சாகுபடி**

**வினா 14205—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, காளான் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் காளான் சாகுபடி குறித்த பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம் உட்பட்ட திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பெருமக்களுக்கு, காளான் சாகுபடி தொடர்பாக, பயிற்சி பெறுவதற்கு, ஒவ்வொரு மாதமும், கிள்ளிகுளம், வேளாண்மைக் கல்லூரியில் காளான் சாகுபடி தொடர்பான பயிற்சி

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைப் பொறியியல் துறையில் நான்கு நெல் அறுவடை இயந்திரங்கள் உள்ளன. அவை முறையே மதுரை, திருச்சி, பொன்னேரி மற்றும் ஈரோடு ஆகிய வேளாண்மைப் பொறியியல் துறையின் உபகோட்ட அலுவலகங்களின் மூலம் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. ஒரு மணி நேரத்திற்கு ரூ.1,100 என வாடகைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. போக்குவரத்துச் செலவு அரசால் மேற்கொள்ளப்படுவதுடன் நிலத்தில் பணிபுரியும் நேரத்திற்கு மட்டுமே வாடகை வசூலிக்கப்படுகிறது.

40—

### உரப் பரிசோதனை நிலையம்

**வினா 15252—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் உரப் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் உரப் பரிசோதனை நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. இந்த உரப் பரிசோதனை நிலையம் சேரன்மகாதேவி மற்றும் பத்தமடை பேரூராட்சிகளை உள்ளடக்கி செயல்பட்டு வருவதால், பத்தமடை பேரூராட்சிக்கென தனியே ஓர் உரப் பரிசோதனை நிலையம் அமைப்பதற்கான திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.



41—

### சிசு கொலை வழக்கு

**வினா 1349—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் பெண் சிசு கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் பெண் சிசு கொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் 18 பேர்.

(ஆ) அவர்கள் அனைவரின்மீதும் நீதிமன்றத்தின் மூலமாக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

42—

### மறுவாழ்வு அளித்தல்

**வினா 3435—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் பிச்சை எடுக்கும் பழக்கத்திலிருந்து விடுவித்த சிறார்கள் எத்தனை பேருக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் அரசு உதவியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சிறார் பிச்சை எடுத்தலை தடுத்தல் / ஒழிப்புத் திட்டம் சென்னையிலுள்ள இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தினால் (ICCW) செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2000-2001ஆம் நிதியாண்டில் 147 சிறுவர்கள் முறைசாராக் கல்வி கற்றுள்ளனர்.

53 சிறுவர்கள் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 200 சிறுவர்களுக்கு உடல்நலப் பாதுகாப்பு (Health Care) வழங்கப்பட்டுள்ளது. இது தவிர பொது மக்களுக்கு பிச்சை எடுத்தலின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு முகாம்களும், பேரணிகளும் நடத்தப்பட்டுள்ளன. இதுபோன்ற சிறுவர்களின் தாய்மார்களுக்கு அடிக்கடி கூட்டங்கள் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகின்றன. இக்கூட்டங்களில் உடல்நலக்கேடுகள் குறித்தும், கல்வியின் அவசியத்தை குறித்தும், வருவாய் ஈட்ட மாற்றுத் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்படுகிறது.

**43—**

**புதிய வாகனம்**

**வினா 8860—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தாட்கோ அலுவலகத்திற்கு ஒரு புதிய வாகனம் வாங்கிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்ட தாட்கோ மேலாளர் அலுவலகத்திற்கு 1-10-1999-ல் வாகனம் (ஈப்பு) ஒன்று (பதிவு எண்.டி. என்.ஓ. 2எப் 3017) வாங்கி தரப்பட்டு தற்போது அந்த அலுவலகத்தின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**44—**

**கால்நடை மருத்துவமனைக் கட்டடம்**

**வினா 7074—திரு. மா. ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை எலையமுத்தூரில் கால்நடை மருத்துவமனைக்கு கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்ச**

(அ) உடுமலைப்பேட்டை எலையமுத்தூரில் கால்நடை மருத்துவமனைக்கு கட்டடம் கட்ட தற்போது செயற்குறிப்பு ஏது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**45—**

**நகரப் பேருந்துகள்**

**வினா 5407—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே ஆண்டியூர் ஆதிதிராவிட காலனியான காந்தி நகரில் நகரப் பேருந்து நின்று போக அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை அருகே உள்ள ஆண்டியூர் ஆதிதிராவிடர் காலனி, காந்தி நகர் அருகில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயமுத்தூர், நகரப் பேருந்துகள் நின்று செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 22-7-2001 முதல் நின்று செல்கின்றன

**46—**

**பேருந்துகள் இயக்குதல்**

**வினா 6479—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 ஏப்ரல் 8

பள்ளிக் குழந்தைகள், பெண்களுக்கென அனைத்துப் பகுதிகளிலும் தனியாகப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பள்ளிக் குழந்தைகள் மற்றும் மகளிருக்கு வசதியாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் இயக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள் போன்ற முக்கிய இடங்களுக்கு, "சிறுவர்-மகளிர்"களுக்கான சிறப்புப் பேருந்துகள் பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்படுகின்றன. இத்தகைய பேருந்துகள் முக்கியமான வழித்தடங்களில் காலை/மாலை இருவேளைகளிலும் இயக்கப்படுகின்றன. பள்ளிக் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் என தனியாக அனைத்துப் பகுதிகளிலும் எல்லா நேரங்களிலும் பேருந்துகள் இயக்கத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

47—

**பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா 7582—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வக்கோட்டை பருக்கை விடுதி, தீராத்தூர் வழியாக பட்டுக்கோட்டை சென்று கொண்டிருந்த பேருந்து நிறுத்தப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் இயக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டை, பட்டுக்கோட்டை (வழி) பருக்கை விடுதி, தீராத்தூர், மூவர் ரோடு வழித்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்தில் பயணிகள் அடர்வு மிகக் குறைவாக இருந்தது. எனவே அவ்வழித்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்து நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும்



2002 ஏப்ரல் 8]

இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், இவ்வழித்தடத்தில் பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது. கோரிக்கை வழித்தடத்தில் உள்ள ஊர்களில் வாழும் மக்கள் அப்பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

48—

**பேருந்துகளை சரியாக இயக்குதல்**

**வினா 10990—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், அன்னியூர் ஊராட்சியில் இயங்கும் தடம் 22 மற்றும் 58 ஆகிய பேருந்துகளை சரியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழக நகரத் தடம் எண் 22 கும்பகோணம் வடமட்டம் (வழி) எஸ். புதூர் வழித்தடத்தில் தினசரி 16 நடைகளும், அதேபோல் நகரத்தடம் எண் 58 கும்பகோணம்-வடமட்டம் (வழி) முருகன்குடி தடத்தில் தினசரி 11 நடைகளும், தொடர்ந்து நடை குறைப்பின்றி நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணைப்படி இயக்கப்பட்டு வருகின்றன.

49—

**பேருந்து இயக்குதல்**

**வினா 9145—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், சிலுப்பனூர் கிராமத்திற்கு அரியலூர்-பெண்ணாடம் (மருங்கூர்) வழியாக பேருந்து சரிவர இயங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2002 ஏப்ரல் 8

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 1990 ஆம் வருடம் திருச்சி விழுப்புரம் அகல இரயில் பாதை திட்ட வேலைகள் தொடங்கப்பட்டபோது, அரியலூர் முதல் விருத்தாசலம் வரையிலான இடைப்பட்ட பகுதி மக்களுக்கு இரயில் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டதின் காரணமாக, தற்காலிகமாக, அரியலூரில் இருந்து, பெண்ணாடத்திற்கு செந்துறை-பெரியாக்குறிச்சி, ஆர்.எஸ்.மாத்தூர், தாமரைப்பூண்டி, சிலுப்பனூர் கிராஸ் வழியாக ஒரு புறநகர் பேருந்து இயக்கப்பட்டது. அகல ரயில்பாதையாக மாற்றம் செய்யப்பட்டு, மீண்டும் ரயில் போக்குவரத்து ஆரம்பித்தபின் தற்காலிகமாக இயங்கிய பேருந்து நிறுத்தம் செய்யப் பட்டது. மேலும், இப்பேருந்து மருங்கூர் வழியாக இயக்கப்படவில்லை. தற்போது ஜெயங்கொண்டத்தில் இருந்து, பெண்ணாடத்திற்கு மருங்கூர், சிலுப்பானூர் கிராஸ் வழியாக ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.*

**50—**

### பேருந்து நிறுத்துதல்

**வினா 8897—திரு. கி. பாரிமோகன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், என்.எச் 7 வெள்ளைக்கல்-குறிஞ்சி நகர் இடையில் உள்ள அண்ணாநகருக்கு நகரப் பேருந்து நிறுத்தம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், என்.எச் 7 வெள்ளைக்கல், குறிஞ்சி நகர் இடையில் உள்ள அண்ணாநகரில் கடந்த 15-9-2001 முதல், தருமபுரியிலிருந்து தொப்பூர் வழித்தடத்தில் இயங்கும் தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகளில் நிறுத்தம் அளிக்கப்பட்டுள்ளது.*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் முனைவர் க. நாகராஜன் அவர்கள் 28-3-2002 அன்று மறைவுற்றதாக வரப்பெற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். முனைவர் க. நாகராஜன் அவர்கள் 1971-76 ஆம் ஆண்டுகளில் வட மதுரை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். முன்னாள் உறுப்பினரின் மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல், 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. தகவல் கோரல்

### சென்னை, வடபழனி பகுதியில் சுமதி என்பவர் படுகொலை

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களுக்கு முன்னாலே சென்னை நகரத்திலே அனைவரையும் கலக்கத்திற்கு உள்ளாக்கக்கூடிய வகையில் கோடம்பாக்கம் பகுதியிலே சுமதி என்பவர் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி வந்தது. அதற்குப்பிறகு, பலதரப்பட்ட செய்திகள் வந்திருக்கின்றன. இன்றையதினம் துப்பு துலக்குவதிலே முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. எந்த அளவிற்கு அந்தக் கொலையில் அல்லது மரணத்தில் துப்புகள் துலக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவை உறுப்பினர்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2-4-2002 அன்று சென்னை வடபழனியிலுள்ள அழகர் பெருமாள் கோவில் தெருவில் வசித்து வந்த சுமதி என்ற 28 வயது பெண்மணி கொலை செய்யப்பட்டு இறந்து போனது சம்பந்தமான விவரங்களை இந்த அவையில் நான் ஏற்கெனவே தெரிவித்து, இதுகுறித்து பல கோணங்களில் விசாரணை முடுக்கி விடப்பட்டு இருந்தது. சென்னை மாநகர காவல் துறையினரும் மற்றும் இதர மூத்த காவல் துறை அலுவலர்களும் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, இந்த வழக்கின் குற்றவாளிகளை விரைந்து பிடிப்பதற்கு தியாகராய நகர் துணை





ஆணையாளர் நேரடி மேற்பார்வையில், நான்கு உதவி ஆணையாளர்கள் தலைமையில் ஒன்பது தனிப்படை அலுவலர்கள் விசாரணை மேற்கொண்டு வந்தனர். சுமதியுடன் பணிபுரிந்த அலுவலர்கள், அவரது முன்னாள் கணவர் மற்றும் உறவினர்கள் ஆகியோரிடம் விசாரணை செய்யப்பட்டது. விசாரணையின்போது சுமதியுடன் பணிபுரிந்த முனியசாமி என்பவர் 2-4-2002 அன்று காலை 10-00 மணியளவில் சுமதியின் வீட்டிற்கு வந்து சுமதியின் வீட்டிற்கு அருகில் வசித்து வந்த, பெண்ணிடம் சுமதியின் வீடு பூட்டியிருக்கிறது, சுமதி இல்லையா என்று கேட்ட விவரம் விசாரணையில் தெரியவந்தது.

*முற்பகல் 10-05*

பின்னர் அவர் சுமதியின் தாயார் பத்மாவை பள்ளியில் சென்று பார்க்கப்போவதாகக் கூறிச் சென்றுள்ளார். ஆனால் உண்மையில் திருமதி பத்மாவை பார்க்கவில்லை என்பது விசாரணையில் தெரியவந்தது. இது பற்றி மேலும் விசாரிக்க முனியசாமியை தனிப்படை தேடிக்கொண்டிருந்த போது, அவர் தலைமறைவாகிவிட்டார். தனிப்படையினர் தீவிரமாக விசாரணை செய்து, முனியசாமியை 7-4-2002 அன்று கைது செய்து விசாரணை செய்தபோது, அவர் தான் குற்றத்தைச் செய்ததாக ஒப்புக்கொண்டு, ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அவர் தனது வாக்குமூலத்தில் 2-4-2002 அன்று காலை சுமார் 9-00 மணியளவில் சுமதி தனக்கு 500 ரூபாய் பணம் தருவதாகக் கூறியிருந்ததாகவும், அதனைப் பெற்றுக்கொள்ள சுமதியின் வீட்டிற்கு வந்ததாகவும் தெரிவித்துள்ளார். பின்னர் சுமதிக்கு மூச்சுத் திணறல் ஏற்படுத்தி ஆதாயத்திற்காக கொலை செய்ததாகவும், பிறகு பீரோவைத் திறந்து ரொக்கம் 10,000 ரூபாய், பட்டுச்சேலை மற்றும் சுமதி அணிந்திருந்த நகைகளை எடுத்துக்கொண்டு, சுமதி பிழைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக பாலித்தீன் பையினால் முகத்தை மூடி, டேப்-ரெக்கார்டர் ஒயர் ஒன்றைக் கழுத்தில் சுற்றிவிட்டுச் சென்றுவிட்டதாகக் கூறியுள்ளார்.

கொலையாளி முனியசாமியின் வாக்குமூலத்தின்படி, கொள்ளையடிக்கப்பட்ட நகைகள், பட்டுச்சேலை, ரொக்கம் 10,000 ரூபாய், சம்பவத்திற்காகப் பயன்படுத்திய இருசக்கர வாகனம் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளியை அடையாளம் கண்டு, விரைவில் கைது செய்து நடவடிக்கை எடுத்த காவல் துறை அலுவலர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 8

அனைத்துக் குற்ற நிகழ்வுகளிலும், விரைந்து, துரிதமாகச் செயல்பட்டு குற்றவாளிகளைக் கைது செய்ய உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று காவல் துறை அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

## 5. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதமும், பதிலுரையும். மாண்புமிகு திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களின் பேச்சின் தொடர்ச்சி.*

***திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்து, பெரிய தொழிலாக இருப்பது நெசவுத் தொழில். இதில் ஆலைத் தொழிலாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் என்று 3 பிரிவினர் ஈடுபட்டு இருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான பருத்தியை நமது விவசாயிகளே விளைவித்து வந்திருக்கிறார்கள். ஆனால் காலப்போக்கில், நமது பருத்திக்கு நல்ல விலை கிடைக்காததால், அதனைப் பயிரிடுவோரின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. மகாராஷ்டிரா, ஆந்திரம், பஞ்சாப் போன்ற மாநிலங்களிலிருந்து வாங்கப்படும் பருத்தியைக் கொண்டுதான் நமது நூற்பாலைகளும், நெசவாலைகளும் இயங்கி வருகின்றன. தற்போது நிலவும் தொழில் மந்த நிலைமையினாலே எல்லாப் பகுதிகளிலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உலகச் சந்தையில் ஜப்பான், சீனா போன்ற நாடுகளுடன் போட்டியிடும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். தங்கு தடையின்றி எந்தப் பொருளையும் நாம் இறக்குமதி செய்யலாம் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டபிறகு, நமது பொருட்கள் மற்றவற்றோடு போட்டி போடமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன. தமிழ்நாட்டில் பல நூற்பாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. இதில் அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பது கோவை மாவட்டம்தான். வெளி மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்படும் பருத்திக்கு நுழைவு வரி விதிக்கப்பட்டு இருப்பதால், நூல், துணி உட்பட எல்லாப் பொருட்களின் விலையும் ஏறக்கூடிய அபாயம் இருக்கிறது. அதனால் மற்ற மாநிலங்களில் உற்பத்தியாகும் பொருட்களுடன் நாம் போட்டி போடமுடியாத நிலை ஏற்படும்.



2002 ஏப்ரல் 8] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

பன்னாட்டு முதலாளிகள் தங்களுடைய தொழில்களின் தலைமையகங்களை நிறுவுவதற்கும், வர்த்தக நிறுவனங்கள் அமைப்பதற்கும் சில இடங்களைத் தேர்வு செய்கிறார்கள். டோக்கியோ, வாஷிங்டன் போன்ற நகரங்களில் செலவு அதிகமாக ஆகிறது என்பதாலே, அத்தகைய அலுவலகங்களை அங்கே அமைக்காமல், தற்போது செலவு குறைவாக இருக்கும் என்று அவர்கள் கருதுகின்ற மும்பைக்கும், டெல்லிக்கும் தங்களுடைய அலுவலங்களை மாற்றுகிறார்கள் என்ற செய்தி வெளியாகி இருக்கிறது. இதேபோன்று, மலிவான தொழிலாளர்கள் கிடைக்கிறார்கள் என்பதால்தான், இந்தியா போன்ற நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் தொழில்களைத் தொடங்குகிறார்கள். அதேபோன்று, தமிழகத்தில் உள்ள நூற்பாலைகள் பலவும் வேறு மாநிலத்திற்கு சென்றுவிடும் அபாயத்தை இந்த நுழைவு வரி ஏற்படுத்திவிடக்கூடும் என்று அஞ்சுகின்றேன். ஏற்கெனவே சிட்டா நூலுக்கும், அது சார்ந்த வேறு சில பொருட்களுக்கும் 8 சதவிகித உற்பத்தி வரியும், 1.2 சதவிகித உபரி வரியும் விதிக்கப்பட்டு இருப்பதால், இங்குள்ள கைத்தறி, விசைத்தறி மற்றும் சாயப் பட்டறைத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களும், வர்த்தகர்களும் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறார்கள். இந்த வரி விதிப்பால் நமது நெசவாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்ற உண்மையை நமது முதலமைச்சர் அவர்களும் எடுத்துரைத்து எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். இந்நிலையில் இந்த அரசே பருத்திக்கு நுழைவு வரி விதித்திருப்பது, கச்சாப் பொருட்களுக்கு நுழைவு வரி விதித்திருப்பது எந்தவகையில் பொருத்தமானது என்பதை அறிய விரும்புகிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. தகவல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் போன்றவற்றில் அயல்நாட்டு மூலதனங்களைப் பெற்று, அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, 1991 முதல் 1996 வரை நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பிலே இருந்தபோது, அமெரிக்கா நாட்டிலிருந்து மூலதனம் அதிகமாகப் பெறப்பட்டதையும், அந்நியச் செலவாணி ஈட்டப்பட்டதையும் அமெரிக்கத் தூதரகம் சென்னையில் ஏற்பாடு செய்திருந்த பொது நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-10*

அமெரிக்காவிற்குச் செல்ல விரும்புகிறவர்கள் விசாவிற்காக அலைவதும், அலைக்கழிக்கப்படுவதும் அகற்றப்பட்டு, புதிய நடைமுறைகள் மூலமாக எளிதாக விசாவைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எனினும், அமெரிக்காவிற்குச் சென்று வேலைகளில் அமர்வதற்குப் பதிலாக, இங்கேயே அந்த வேலைகளைச் செய்யும் வகையில் தகவல் தொழில்நுட்பத் துறை வளர்ச்சியடைந்து விட்டது. தமிழக அரசின் உதவியுடன் அத்தகைய நிறுவனங்கள் அமைவதற்கு டைடல் பார்க் போன்றவையும் உருவாகி வருகின்றன. எனினும், பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அவை பயன்பட முடியாது. வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட தொழில்கள் பெருகினால்தான், அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். அமெரிக்காவின் ஃபோர்டு கம்பெனி, கொரியாவின் ஹூண்டாய் கம்பெனி போன்றவற்றால் வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியாது. எனவே, ஏற்கெனவே நடந்து கொண்டிருந்த ஆலைகளைத் தொடர்ந்து இயக்குவதற்கும், மூடிய ஆலைகளைத் திறப்பதற்கும், புதிய ஆலைகளைத் தொடங்குவதற்கும் ஏற்றவகையில் நம் தொழிற் கொள்கையை உருவாக்க வேண்டும்.

சென்னையில் பி.அண்டு சி. மில் மூடப்பட்டுவிட்டது, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் மூடப்பட்டு விட்டது, இங்கிலிஷ் எலெக்ட்ரிக்கல்ஸ், டன்லப் போன்ற நிறுவனங்கள் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கின்றன. அம்பத்தூர், ஆவடி போன்ற இடங்களிலும் தொழிற்பேட்டைகளில் இயங்கி வந்த பல தொழில் நிறுவனங்களும் மூடப்பட்டு வருகின்றன. சிம்சன் குரூப் போன்ற பெரிய நிறுவனங்களிலும் சிக்கல் தொடர்கிறது. போரூரில் உள்ள எஸ்.அண்டு.எஸ். தொழிற்சாலை வாழ்வா, சாவா என்று போராடிக் கொண்டிருக்கிறது. அவற்றில் பணியாற்றும் தொழிலாளர்கள் எவ்வித வேலை உத்தரவாதமும் இல்லாமல், கொடுப்பதை வாங்கிக் கொண்டு பட்டினியும் பசியுமாக காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இத்தகைய நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து, தொழில்களைப் பாதுகாப்பதற்கு ஓர் உத்தரவாதத்தை அளிக்கும் வகையில் ஒரு புதிய தொழிற் கொள்கையை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இந்த அரசோ, இருப்பதை விட்டுவிட்டு, பறப்பதைப் பிடிக்கும் முயற்சியில் இறங்கியிருப்பதைப் போன்ற ஒரு காட்சி கண் முன்னே தோன்றுகிறது.



தொழில் நகரம் என்று பெயர் பெற்ற கோவை, தொழிலே இல்லாத நகரம் என்று மாறிவிட்டது. நான் ஏற்கெனவே இந்த அவையிலே பேசியிருக்கிறேன்; பட்டியலிட்டிருக்கிறேன். கோவையிலே மூடப்பட்டிருக்கிற இஞ்சினியரிங் தொழிற்சாலைகள், தத்தளித்துக் கொண்டிருக்கிற இஞ்சினியரிங் தொழிற்சாலைகள், வார்ப்பகங்கள், மூடப்பட்ட நெசவாலைகள், நூற்பாலைகள், தத்தளித்துக் கொண்டிருக்கிற நூற்பாலைகள் மற்றும் சிறிய தொழில்கள் என்று ஏற்கெனவே நான் பட்டியலிட்டிருக்கிறேன். சென்ற வாரம் இங்கே பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்களும் ஒரு நீண்ட பட்டியலை இங்கே சொன்னார்கள். இதே நிலைமை பல இடங்களிலே நீடிக்கிறது.

சேலம் உருக்காலை, உருட்டாலையாக மாறி இன்று தனியாரிடமே உருண்டோடிவிடுமோ என்று அஞ்சும் நிலை ஏற்பட்டுவிட்டது. சேலம் மேக்னசைட் நிறுவனம்கூட தனியாருக்குக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. சிங்காரச் சென்னை என்றும், எழில்மிகு சென்னை என்றும் போற்றப்பட்ட சென்னை நகரத்தில் வேலைவாய்ப்புகள் குறைந்து குற்றங்கள் பெருகிவரும் அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. இவற்றைத் தடுப்பதற்கு அரசின் தீர்வுதான் தேவையே தவிர சட்டம் ஒழுங்கைக் கட்டுப்படுத்தும் போலீஸ் அமைப்பு முறை அல்ல.

மின் துறையைப் பொறுத்தவரையில், ஒரு தேசியக் கொள்கை உருவாக்கப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. சுரேஷ் பிரபு அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மின் கட்டணங்களைப் பொறுத்தவரை, தேசம் முழுமைக்கும் ஒரே மாதிரியாக இருக்கும் வகையில் திட்டமிடப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே முதலமைச்சர்கள் மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டபடி, மாநில மின் சக்தி ஒழுங்குமுறை ஆணையத்தை பல மாநிலங்கள் இன்னும் உருவாக்கவில்லை. மின் சக்தித் துறையில் தேவையான சீர்திருத்தங்களை எடுக்க முன்வரவில்லை என்று பிரதமர் வருத்தம் தெரிவித்திருக்கிறார். தமிழகத்தைப் பொறுத்தவரை, அந்த ஆணையத்திற்கு இன்னும் ஆணையரே நியமிக்கப்படவில்லை என்பது வருத்தத்திற்கு உரியதாகும். இந்நிலையில், பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் துறையில் 7,000 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கூடங்குளம் அணுமின் நிலையத்தின் மூலம் 2,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 100 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும், பழுப்பு நிலக்கரி

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 8

மூலம் 250 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்வதில் உலகத்திலேயே இந்தியா ஐந்தாவது இடத்தில் இருக்கிறது என்றும், அதன்மூலம் 1,500 மெகாவாட் வரை மின் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும் மத்திய மரபுசாரா எரிசக்தித் துறை அமைச்சர் திரு. கண்ணப்பன், பாரிசில் நடைபெற்ற மாநாட்டிலே குறிப்பிட்டிருக்கிறார். அந்தவகையிலே, மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மத்திய மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து மின்சாரத்தை விலைக்கு வாங்கிய வகையில் தமிழ்நாடு மின்சார வாரியம் 1,300 கோடி ரூபாய் அளவிற்கு பாக்கி வைத்திருக்கிறது. அதனை ஒரேநேரத்தில் செலுத்திவிடும் வகையில், 8.5 சதவிகித வட்டியில் வரிவிலக்குள்ள பத்திரங்கள் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆந்திர மாநிலத்தைப் பொறுத்தவரையில் 179 கோடி ரூபாய் அளவிற்குத்தான் பாக்கி வைத்திருக்கிறது. எனவே, மின் துறையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் இத்தகைய இடர்பாடுகளிலிருந்து மீள்வதற்கு வழிவகுக்குமா என்பதை அரசுதான் தெளிவுபடுத்த வேண்டும்.

கல்விக் கொள்கையைப் பொறுத்தவரையிலே, எல்லோருக்கும் கட்டாய தொடக்கக் கல்வி என்று அரசு அறிவித்திருக்கிறது. அது ஓர் உயரிய குறிக்கோள். அந்தக் குறிக்கோளில் அவர்கள் வெற்றி பெறவேண்டும் என்று நான் மனப்பூர்வமாக விரும்புகின்றேன். அதேநேரத்திலே அந்தக் குறிக்கோளை அடைகின்ற நோக்கத்தோடுதான் காமராஜர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்தினார்கள். எம்.ஜி.ஆர். அவர்களும் சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்தி இருக்கிறார்கள்.

முற்பகல் 10-15

இங்கே இருக்கின்ற கல்விச் சாலைகளைப் பொறுத்தவரையில் பொறியியல் பட்டப்படிப்பில் தமிழகம் எங்கும் பெரும் சாதனை ஆற்றியிருக்கிறது. பொறியியல் கல்லூரிகளில் படிப்பதற்கு இடம் கிடைப்பது என்பது குதிரைக்கொம்பாக இருந்த நிலை மாறி இன்று எளிதாக இடம் கிடைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. 2000-2001 ஆம் ஆண்டிலே தொழில் நுட்பக் கல்லூரிகளிலே மட்டும் 45,445 பேர் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். தொழில்நுட்பப் பயிலகங்களில் 47,324 பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். 2001-2002 ஆம் ஆண்டில் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 60,470 பேர் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். கிட்டத்தட்ட, 32, 33 சதவிகிதம் அதிகம். அதேபோல பயிலகங்களில் 45,324 பேர். அந்த 2000 பேர்



2002 ஏப்ரல் 8] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

குறைந்திருப்பதற்குக் காரணம் கல்லூரிகளில் அதிகம் பேர் போய் விட்டார்கள். இது பாராட்டக்கூடிய முன்னேற்றமான ஒரு நிலையாகும். அதே நேரத்தில் இந்தப் பொறியியல் கல்லூரிகளில் தர மேம்பாட்டிற்கு அரசு உறுதியான நம்பகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இல்லையெனில் வருங்கால மாணவர்கள் சமுதாயம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் என்பதை அரசுக்கு எச்சரிக்கையுணர்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல மருத்துவக் கல்லூரிகளின் பக்கமும் நமது பார்வையை நாம் செலுத்த வேண்டும். பெரும் தொகை, எண்ணிப் பார்க்க முடியாத தொகை இன்றைக்கு நன்கொடை என்ற பெயரிலே கொள்ளையடிக்கப்படுகிறது. இதனைத் தவிர்ப்பதற்கு ஒரே வழி மேலும் பல மருத்துவக் கல்லூரிகளைத் திறப்பதுதான். பொறியியல் கல்லூரி திறப்பதில் காட்டிய கொள்கை முடிவுகளை, மருத்துவக் கல்லூரிகளிலும் காட்டினால் தமிழ்நாட்டு மாணவர்கள் சமூகம் பெரும் பலனையடையும் என்பதை அரசுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோல ஒரு முக்கியமான பிரச்சினை, திருத்தணி உள்ளிட்ட பகுதிகளை தமிழகத்தோடு இணைப்பதற்கு பாடுபட்ட சிறை சென்ற வடக்கு எல்லை போராட்டத் தியாகிகளுக்கு பென்ஷன் வழங்கும்படி நீதிபதி சதாசிவம் அவர்கள் அமர்வினைக் கொண்டு சென்னை உயர் நீதிமன்றம் 31-1-2002 மற்றும் 12-3-2002 தேதிகளில் தீர்ப்பு வழங்கியுள்ளது. மிகவும் வயது முதிர்ந்த நிலையிலுள்ள அவர்களுக்கு, மிகவும் சொற்ப எண்ணிக்கையில் உள்ள அந்தத் தியாகிகளுக்கு உயர் நீதிமன்ற உத்தரவின்படி பென்ஷன் வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்னொரு முக்கியமான பிரச்சினை, அலோபதி மருந்துகளைக் காட்டிலும், சித்தா, யுனானி மருந்துகள் சிக்கனமானவை, மலிவானவை. அதுமட்டுமல்ல பல வியாதிகளுக்கு அலோபதி மருந்துகளினாலே குணம் கிடைக்காது. ஆனால், சித்தா, யுனானி மருந்துகள், நம்முடைய நாட்டு மருந்துகள் நல்ல பலன் அளிக்கின்றன என்று மக்கள் நம்புகிறார்கள். எனவே, அவற்றை ஊக்குவிக்கின்ற வகையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 1996 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது சித்தா, யுனானி மருந்துகளுக்கு இருந்த வரிக்கு விலக்கு அளித்து அரசாணை பிறப்பித்தார்கள். ஆனால் அதே மருந்துகளுக்கு தற்போது வரி விதிக்கப்பட்டிருக்கிறது. தற்போது விதிக்கப்பட்டிருக்கிற வரியை விலக்கிக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கொப்பரைக் கொள்முதல் இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை உடனடியாகத் தொடர்ந்து கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். தேங்காய் விலை மிகவும் குறைந்துவிட்டது. உடனடியாக மீண்டும் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், கொள்முதல் கொஞ்சம் மந்தமாக இருக்கிறது, அந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டுமென்றும் மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன். கொப்பரைக்கு இப்போது 2 சதவிகிதமாக வரியை உயர்த்தியிருக்கிறார்கள். இது தவிர ஒரு சதவிகிதம் செஸ் இருக்கிறது, ஆக மொத்தம் 3 சதவிகிதமாகிறது. கேரளாவோடு நாம் போட்டியிட முடியாது. கேரளாவிலே ஏராளமாக விளைகிறது. அவர்கள் நம்மைவிட 2, 3 சதவிகிதம் வரி குறைவு என்கின்றபோது அவர்களோடு நாம் போட்டியிட முடியாது. எனவே, புதியதாக உயர்த்தியிருக்கிற அந்த இரண்டு சதவிகித வரியை நீங்கள் கைவிட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பட்டுச் சேலைகளுக்கு வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டு 50 சதவிகித மானியம் கொடுத்தார்கள் பட்டுத் துணிகளுக்கு. 50 சதவிகிதம் மானியம் கொடுத்த பிறகுகூட 100 கோடி ரூபாய்க்கான ஜவுளி, சேலைகளும் தேங்கிக்கிடக்கின்றன. ஆனால், இப்போது வரி போட்டீர்களேயானால் நிச்சயமாக பெரும் அளவிற்கு நெசவாளர்கள் பாதிக்கப்படுவார்கள். அருள்கூர்ந்து அதைக் கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை, பஞ்சாயத்துகளுக்கு மின்சாரக் கட்டணம். முன்பு ரூ.1.60 காசு இருந்தது, தற்போது ரூ.3.60 காசாக செய்திருக்கிறார்கள். நான் அறிந்த, ஒரு பஞ்சாயத்திலே இந்த மாதம் எவ்வளவு கட்டணம் உயர்த்தியிருக்கிறார்கள் என்று கேட்டேன். ரூ.1,46,205 இந்த மாதம் பில்லாக அங்கு வந்திருக்கிறது. மொத்தம் அந்தப் பஞ்சாயத்திற்கு வருமானம் என்பதே, ஆண்டு வருமானம் என்பது 5 இலட்சம் ரூபாய். 5 இலட்சம் ரூபாய் வருமானம் வருகிற ஒரு பஞ்சாயத்திற்கு ஆண்டு ஒன்றிற்கு 18 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமானால் அது நடக்கிற காரியமல்ல, அவர்கள் கட்ட மாட்டார்கள். மக்களுக்குக் குடிநீர் கிடைக்காது. இந்தமாதிரி நிலைமை ஏற்படும். எதனால் இவ்வளவு வருகிறது என்று கேட்டேன், ஒன்று கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது; இரண்டாவது, நிறைய பம்பு செட்டுகள் இருக்கின்றன. அந்தப் பம்பு செட்டுகள் மூலமாக தண்ணீர் விநியோகிக்கிறார்கள். குறைந்தபட்சம் பம்பு செட்டுகளுக்காவது



கட்டணத்தை பழையபடி குறைத்து பஞ்சாயத்துகளுக்கு குறைந்த கட்டணம் வசூலிக்க வேண்டுமென்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் ஆணை பிறப்பிக்க வேண்டும்; பஞ்சாயத்துகளுக்கும் அது தெரிவிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சினை, Building Approval. பஞ்சாயத்துத் தலைவர்கள் கொடுக்கலாம் என்று அதிகாரம் இருக்கிறது. ஆனால், Site Approval-க்கு சென்னை வர வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு கிராமத்திலே இருக்கிற ஒரு பூமியிலே ஒருவருக்கு 5 சென்டோ, 10 சென்டோ, 15 சென்டோ விற்றால்கூட அதற்கு Approval தேவையில்லை. அதற்குப் பதிலாக, 7 சென்ட், 7 சென்ட் அல்லது 3 சென்ட், 3 சென்ட் என்று இரண்டு பேருக்கு விற்றால் Site Approval வேண்டுமென்று சொல்கிறார்கள். Site Approval-க்கு சென்னைக்கு வர வேண்டும். இது மிகவும் சிரமமான பிரச்சினை. அதுமட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே வாழ்கிறார்கள். அங்கே வாழ்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாம் விவசாயிகளிடத்திலே நிலத்தை ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா என்று வாங்கி பட்டா வைத்துக்கொண்டிருந்தால் வீடு கட்டிக் கொடுப்பார்கள் அல்லது நாமாவது வீடு கட்டிக்கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு பூமி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். வாங்கிய பூமிகள் இன்னும் பதிவு செய்யப்படாத பூமிகள் அங்கே இருக்கின்றன. அவர்கள் எல்லாம் சென்னைக்கு வந்துதான் அவற்றிற்கு Approval வாங்க வேண்டும் என்று சொன்னால் அது இயலாத காரியம். அருள்கூர்ந்து அந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-20*

அதேபோல Real Estate Business-க்கு புத்துயிர் ஊட்டப்படும் என்று சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் 20-வது பாராவில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பணப்புழக்கம் ஏற்படும் வகையில் அரசாணைகளைத் தளர்த்தி வீட்டுமனைகள் விற்பனை, வீட்டுமனைகளாக அங்கீகாரம், கட்டப்பட்ட வீடுகளை வரைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இரண்டு நாட்களுக்கு முன்னால் சென்ற வாரம் செவ்வாய்க்கிழமை அன்று கோவை மாவட்டத்திலே, அவினாசிக்குப் பக்கத்திலும் அவினாசியிலிருந்து ஏரிப்பாளையம் ஊதியப் பட்டுவாடா மையத்திற்கு உட்பட்ட 8 பள்ளிகளுக்கான 19 ஆசிரியர்களின் மார்ச்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 8

மாத ஊதியம் ரூ.1,42,184ஐ அவினாசி ஸ்டேட் வங்கிக் கிளையிலிருந்து ஏரிப்பாளையம் ஊதிய மையத் தலைவர் வை. பழனிசாமி அவர்களும், துணைத் தலைவர் சே. கணபதிசாமி அவர்களும் பெற்று டி.வி.எஸ். மொப்பெட்டிலிலே சென்று கொண்டிருந்தனர். நல்லிக்கவுண்டன்பாளையம் பிரிவு அருகில் பின்னாலே டி.வி.எஸ். சுசுகியிலே வந்த இருவர் அவர்களை அடித்துத் தள்ளிவிட்டு கத்தியைக் காட்டி மிரட்டி அந்தப் பணத்தை எடுத்துச் சென்றுவிட்டனர். உடனடியாக அங்கு உயர் அதிகாரிகள் மறுநாள் வந்திருக்கின்றனர். என்றாலும்கூட உடனடியாக அந்தப் பணத்தை மீட்பதற்கும், தவறு செய்தவர்களை தண்டிப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அது மட்டுமல்ல, அதில் என்ன கஷ்டம் என்று சொன்னால் சம்பளம் கிடைக்கவில்லை. சம்பளம் கிடைக்க நீங்கள் ஏற்பாடு செய்யலாம். அதற்கு இடம் இருக்கிறது. Tamil Nadu Accounts Code, Volume-1,. Article 82-85. இதிலே ஒரு வழக்கு விசாரணையிலே நிலுவையிலே இருக்கிறது என்று சொன்னால், அதிலே பணம் போய் இருக்கிறது என்று சொன்னால், pending investigation special sanction கொடுக்கலாம் என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. எனவே, கண்டிப்பாக அந்த 19 ஆசிரியர்களுக்கும் சம்பளம் கிடைக்கின்ற வகையில் சிறப்பு அனுமதி வழங்க வேண்டும் என்று அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, ஒரு சின்ன சர்ச்சை வந்தது. காவல் துறைக்கு அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு சர்ச்சை வந்தது. அதிகத் தொகை ஒதுக்கியதிலே தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். காரணம் நம்முடைய காவல் துறை என்பது ஸ்காட்லாண்டு யார்டுக்கு அடுத்து என்று நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த காலம் அது. அதை நாம் மறந்துவிடக் கூடாது. அதுமட்டுமல்ல, உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் வழங்குவது அரசின் தலையாயக் கடமைகளில் ஒன்று. அந்தத் தலையாயக் கடமையை நிறைவேற்றுவது அந்தக் காவல் துறைதான்.

இன்று சட்டம்-ஒழுங்கு இருக்கிற நிலை கவலை அளிக்கிறது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆள் கடத்தல் அதிகரித்துவிட்டன. காவலர் குடியிருப்புகளிலேயே திருட்டு போகிறது. கொலைகள் பற்றிய செய்திகள் தினமும் பத்திரிகைகளிலே வந்து கொண்டிருக்கின்றன. கோவில்கள், தேவாலயங்கள் எதுவும் விட்டு வைக்கப்படவில்லை. ஆயுதப்படை காவல் தலைமையகத்திற்குப் பக்கத்திலே, சுற்றுச் சுவர் இருக்கிறது. சுற்றுச் சுவரைத் தாண்டி, கொஞ்சம் கம்பி வேலி இருக்கிறது. கம்பி வேலியை



2002 ஏப்ரல் 8] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

ஒட்டினாற்போல் சுற்றுச் சுவருக்குள்ளாக ஒரு கோயில். ஓம் சக்தி தேவி கருமாரி அம்மன் கோயில் என்ற ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலுக்குள்ளே நுழைந்து, அங்கேயிருக்கிற வெளியேயிருக்கிற இரும்பு ஷட்டரின் ஒரு பகுதியை வெட்டி எடுத்து, உள்ளே அதுபோக ஒரு இரும்பு கிராதி இருக்கிறது; அந்தக் கிராதியை முழுக்க வெட்டமுடியாத அளவுக்கு கொஞ்சம் வெட்டி சுவற்றிலே கன்னம் வைத்துத் தோண்டி ஒரு நபர் உள்ளே நுழைந்து அங்கே இரும்புப் பெட்டியிலே இருக்கிற காணிக்கை பணம் முழுவதையும் எடுத்துச் சென்றுவிட்டார். சில நாள் கழித்து யாரோ ஒருவரை பிடித்திருக்கிறார்கள். அந்த நேரத்திலே ஒரு புகார் தேவைப்பட்டது காவல் துறைக்கு. காவல் துறையினர் அர்ச்சகரிடத்திலே நீதான் புகார் கொடுக்க வேண்டும், கொடு என்று சொன்னார்கள். அர்ச்சகர் புகார் கொடுத்துவிட்டார். இப்பொழுது அந்த அர்ச்சகர் அச்சுறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். கோயிலுக்கே அவர் வர முடியவில்லை. நீதானே புகார் கொடுத்திருக்கிறாய், ஜாக்கிரதை என்று மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையெல்லாம் மாற வேண்டும். யார் தவறு செய்தார்களோ அவர்களைப் போய்ப் பிடியுங்கள். தவறு செய்யவில்லை என்றால் விட்டுவிடுங்கள். அதிலே நான் தலையிடவில்லை. யார் திருடினார்களோ, யார் களவு செய்தார்களோ அவர்களைப் பிடித்துத் தண்டிக்க வேண்டும். அந்த அர்ச்சகர் தாராளமாகக் கோயிலுக்கு வந்து போகின்ற நிலை ஏற்பட வேுண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னொன்று, உயர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், நீதிபதிகள் வாழ்கின்ற குடியிருப்பில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியின் வீட்டில் பட்டப்பகலில் திருடு போய்விட்டது. இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே இருக்கிறது. நான் அதிலே டீடெயிலாக உள்ளே போகவில்லை. இதிலே என்ன பிரச்சினை என்றால், சில பேர் தீவிரவாதத்தை ஊக்குவிக்கிறார்கள். பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறார்கள். தீவிரவாதத்திற்கும் பயங்கரவாதத்திற்கும் ஒரு மகத்துவம் கற்பிக்கப்படுகிறது. கூட்டங்கள் நடத்துகிறார்கள். பேட்டிகள் கொடுக்கிறார்கள். சென்னையிலே கூட்டம் நடைபெற்றிருக்கிறது. திருச்சியிலே கூட்டம் நடைபெற்றிருக்கிறது. வேறு பகுதிகளிலே கூட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. அங்கே எல்லாம் பிரபாகரனைப் போல ஒரு வீரன் உண்டா என்று புகழாரம் சூட்டுகிறார்கள். அதோடு நிறுத்தினால் பரவாயில்லை. பிரபாகரனோடு நிறுத்தினால்கூட பரவாயில்லை. பிரபாகரனையும், வீரப்பனையும் இணைத்துப் பேசுகிறார்கள். இரண்டு பேரையும் ஒரே இணையாக வைத்து

புகழ் மாலை சூட்டுகிறார்கள். உலகத்திலே காவல் துறை மட்டுமல்ல, இராணுவமும் நுழைய முடியாத 2 இடங்கள். ஒன்று வன்னிக் காடு. இன்னொன்று வீரப்பனுடைய காடு என்று சொல்கிறார்கள். வீரப்பனுடைய காடு என்று சொன்னால் பரவாயில்லை. நான் கொஞ்சம் அதை நாகரீகப்படுத்திச் சொல்கிறேன். அவர்கள் சொல்கின்ற வார்த்தைகள் அந்தப் புகழாரங்கள் எல்லாம் இங்கே சூட்ட முடியாது. அந்த அளவிற்கெல்லாம் அங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-25*

இங்கே சில நாட்களுக்கு முன்னால் ஒரு செய்தி வந்தது. இலங்கையிலே போர் அமைதி ஏற்படுவதற்கு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அதற்காக தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் சென்னையிலே தங்குவதற்கு அனுமதி வேண்டும். தமிழ்நாட்டிலே தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும். இங்கே இருந்து கொண்டு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்; அது இல்லாவிட்டால், இந்தியாவிலே வேறு ஒரு பகுதி என்றெல்லாம் ஒரு செய்தி வந்தது. செய்தி வந்த அன்றே — ஈழத்திலே போரமைதி ஏற்படுவதிலே நமக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. ஈழத்திலே போரமைதி ஏற்பட வேண்டும்; அங்கே இருக்கிற தமிழர்கள் நிம்மதியாக் வாழவேண்டும்; அதிலே நான் கண்டிப்பாக இருக்கிறேன். அவர்கள் முழு உரிமைகளையும் பெற்று அங்கே வாழவேண்டும் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. அவர்கள் முழு உரிமைகள் பெற்று வாழவேண்டும். அதுதான் என்னுடைய எண்ணமும்கூட. அதுதான் என்னுடைய கொள்கையும்கூட. ஆனால், விடுதலைப் புலிகள் என்பவர்கள், அவர்கள் பயங்கரவாதிகள் என்பது மட்டுமல்ல; அவர்களைப் பொறுத்த வரையிலே, அவர்கள் கண்ணிவெடி கலாச்சாரத்திற்கு ஆட்பட்டவர்கள். மனித வெடிகுண்டு கலாச்சாரத்திற்கு ஆட்பட்டவர்கள்.

நம்முடைய மண்ணிலேயே, தமிழ்நாட்டிலேயே, சென்னைக்குப் பக்கத்திலேயே, 'ஒன்றுபட்ட, வலிமைமிக்க, வறுமை நீங்கிய இந்தியாவை, 21 ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்வேன்' என்று இலட்சிய முழக்கமிட்ட ராஜீவ் காந்தியை இந்த மண்ணிலேதான் மனித குண்டு வைத்து, அவர்கள் தகர்த்தெறிந்தார்கள். அதையெல்லாம் நம்மால் மறந்துவிட முடியாது. இந்த நாட்டிலே தடை செய்யப்பட்டிருக்கிற அமைப்பு, அந்த அமைப்பு. இந்த நாட்டிலே பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளியாக அதனுடைய தலைவரும் மற்ற சில பேரும் அங்கே



இருக்கிறார்கள். அவர்களை மீண்டும் இங்கே அழைத்து, — இறந்துபோன தமிழர்களைப் பொறுத்தவரையிலே, களத்திலே இறந்த தமிழர்களை விட்டுவிடுங்கள்; களத்திலே இறந்த தமிழர்களைத் தவிர மற்றைய தமிழர்கள், யாரால் அதிகமாகக் கொல்லப்பட்டார்கள் என்று கேட்டால், நிச்சயமாக இந்த விடுதலைப் புலிகளாலேதான்; அந்த விடுதலைப் புலிகளினுடைய கலாச்சாரம் நமக்கு வேண்டாம்; அது வேண்டாம் என்ற காரணத்திற்காக, அன்றே நான் பேட்டி கொடுத்தேன். இவர்களைத் தமிழ்நாட்டிலே மட்டுமல்ல; இந்திய மண்ணிலேயே வந்து தங்கி இருப்பதற்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்று நான் பேட்டி கொடுத்தேன்.

முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு ஓர் அறிக்கையை விட்டார்கள். விட்டதற்குப் பின்னாலே நிலைமை மாறியிருந்தாலும்கூட, யாரெல்லாம் அறிக்கை விட்டார்களோ, யாரெல்லாம் பேட்டி கொடுத்தார்களோ, அவர்கள் எல்லாம் அச்சுறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டார்கள். எனக்கும் மிரட்டல் கடிதம் வந்தது. மிரட்டல் கடிதம் வந்து — எனக்கு பலத்த மிரட்டல் வரும்; — நான் அசட்டையாக அதை விட்டுவிடலாம் என்று நினைத்தேன். நண்பர்கள் சொன்னார்கள்; அசட்டை செய்ய வேண்டாம்; உரியவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். நான் உரியவர்களிடத்திலே, நம்முடைய தமிழக அரசினுடைய முக்கியமான பொறுப்பிலே, மிக முக்கியமான மிக உயர்ந்த பொறுப்பிலே இருக்கிறவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்தேன். கொண்டு வந்ததற்குப் பின்னாலே, சில நாட்கள் கழித்து, இரண்டு பேர் விசாரிக்க வந்தார்கள். பிறகு, இரண்டு மூன்று நாட்கள் கழித்து இன்னும் இரண்டு பேர் விசாரிக்க வந்தார்கள். ஏற்கெனவே விசாரித்துவிட்டுப் போய்விட்டார்கள் என்று நான் அவர்களிடத்திலே சொன்னதற்கு, அவர்கள் அது வேறு, இது வேறு என்றார்கள். அது என்ன வேறு என்று கேட்டேன்; வேறுபாடு என்னவென்று கேட்டேன். அவர்கள், ஸ்பெஷல் பிராஞ்ச்; நாங்கள் க்யூ பிராஞ்ச் என்று சொன்னார்கள். அதற்குப் பின்னாலும், 2 பேர் வந்தார்கள். கேட்டேன், ஏற்கெனவே இரண்டு முறை வந்தார்கள் என்று. அவர்கள் வேறு சார், நாங்கள் அங்கே இருந்து வருகிறோம் என்று சொன்னார்கள்.

3 பேர்களிடத்திலேயும் நான் சொன்ன முக்கியமான ஒரு விஷயம்; எந்தக் காரணத்தைக் கொண்டும் என்னுடைய தொலைபேசியை ஒட்டுக் கேட்காதீர்கள்; 'டேப்' செய்யாதீர்கள் என்று சொன்னேன். ஏனென்று

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 8

சொன்னால், எனக்கு நீங்கள் 'டேப்' செய்யும்போது மிரட்டல் வருவதில்லை. நான் பார்த்துவிட்டேன். முன்பு ஒருமுறை 'டேப்' செய்தார்கள்; எனக்குத் தெரிந்தே செய்தார்கள்; நான் தப்பாகச் சொல்லவில்லை; அந்த முறை டேப் பண்ணும்போது எனக்குத் தெரிந்துதான் செய்தார்கள்; டேப் செய்தார்கள் என்றால், டெலிபோன் disconnect ஆவதில்லை; அதிலே வினோதமான சத்தங்கள் வருகின்றன; வினோதமான சத்தங்கள் வந்தால், பேசுகிறவர்கள் அஞ்சுகிறார்கள்; பேசுவதில்லை. நாங்கள் நேரிலே பேசுகிறோம் என்று சொல்லிவிடுகிறார்கள். சில நேரங்களிலே disconnect ஆவதில்லை; சில நேரங்களிலே dial tone வராது. சில நேரங்களிலே, out of order ஆகிவிடுகிறது. ஆகையினால், எந்தக் காரணத்தைக் கொண்டும் என்னுடைய தொலைபேசியை டேப்பிலே மாட்டாதீர்கள் என்று சொன்னேன். ஆனால், டேப்பிலே மாட்டியிருந்தார்கள் என்பது என்னுடைய உணர்வு; நான் இன்றும் அதைத் திடமாக நம்புகிறேன். என்னுடைய தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டது. நான் உடனடியாக, யாரிடத்திலே தொடர்புகொள்ள வேண்டுமோ, அவர்களிடத்திலே தொடர்பு கொண்டு சொன்னேன். 'இருக்காது சார், நான் உடனே சொல்கிறேன்; நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்; சொல்லியிருக்கிறேன் என்று நான் சொல்லிவிட்டேன்; என்றாலும் நான் சொல்கிறேன்' என்று சொன்னார். இரண்டு, மூன்று நாட்களாகியும் அது நிற்கவில்லை. ஆகையினால், நான் மறுபடியும் அவரைத் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். அவர் விடுப்பிலே இருந்தார். பேரவைத் தலைவர் அவர்கள் ஊரிலே இல்லை. அதனாலே, சட்டமன்றச் செயலாளரோடு நான் தொடர்பு கொண்டேன். தொடர்பு கொண்டு இதுமாதிரி இருக்கிறது; உடனடியாக அதை எடுத்துவிடச் சொல்லுங்கள் என்று சொன்னேன். அவரும் நான் உடனடியாக உள்துறை செயலாளரிடத்திலே பேசுகிறேன் என்று சொல்லி, பேசி இருக்கிறார்கள். பேசிவிட்டு மறுநாள் என்னிடத்திலே சொன்னார்கள். பேசியாகிவிட்டது; அப்படி தொலைபேசியிலே ஒட்டுக் கேட்க மாட்டார்கள்; கேட்டாலும் நிறுத்தி விடுவதாகச் சொல்லி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நிற்கவில்லை. அதே சத்தங்கள்; அதே வினோதமான சத்தங்கள். அதேபோல் தொலைபேசி disconnect ஆகிறது. இதுபோன்ற நிலைமைகள் எல்லாம் வந்தன. 'பீப்' சத்தம், சகலமும் வந்தன.

பிறகு, நான் உள் துறை செயலாளரிடத்திலே பேசினேன். அவர்களிடத்திலே பேசும்போது, 'சார், நாங்கள் கடிதம் கொடுத்தால் தான் செய்வார்கள். எதற்கும் நான் பார்த்துவிட்டு உங்களிடத்திலே



2002 ஏப்ரல் 8] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

சொல்கிறேன், என்று சொன்னார்கள். அதேபோல மீண்டும் நான் தொடர்பு கொண்டபோது சொன்னார்; 'இல்லை, ஒட்டுக் கேட்கப்படவில்லை' என்று சொன்னார். நான் உறுதியாகச் சொன்னேன்; என்னுடைய தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுவது நிச்சயம், அதிலே சந்தேகம் எனக்கு இல்லை; அதுமட்டுமல்ல; அந்தத் தொலைபேசியிலே வினோதமான சத்தங்கள் வருகின்றன. அதனால், யாரிடமும் பேச முடியவில்லை; திடீர் திடீரென்று out of order ஆகிவிடுகின்றது; அதோடு நிற்காமல், தொலைபேசி துறைக்குத் தெளிவாக ஆணையிட்டு விடுங்கள் என்று சொன்னேன். பிறகு, சில நாட்களிலே அந்தச் சத்தங்கள் எல்லாம் நின்றுபோய் விட்டன. என் தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டது நின்றுவிட்டாலும்கூட, என்னைக் குழப்புவதற்காக தொலைபேசித் துறை என்ன செய்திருக்கிறார்கள் என்றால், call wait சிஸ்டத்திலே போட்டு விட்டார்கள். எனக்கு யாராவது டெலிபோன் செய்தீர்கள் என்றால், உங்களுக்கு 'No Response'-ஆக இருக்கும். ஏனென்றால், call wait சிஸ்டத்திலே போட்டால் பேசிக் கொண்டிருக்கும்போது அந்த 'பீப்' சத்தம் வந்துகொண்டே இருக்கும். அது குழப்புவதற்காகச் செய்த வேலை. பிறகு, உள் துறை செயலாளரிடத்திலே இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. இரண்டே வரியிலே ஒரு கடிதம். அதுவும் நான் செல்லக்கூடிய ஒரு முகவரியே தவிர, என்னுடைய தொலைபேசி இருக்கிற முகவரி அல்ல. நான் வாழ்கின்ற முகவரியிலே இல்லாமல், வேறு முகவரியிலே 2 வரியிலே ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்திலே, தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படவில்லை என்று மட்டும் ஒரு வாக்கியம். சரி, மகிழ்ச்சி.

பிறகு, ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் கழித்து, இன்னொரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்திலே, 'அதை விசாரித்தோம்; அந்த மிரட்டல் கடிதத்திலே உள்ள முகவரியிலே அப்படி பெயருடைய ஒரு நபரே கிடையாது. முகவரியிலே மட்டுமல்ல; அந்தப் பகுதியிலேயே அப்படிப்பட்ட பெயரே கிடையாது; என்றாலும் உங்களுக்கு தேவையான பாதுகாப்பு வழங்க சம்பந்தப்பட்ட கமிஷனர்கள், எஸ்.பி-க்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று அந்தக் கடிதத்திலே குறிப்பிடப்பட்டிருந்தது.

*முற்பகல் 10-30*

மறுநாள் காலையிலே எனக்கு நிறைய தொலைபேசி அழைப்புகள் வந்தன. வந்தவை எல்லாம் உங்களுக்கு அச்சுறுத்தலாமே; ஆயுதக் காவலர் பாதுகாப்பு கொடுத்து இருக்கிறார்களாமே என்று கேட்டார்கள். இல்லை;

அப்படி ஒன்றும் இல்லை என்று சொன்னேன். இல்லை, பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது என்று சொன்னார்கள். நானும் பிறகு அந்த பத்திரிகையைப் பார்த்தேன். பார்த்ததற்குப் பிறகு 2 நாட்கள் விட்டுவிட்டேன். 3-வது நாள் நான் உள் துறை செயலாளரிடம் பேசினேன். பத்திரிகையிலே இப்படி ஒரு செய்தி வந்திருக்கிறது என்றேன். அவர் உட ி ஏ ஒரு பத்திரிகை பெயரைச் சொல்லி, அது தவறான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னார். அந்தப் பத்திரிகை அல்ல; இது வேறு பத்திரிகை; எந்தப் பத்திரிகையிலே வந்ததோ அந்தப் பத்திரிகையின் பெயரைச் சொன்னேன். அந்தப் பத்திரிகையில் வருவது அத்தனையுமே பொய் என்று சொன்னார். நான் சொன்னேன், தயவுசெய்து இப்படிச் சொல்லாதீர்கள்; ஒரு பொறுப்பான இடத்தில் நீங்கள் இருக்கிறீர்கள்; அந்தச் செய்தி முகாந்திரம் இல்லாத செய்தி அல்ல; அந்தச் செய்தியில் மிரட்டல் வந்தது இருக்கிறது; மிரட்டலுக்கு விசாரணை நடந்தது இருக்கிறது. 3-வது விஷயம்தான் பாதுகாப்பு, ஆயுதக் காவலர் பாதுகாப்பு கொடுத்து இருக்கிறேன் என்று வந்திருக்கிறது; அதுதான் இல்லையே தவிர, மற்ற இரண்டும் வந்திருக்கிறது. அதனால் முகாந்திரம் இல்லாமல் வந்த செய்தி அல்ல அந்தச் செய்தி. முகாந்திரத்தோடு இருக்கிற செய்தி; எனவே, முழுமையாக பொய் என்று சொல்ல முடியாது. யாராவது உங்கள் தாப்பிலே இருந்து செய்தி கொடுத்து இருக்க வேண்டும்; அல்லது உங்கள் தாப்பிலே இருந்து அவர்கள் கேட்டுப் பெற்றுப் போட்டு இருக்க வேண்டும். இந்தச் செய்தி எப்படி வந்தது? இன்று வரை அதற்குப் பிறகு எந்தக் காவல் துறையினரும் என்னிடம் தொடர்பு கொள்ளவில்லை என்பதை நான் சொன்னேன். நான் அனைவரையும் விசாரித்துவிட்டு உடனடியாக மீண்டும் உங்களிடத்திலே தொடர்புகொள்கிறேன் என்று சொன்னார். இன்றோடு 11 நாட்கள் ஆகின்றன. போன வெள்ளிக்கிழமைக்கு முந்தின வெள்ளிக்கிழமை அவரிடம் பேசினேன். வெள்ளியோடு வெள்ளி 8; ஞாயிறு 10; திங்கள் 11 நாள் ஆயிற்று; இன்று வரைக்கும் எந்தவிதமான பதிலும் அவரிடத்திலே இருந்து வரவில்லை.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இந்த விஷயத்தை ஏற்கெனவே என்னுடைய கவனத்திற்கு கொண்டுவந்திருந்தால், நான் தீர விசாரித்து இருப்பேன். ஆனால் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் என்னைச் சந்திக்கவில்லை; இதைப்பற்றி என்னிடத்தில் எதுவும் கூறவில்லை; என்னிடத்தில் ஒரு கடிதம்கூடக் கொடுக்கவில்லை. இன்றைக்கு சட்டப்பேரவையில் அவர் இதைப்பற்றிப் பேசும்போதுதான் எனக்கே இந்த விஷயம் தெரியவந்தது. ஒன்றை நான்





உறுதியாகச் சொல்ல முடியும். நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களின் தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படவில்லை. அதை நான் உறுதியாகச் சொல்ல முடியும். தொலைபேசியில் ஏதேதோ சத்தங்கள் வருகின்றன என்று சொன்னால், அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். என்னுடைய தொலைபேசியில்கூடப் பலவிதமான சத்தங்கள் வருகின்றன; வந்து கொண்டே இருக்கின்றன. ஆகவே, என்னுடைய தொலைபேசியும் ஒட்டுக் கேட்கப்படுகிறது என்று பொருள் அல்ல. பொதுவாக சந்தேகத்திற்குரியவர்கள், நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும், நாட்டின் பாதுகாப்பிற்கும் ஊறு விளைவிக்கக் கூடியவர்கள் என்று சந்தேகப்படுபவர்களின் தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்படுகின்றன. அந்தப் பட்டியல் என்னிடத்தில் வரும். அந்தப் பட்டியல் மத்திய அரசுக்கும் அனுப்பப்படும். நிச்சயமாக மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களால் இந்த நாட்டிற்கு எந்த ஆபத்தும் இருப்பதாக யாரும் கருதவில்லை. ஆகவே, நிச்சயமாக அவர்களுடைய தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படவில்லை என்பதை நான் மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிச்சயமாக இதை ஒரு சர்ச்சையாக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. என்னுடைய தொலைபேசி இதற்கு முன்னாலே ஒட்டுக் கேட்கப்பட்டது; அது எனக்குத் தெரிந்தே செய்யப்பட்டது; அதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஏனென்றால், தொலைபேசியிலே விடாமல் எனக்கு அச்சுறுத்தல் வந்து கொண்டே இருந்தது. அதை நான் யாருடைய கவனத்திற்குக் கொண்டு சென்றேனோ, அவர்கள் நாங்கள் டெலிபோனை மானிடரிலே போடுகிறோம் என்று சொன்னார்கள். போடுங்கள் என்று சொன்னேன். பரவாயில்லை போடுங்கள் என்றேன். அந்த மானிடரில் போட்டு, பின்னர் அது முடிந்த நாள் வரைக்கும் ஒரு நாள்கூட எனக்கு தொலைபேசியில் அச்சுறுத்தலே வரவில்லை. பிறகு நான் சொன்னேன், அது பிரயோஜனம் இல்லை என்று. இரண்டாவது, திடீர் திடீரென்று disconnect ஆகிறது; சில நேரம் dead ஆகப் போய்விடுகிறது. தயவுசெய்து உடனடியாக அதை எடுத்துவிடுங்கள் என்று அந்த உயர் அதிகாரியிடத்தில் சொன்னேன். அவர்களும் அதேமாதிரி எடுத்துவிட்டார்கள். எடுத்துவிட்டதற்குப் பின்னால்தான் நிலைமை சரியானது. என்னுடைய சம்மதத்தோடு, அனுமதியோடு ஒட்டுக் கேட்கப்பட்டது. பின்னரும் அதே போன்ற சமிக்ஞைகள், அதேபோன்ற சத்தங்கள் வந்த காரணத்தால்தான் நான் ஒட்டுக் கேட்கப்பட்டதாக திடமாக நம்புகிறேன். ஒட்டுக்

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 8

கேட்கப்படவில்லை என்று சொன்னதற்கு மகிழ்ச்சி. இப்போது ஒட்டுக் கேட்கப்படுவதாக நான் சொல்லவில்லை. இப்போது வருகிற சத்தம் call wait system - என்பதில் வருகிற சத்தம். வேறு ஒன்றும் இல்லை. ஆனால், என்னைப் போன்றவர்களுக்கு, உங்களுடைய நேரடியான கவனத்திலே இருக்கிற இலாகாவிலே இருந்து என்னைப் போன்றவர்களுக்கு இதுதான் நிலை என்று சொன்னால், எப்படி சரியாக இருக்கும் என்று பார்த்துக்கொள்ளுங்கள் என்பதற்காகத்தான் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

காலையிலே நான் எழுப்பிய பிரச்சினைக்கு உடனடியாக நீங்கள் சொன்ன பதிலுக்கு நன்றி. இன்னும் அதேபோல் சென்னையில் கடந்த 3 ஆண்டுகளில், 2000, 2001, 2002 ஆகிய 3 ஆண்டுகளில் Reported cases—

2000-ல் Reported 5; Detected 4; Pending trial 3

2001-ல் Reported 6; Detected 3; Pending trial 3

2002-ல் Reported 1; Detected இல்லை; Pending trial இல்லை

இதுதான் நிலைமை. இதையெல்லாம் மாற்றியமைத்து தவறு செய்தவர்களுக்கும் தண்டனை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, போக்குவரத்துத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் போராடிய நேரத்திலே சில பேர் போராட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக பல முயற்சிகள் மேற்கொண்டார்கள். அது உங்களுக்கெல்லாம் தெரியும். அப்போது பேச்சுவார்த்தை நடந்தபோது, சில ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. அதன்படி ஒரு தொகையை அப்போதே கொடுப்பதாகவும், மீதமுள்ள தொகையை தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்பாக கொடுத்துவிடுவதாகச் சொல்லி இருந்தார்கள் என்று சொல்கிறார்கள். அந்தத் தொகை வரவில்லை. எனவே முதலமைச்சரை சந்திக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களுக்கும் தகவல் கொடுத்து இருக்கிறார்கள்; கடிதம் எழுதி இருக்கிறார்கள். அருள்கூர்ந்து அவர்களைப் பார்த்துப் பேசி உடனடியாக நீங்கள் சமரசம் பேசினால் அது சரியாகிவிடும் என்று நான் நம்புகின்றேன். நீங்கள் அவர்களிடத்திலே பேசுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-35

மத்திய அரசு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையிலே வேலை வாய்ப்புகள் அதிகமாக உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.



2002 ஏப்ரல் 8] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

ஆனால் மத்திய நிதி அமைச்சர், மத்திய அரசு ஊழியர்கள் 42,000 பேர் வீட்டிற்கு அனுப்பப்படுவார்கள் என்று அறிவித்துவிட்டார். புதிய வேலைவாய்ப்பிற்கான வாயில்களை அடைத்துவிட்டார். ஆனால் ஊரகக் கட்டமைப்பு நிதியின் மூலமாக 35 இலட்சம் பணிகள் உருவாக்கப்படும் என்று உறுதியாக நம்புகிறார். வரிகள் மற்றும் மானியங்கள் சம்பந்தமாக மறுசிந்தனை தேவையென்றும் அப்போதுதான் பெருகிவரும் நிதிப் பற்றாக்குறையை சமாளித்து பொருளாதார சீர்திருத்தத்தின் பயனை அடைய முடியும் என்றும் கூறுகிறார்.

மத்திய அரசு வரிகளின் மூலம் ஈட்டிவரும் வருவாயில், 1 இலட்சத்து 18 ஆயிரம் கோடி, கடன்களுக்கும் வட்டிச் செலவினங்களுக்கும் மட்டும் செல்கிறது. இது மொத்த வரி வருவாயில் 50 சதவிகிதம் என்று கூறப்படுகிறது. 100 கோடி மக்களைக் கொண்ட நாட்டில் 2.5 கோடி மக்களே வருமான வரி செலுத்துகிறார்கள் என்றும், அதிலும் 5 இலட்சத்திற்கு மேல் வரி செலுத்துபவர்கள் 3.65 இலட்சம் பேர் மட்டுமே இருக்கிறார்கள் என்றும் மத்திய நிதி அமைச்சர் திரு. யஷ்வந்த் சின்ஹா எடுத்துக் கூறியிருக்கிறார். எனவே விவசாயிகளுக்கான மானியங்களைக் குறைத்தும், நடுத்தர மற்றும் ஏழை மக்களுக்கான வரிகளை உயர்த்தியும், அந்நிய முதலீட்டாளர்களுக்கும், உள்நாட்டு தொழில் அதிபர்களுக்கும் வரிச் சலுகைகளை வாரி வழங்கி ஊக்குவித்தும் கடுமையான முடிவுகளை மேற்கொள்வதாக அறிவித்தார்கள். அதன்விளைவாக சாமானிய மக்களும், அரசு ஊழியர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் அதிருப்தி அடைந்தார்கள். நான்கு மாநில இடைத் தேர்தல்களிலும் மத்தியில் ஆளும் கூட்டணிக் கட்சிகளுக்கு தோல்வியையே கொடுத்தார்கள். தேசிய தலைநகரான டெல்லியில் நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில் மொத்தமுள்ள 134 இடங்களில் பாரதிய ஜனதா கட்சி 16 இடங்களை மட்டுமே பெற்று படுதோல்வியை தழுவி இருக்கிறது. பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களே மத்திய பட்ஜெட் படுதோல்விக்கு ஒரு காரணமாக அமைந்துவிட்டது என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் இங்கு உள்ள பொதுத் துறை நிறுவனங்கள் அனைத்தையும் தனியாருக்குத் தாரை வார்ப்பதும், அரசு ஊழியர்கள் பலரை விருப்ப ஓய்வில் வீட்டிற்கு அனுப்புவதும், புதிய வேலைவாய்ப்புகளே இல்லாமல் செய்வதும், அரிசி, கோதுமை முதலான அத்தியாவசியப் பண்டங்களுக்கு முதல்முறையாக விற்பனை வரியை விதிப்பதும், பல பொருள்களுக்கு நுழைவு வரியையும் உபரி வரியையும், விதித்து இருப்பதும் எந்த அளவுக்கு இந்த அரசுக்குப் பெருமை சேர்க்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த அண்ணா அவர்கள்—நான் இப்போது வீற்றிருக்கிற இதே ஆசனத்திலே அவர் அப்போது வீற்றிருந்தார்—அன்றையதினம் அவர்கள் பேசும்போது, **Quote-** "உணவு தானியங்கள் என்பதை உணவுப் பொருள்கள் என்று மாற்றி அவற்றின்மீதான விற்பனை வரியை நீக்கினால் அதனால் "சில இலட்சம் ரூபாய்தான் வருமானம் குறையும். ஆனால் மக்கள் சாப்பிடும்போது அரசாங்கத்தை மனமாற வாழ்த்துவார்கள். அப்போது நல்ல மந்திரிசபை நாட்டிலே ஆள்கிறது. நல்ல சர்க்கார் நிலவுகிறது. அதனால் உணவுப் பொருள்கள்மீது வரியினை எடுத்துவிட்டார்கள் என்று மனதார வாழ்த்துவார்கள். சட்டசபையிலே பலபேர் வந்து போகிறார்கள். ஜனநாயகத்தின் பரிசாக இதை மதிப்பார்கள். முதல் கவளத்தில் முதலமைச்சரை வாழ்த்துவார்கள். இரண்டாவது கவளத்தில் நிதி அமைச்சரை வாழ்த்துவார்கள்" என்று குறிப்பிட்டபோது, அன்றைய நிதி அமைச்சர் எங்களுடைய ஊரைச் சேர்ந்தவர், திரு. சி.எஸ்.- திரு. சி. சுப்பிரமணியம்—அவர்கள் குறுக்கிட்டு "மூன்றாவது கவளத்தில் இதை எடுக்கச் சொன்னவர்களை வாழ்த்துவார்கள்" என்று குறிப்பிட்டார்கள். அப்போது அவையே சிரிப்பில் ஆழ்ந்தது. Quote- "சாப்பிடுகிற நேரத்தில் சாப்பாட்டுப் பொருள்கள் மீது வரியில்லை என்று பொதுமக்கள் ஒருமுகமாக வாழ்த்துவார்கள். சாப்பிடும்போது வாழ்த்துவது நல்லது என்று வைதீகர்கள் கூறுவார்கள். மற்ற விஷயத்தில் வைதீகத்தில் வேறுபட்ட கருத்தினைக் கொண்ட நான் இது விஷயத்தில் வேண்டுமானால் ஒத்துக்கொள்கிறேன்" என்று அண்ணா மீண்டும் குறிப்பிட்டுப் பேச்சைத் தொடர்ந்தார்.

அந்த அண்ணாவின் வழியில் ஆட்சியையும், கட்சியையும் நடத்தும் நம்முடைய முதலமைச்சர் அவரது வழியிலே நின்று வைதீகர்களும் வயிறார உண்டு வாயார வாழ்த்துகிற வகையில், வரவேற்க முடியாத வகையில் அமைந்துள்ள அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் மீதான விற்பனை வரியை திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இந்த அரசின் சார்பில் நிதி அமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். அதன்மீது அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும்





உரையாற்றிய அந்த அடிப்படையில், என்னுடைய கருத்துகளைத் தெரிவிக்கிற இந்த வாய்ப்பிற்காக நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். எந்த நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும் ஒருமித்த கருத்தை உருவாக்குவது என்பது இயலாத ஒரு காரியம் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

ஜனநாயகத்தில் அரசு எந்தவொரு கடமையை மேற்கொண்டாலும் அல்லது செயலிலே ஈடுபட்டாலும் அதுபற்றி வெவ்வேறுவிதமான கருத்துகள் இருப்பது இயற்கை என்ற காரணத்தாலேதான் சட்டமன்றத்திற்கே மிக முக்கியமானதொரு தகுதி, உரிமை ஏற்படுகிறது. பல்வேறுவகையான கருத்துகளையும் எடுத்து வைக்கக்கூடிய வாய்ப்புதான் ஜனநாயகத்திற்கே முதுகெலும்பாக அமைந்து அதைப் பாதுகாக்கக்கூடிய ஒரு வலிமையைத் தருகிறது.

*முற்பகல் 10-40*

இந்த ஆண்டு நிதிநிலைக் குறிப்பில் ரெவின்யூ-வருவாய்க் கணக்கில் ரூ.6,233 கோடி வருவாய்ப் பற்றாக்குறை இருக்கிறது என்று எடுத்துக்காட்டப்பட்டாலும், மொத்த நிதி நிலையில், அரசு கடன் உட்பட்ட மொத்த நிதி நிலையில், செலவு ரூ.30,832 கோடியாக இருந்தாலும் வரவு ரூ.29,502 கோடியாக அமைந்து ரூ.1,330 கோடிதான் பற்றாக்குறை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. எனவே அந்த வகையில் மொத்த வரவு செலவை வைத்துப் பார்க்கிறபோது இந்தப் பற்றாக்குறை அதிகம் அல்ல என்பதையும், இந்தப் பற்றாக்குறைகூட உத்தேச வரி விதிப்பு மூலம் அல்லது கூடுதல் நிதி திரட்டி ஈடு செய்யப்படும் என்றும் ஒரு குறிப்பு தரப்பட்டு இருந்தாலுங்கூட நான் விரும்புவது உத்தேச வரி விதிப்பு முறை அல்ல. ஏனென்றால் ஏற்கெனவே விதிக்கப்பட்டு இருக்கிற வரிகளிலே நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, உணவுப் பொருளுக்கும்கூட வரி போடுகிற ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதன் காரணமாக கூடுதல் நிதி திரட்டுவதன் மூலமாக இது ஈடு செய்யப்பட வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையோடு ஒட்டி ஏற்கெனவே எந்த அளவு நிதி ஒவ்வொரு குறிப்பிட்ட தலைப்பிலே செலவிடுவதற்கு ஒதுக்கப்பட்டது, எவ்வளவு செலவிடப்பட்டு இருக்கிறது என்னும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, திருத்த மதிப்பீடு ஆகியவை 2001-2002 ஆம்

ஆண்டுக்குத் தரப்பட்டு இருக்கிறது. அதிலே இலவச வேட்டிகள், சேலைகள் என்ற அந்தத் தலைப்பில் 129 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, திருத்த மதிப்பீடு 129 கோடி ரூபாய் என்று இருந்தாலுங்கூட இன்னும் சேலை வேட்டி வழங்கப்படவில்லை என்றுதான் ஏடுகளிலே செய்தி வந்திருக்கிறது. ஆக, சேலை, வேட்டி வழங்கப்படாத நிலையில் அந்தச் செலவு வருமா என்பது கேள்விக்குரியது. வரும் ஆண்டிலே அந்த நிதி ஒதுக்கீடு நிறுத்தப்பட்டு இருக்கிறது. சுழிதான் போடப்பட்டு இருக்கிறது. ஆகவே அடுத்த ஆண்டு இந்தச் சேலை, வேட்டி இலவசமாக வழங்குகிற அந்தத் திட்டம் இனி இல்லை என்ற ஒரு கருத்து ஏற்படுகிறது.

அதேபோல பின்தங்கிய வகுப்பினருக்கு வீடு கட்டுவதற்காக கடந்த ஆண்டு 6 கோடி ரூபாய், இந்த ஆண்டு 6 கோடி ரூபாய், ஒதுக்கினாலும் செலவிடப்படவில்லை என்று காட்டப்பட்டு இருக்கிறது. இந்திரா வீட்டு வசதித் திட்டத்திற்காக 55 கோடி ரூபாய் 2001-லேயும், நடைமுறையிலே உள்ள இந்த ஆண்டு 51 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டு அதுவும் செலவிடப்படாமல் திருத்த மதிப்பீட்டிலே சுழிதான் காட்டப்பட்டிருக்கிறது.

அதேபோல பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம், இராமாமிர்தம் அம்மையார் பெயராலே அமைந்த திட்டம் என்று கருதுகிறேன், அதற்கு 2000-2001-லே 47 கோடி ரூபாய். 2001-2002-ல் 50 கோடி ரூபாய். அதன் திருத்த மதிப்பீடு 43 கோடி ரூபாய் காட்டப்படினும் வருகிற ஆண்டில் அது கைவிடப்பட்டிருக்கிறது. சுழிதான் தரப்பட்டிருக்கிறது.

அதேபோல சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிக்குக்கூட 193 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக 2001-2002-லே தெரிவிக்கப்பட்டு, 105 கோடி ரூபாய்தான் செலவிடப்பட்டதாகக் காட்டப்படுகிறது அல்லது திருத்திய மதிப்பீடு அவ்வளவுதான். ஆக அதிலே 88 கோடி ரூபாய் குறைகிறது. அது அந்த வகையிலே மறுபடியும் செலவிடப்படுமா என்பது எனக்குத் தெரியவில்லை.

பொதுவாக, அரசாங்கம் தன்னுடைய செயல்பாடு, திட்டங்கள் அத்தனையையும் அண்மைக்காலத்திலே உள்ளாட்சி மன்றங்கள் மூலமாகத்தான் முழுமை பெறச்செய்ய வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இடைக்காலத்திலே உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் எல்லாம் நடைபெறாமல் இருந்தாலுங்கூட உள்ளாட்சி மன்றங்களை ஒரு limb என்று, அரசாங்கத்தினுடைய ஒரு வலிவான உறுப்பு என்று



சொல்லக்கூடிய முறையில் அதன் மூலமாகத்தான் பொதுமக்களுடைய பல்வேறு விதமான குறைகளைத் தீர்க்க வேண்டிய நிலைமை இருக்கிறது. என்ன முறையில் அவர்களுக்கு நிதி வழங்கப்படுகிறது என்பது கூறப்பட்டுள்ளது. மொத்த வரி வருவாயில், மாநிலத்தினுடைய கேளிக்கை வரி நீங்கலாக, மொத்த வரி வருவாயில் 8 விழுக்காடு பங்கிட்டுத் தரப்படுகிறது. அவரவர்கள் வசூலிக்கிற கேளிக்கை வரியில் 90 விழுக்காடு அவரவர்களுக்குத் தரப்படுகிறது. முத்திரைத் தீர்வையிலே ஒரு பகுதி தரப்படுகிறது. அப்படி வழங்கும் இந்த நிதி அரசே தெரிவித்திருக்கிறபடி 2001-2002-ல் 437 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டு இருக்கிறது. உள்ளாட்சிகளுக்கு வருகின்ற ஆண்டுக்கு எவ்வளவு தரவேண்டும் என்பதைக் கணக்கு எடுக்கிறபோது ரூ.1505 கோடி என்றும், அத்துடன் 11-வது நிதிக் குழு ஒதுக்குவது ரூ.132 கோடி என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், இது இந்த ஆண்டு வெறும் ரூ.437 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ ரூ.800 கோடியிலே இருந்து ரூ.1,000 கோடி இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன்.

முற்பகல் 10-45

அதேபோல, உள்ளாட்சி மன்றங்களுக்காக, ஊராட்சி நிறுவனங்களுக்கு இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்று ஆண்டு நிதிநிலை அறிக்கையில் (56-வது வெளியீடு) அதனுடைய பக்கம் 11-லே தரப்பட்டிருக்கிற அந்த விவரப்படி நிதிநிலை அறிக்கையினுடைய மதிப்பீடு 1,458 கோடியே 86 இலட்சத்து இரண்டு ஆயிரம் ரூபாய். அதிலே அவர்களுக்குத் தரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பது ரூ.774 கோடியே 98 இலட்சம். ரூ.1,458 கோடிக்குப் பதிலாக ரூ.774 கோடிதான் தரப்பட்டிருக்கிறது என்று அரசினுடைய புள்ளிவிவரமே தெரிவிக்கிறது. வரும் ஆண்டிலே ரூ.1,722 கோடி தருவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, இந்த ஆண்டு இவ்வளவு பெரிய வெட்டு எந்த அடிப்படையிலே நிகழ்ந்தது என்பதைப் புரிந்துகொள்ள இயலவில்லை என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, அந்த நிதிநிலை அறிக்கையிலே ஊரக வளர்ச்சித் திட்டங்கள் என்ற தலைப்பிலே தரப்பட்டிருக்கிற திட்ட மதிப்பீடு ரூ.713 கோடியே 10 இலட்சத்து 77 ஆயிரம். அது பக்கம் 9. அதன் திருத்திய மதிப்பீடு — Revised Estimate ரூ.492 கோடியே 92 இலட்சம். ஆகவே, ரூ.713 கோடியிலே இருந்து ரூ.492 கோடியாக அங்கேயும் குறைந்திருக்கிறது. இப்போது இந்த ஆண்டு 437 கோடி ரூபாய் அளவில்

நிறுத்திக்கொள்ள நேரிட்டிருக்கிறது என்று அமைச்சர் சொல்லியிருக்கிற அந்தக் கணக்கின்படி பார்க்கிறபோது, அந்த ரூ.437 கோடி என்பது இவற்றிலே எந்த அடிப்படையிலே வருகிறது என்று தெரியவில்லை. மொத்தம் ரூ.1,437 கோடியாக இருந்தால் ரூ.1000 கோடி அல்லவா அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய தொகையை அளிக்க முடியாத நிலைமைக்கு நாம் ஆளாகியிருக்கிறோம். அது பெருமளவுக்கு அவர்களை, உள்ளாட்சி மன்றங்களுடைய செயல்பாட்டைப் பாதிப்பதாக ஆகாதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மத்திய அரசு இந்த ஆண்டு மத்திய நிதிக் குழு மூலமாக வழங்க வேண்டிய 512 கோடி ரூபாயைக் குறைத்துவிட்டார்கள். அது காரணமாக ஒரு பாதிப்பு ஏற்பட்டதால், நாம் பல்வேறு திட்டங்களுக்காக முதலில் திட்டமிட்ட அந்த அளவு தொகையைச் செலவிட முடியவில்லை என்ற ஒரு காரணம் சொல்லப்படுமானால், அந்தக் காரணம் நியாயமானது என்றாலும், அவர்கள் வெட்டியது ரூ.512 கோடி, நாம் வெட்டியது ரூ.1,500 கோடி என்று ஆகி அது அதைவிட அதிகமாகிறது என்பதை நான் நினைவூட்டாமல் இருக்கமுடியாது.

அதேபோல, இடையிலே வந்த மினி பட்ஜெட் பற்றி அது பட்ஜெட்டாக அறிவிக்கப்படவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அந்த இடையிலே விதித்த வரிகள் கட்டண உயர்வு மூலமாக ஏறத்தாழ 3300 கோடி ரூபாய் பெறப்படும் என்று கருதப்பட்டாலும் நான் அந்த விவரங்கள் எல்லாவற்றையும் வைத்திருந்தாலும்கூட, நேரம் கருதியும், அந்தக் கருத்துகள் யாவும் மாண்புமிகு அமைச்சர் தெளிவாக அறிந்திருக்கக்கூடிய கருத்துகள் என்ற அடிப்படையிலும் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏறத்தாழ அந்த ரூ.3300 கோடியில், 4 மாத காலத்தில் போக்குவரத்துத் துறைக்குக் கிடைத்தது ரூ.1250 கோடி, மின்வாரியத்திற்குக் கிடைத்தது ரூ.1300 கோடி. இவை தவிர, நேற்றோ அல்லது அதற்கு முதல் நாளோ மாண்புமிகு அமைச்சரே தெரிவித்த கருத்து இது. அது தவிர, இந்த 4 மாத காலத்திற்கு அரசாங்கத்திற்குக் கிடைத்தது ரூ.140 கோடிதான் என்று மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டார். ஆகவே, அதிலே அதிக வரவு அரசுக்குக் கிடைக்கவில்லை என்பது அவர் தெரிவித்த கருத்து. அதிக வரவு அரசுக்குக் கிடைக்காவிட்டாலும்கூட, அரசு பொறுப்பேற்றிருக்கிற, மறைமுகமாகப் பொறுப்பேற்றிருக்கிற, மின் வாரியத்திற்கோ, போக்குவரத்துத் துறைக்கோ 2,300 கோடி ரூபாய் 2,400 கோடி ரூபாய் கிடைத்திருக்குமானால், அதுவே



அரசுக்கு ஒரு பெரிய நல்ல வாய்ப்பு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. போக்குவரத்துத் துறையிலே இழப்பு ஏற்படுகிறபோது அரசுதான், அதற்கு வேறு நிதியிலிருந்து ஈடுகட்ட வேண்டிய நிலைமை தொடர்ந்து ஏற்பட்டு வந்திருக்கிறது.

முற்பகல் 10-50

மின் வாரியமும், மின்சாரக் கட்டணங்களெல்லாம் மக்களுடைய நலன் கருதி, அரசால் பல்வேறு ஆலோசனைகள் மூலமாக அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்ட காரணத்தால், அதன் இழப்பினையும் பெருமளவுக்கு அரசு ஏற்றுக்கொண்டுதான் செயல்பட்டு வந்திருக்கிறது. இனி ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்பது வேறு. ஆகவே அந்த இழப்பீடு தொகையில் 2,400 கோடி ரூபாய் அளவு இந்தக் கட்டண உயர்வு மூலமாக அவைகட்கு வந்திருக்குமானால், அதுவும் அரசுக்குக் கைகொடுத்த ஒரு காரியமாக இருக்குமே தவிர, அரசுக்கு அதனாலே நன்மை இல்லை என்றும், வெறும் 140 கோடி ரூபாய்தான் என்றோ தெரிவிப்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல கடந்தகால ஆட்சியிலே கருத்து மாறுபாடு இருக்கலாம். இன்னும் சொல்லப்போனால், ஒரு மாற்றுக் கட்சி என்ற காரணத்தில் கொஞ்சம் கசப்போடுகூட ஒருவரை ஒருவர் விமர்சிக்கிற நிலைமைகூட இருக்கலாம். ஆனால், கடந்தகால ஆட்சியிலே செய்யப்பட்ட காரியங்களை வைத்து ஏதோ பொறுப்பற்ற முறையிலே ஓர் ஆட்சி நடைபெற்றதைப் போலவும், அரசு நிதி முழுவதும் வீணாகிவிட்டதைப் போலவும், அதன் காரணமாக இந்த ஆட்சி, இன்றைக்கு வந்திருக்கும் ஆட்சி பெரிய இடர்ப்பாட்டுக்கு ஆளாகி இருக்கிறது, அதற்கெல்லாம் கடந்தகால ஆட்சிதான் காரணம் என்று அவ்வப்போது நிதியமைச்சர் குறிப்பிடுவதை நான் அறிந்த காரணத்தால் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

ஓர் அரசாங்கத்தினுடைய நிதி, வரவு-செலவு என்பது சில கொள்கைகள் அடிப்படையிலே உருவாகிறதே தவிர, வெறும் ரூபாய், அணா, பைசா கணக்கில் அல்ல. தனி மனிதனுடைய வாழ்க்கையிலேதான் பெரும்பாலும் மாதச் சம்பளம், வீட்டுச் செலவு என்று கணக்கிட்டு, முடித்துக்கொள்ள முடியும். அரசாங்கம் என்பது ஒரு நீண்ட தொலைநோக்கு அடிப்படையிலே செயல்படுகிற ஓர் அமைப்பு. அப்படித்தான் செயல்படவேண்டும். முடியாமல் இருக்கலாம். அதிலே சில தோல்விகள்கூட ஏற்படலாம். அந்த முறையிலே 40 ஆண்டுகளுக்கு

முன்னால், எனக்குத் தெரிந்த, அன்றைக்கு இருந்த நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், கடன் வாங்காமலே ஓர் அரசு செயல்படுவது அரசுக்கு நல்லது என்ற கருத்தை அன்றைக்குக் கொண்டிருந்தார். அது 40 ஆண்டுகளுக்கு முன்னர். அவர்கள் ஒருமுறை பேசியபோது, - நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள நேரிடுமோ என்ற அச்சத்திலே இருக்கிறேன். - இருந்தாலும்கூடச் சொல்ல விரும்புகிறேன். 100 கோடி ரூபாய்க்கு இந்த மாநில அரசு வரவு-செலவுத் திட்டம் தீட்டுவது எனக்குப் பெருமை தருகிறது என்று சொன்னார். வெறும் 100 கோடி ரூபாய்க்குச் சொன்னதாக என்னுடைய நினைவு. அது ஒரு காலம்.

இன்றைக்குக் கோடி கோடியாக வரவு-செலவு செய்கிறோம். அப்பொழுது கடன் வாங்குவது என்று அரசு சாதாரணமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்ற கருத்து நிலவியது. அதற்குப் பின்னர் கடன் வாங்கலாம் என்ற கருத்து ஏற்கப்பட்டது. இப்பொழுது கடந்த ஐந்தாண்டு, பத்தாண்டுக் காலமாக அது மத்திய அரசு, மாநில அரசு, எதுவாயினும் எவ்வளவு அதிகம் கடன் வாங்க முடியுமோ அவ்வளவு வாங்க வேண்டும் என்று திட்டமிடுகின்றன. Economy பொருளியல் துறையிலே, ஏற்பட்டிருக்கிற சிந்தனை மாற்றங்கள், முன்கூட்டி எவ்வளவுக்கெவ்வளவு பணத்தை வாங்கி, சமுதாயத்திற்கு முறையாகப் பயன்படுத்த முடிகிறதோ, அப்படிப்பயன்படுத்திவிட்டால், அதுவே அந்தக் கடனை அடைப்பதற்கு மட்டுமல்லாமல், பெரும் வளர்ச்சிக்கும் வித்திடும் என்று ஓர் எண்ணம் வளர்ந்துள்ளது. Global Economy- ஐப் பொறுத்த வரையில் அப்படித்தான் உருவாகியிருக்கிறது. அதனால்தான் World Bank loan-பெறுவதிலேயே ஒரு திட்டத்தில் ஒரு வளர்ச்சி காணப்படுகிறது. பார்த்தால் 29 ஆயிரம் கோடி, குடிநீர்ப் பிரச்சினைக்கோ அல்லது அதுபோன்ற பிரச்சினைக்கோ இந்த அரசு ஒரு திட்டம் தயாரித்துக் கேட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆக 29 ஆயிரம் கோடி கடன், ஓர் அடிப்படையில் கேட்கிறோம் என்று சொன்னால், வெறும் இரண்டாயிரத்துத் தொள்ளாயிரம் அளவு சிறு தொகை அல்ல.

ஆக அப்படியெல்லாம் ஒரு பெரிய அளவில் கடன் கேட்கக்கூடிய ஒரு நிலைமை இருப்பதை நான் பார்க்கிறபோது, பற்றாக்குறை பட்ஜெட் தயாரிப்பதோ அல்லது கடன் வாங்கி அரசு பல காரியங்களைச் செய்வதோ அல்லது அதிக அளவிலே சமுதாயத்திற்குப் போய்ச்சேரும் காரியங்களான இலவச வேட்டி-சேலையைப்போல, சத்துணவைப்போல, பள்ளிக்கூடக் கட்டடங்களைப்போல, சாலைகள் போடுவதைப்போல, சிறு சிறு கிராமங்களுக்கு எல்லாம் மின்வசதி செய்து தருவதைப்போல,



கிராமப்புறப் பகுதிகளுக்கெல்லாம் உள்கட்டமைப்பை ஏற்படுத்தித் தருவதைப்போல-பல காரியங்களுக்கு, சமுதாய அடிப்படையிலே அவர்தம் பொருளாதாரத்தை உயர்த்தக்கூடிய காரியங்களுக்காக அரசு அதிக அளவிலே கடன் வாங்க வேண்டிய முறையில் நிதி பெற்றுச் செலவிடுவதனாலே ஒரு வளர்ச்சி ஏற்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், Social Welfare Government என்று சொல்லக்கூடிய முறையில், அது விரும்பத்தக்க ஒன்று என்ற கருத்து பல பொருளாதார நிபுணர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதையேதான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கட்டாயமாகச் சொல்லவில்லை. அப்படியும் ஒரு கருத்து இருப்பதை எண்ணிப் பார்த்தால், ஒவ்வொரு கால கட்டத்தில் ஒவ்வொரு விதமான சூழ்நிலை உள்ளபோது, அன்றன்றைக்கு இருக்கிற ஆட்சி, ஒவ்வொருவிதமான எண்ணப் போக்குடன் பல காரியங்களில் ஈடுபடும்.

சாதாரணமாக மகளிர் நலன், மாணவர் நலன், வளர்கிற அந்தப் பருவத்தில் உள்ள குழந்தைகளுடைய பாதுகாப்பு நலன், நொந்துபோன ஆதிதிராவிட சமுதாயத்தினுடைய நலன், பாடுபட்டே தேய்ந்து போகிற உழவர் நலன், முன்னேற முடியாத விவசாயிகள் நலன், வாழ்க்கையிலே ஒளி காணாத நெசவாளர்களுடைய நலன், பின்தங்கிய நிலையிலிருந்து விடுபடாத கிராமங்களினுடைய முன்னேற்றம், உழைப்பாளி வர்க்கமாகிய தொழிலாளர் நலன்—இப்படிப்பட்டவற்றிற்காக அதிக நிதி செலவிட்டு, அதனால் அரசு கடன்பட்ட அரசாக இருந்தாலும்கூட, அதற்குப் பின்னர் வருகிற அரசும்கூட, அந்தச் சமுதாயத்துக்கு ஏற்பட்டிருக்கிற நன்மைகளை அடிப்படையாக வைத்துக் கருதும்போது இந்த நன்மைகள் எல்லாம் இந்தச் சமுதாயத்திலே போய் வேர் விட்டிருக்கின்றன் என்பதால் அந்த நன்மைகளுக்காக இந்தச் சுமையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

அதேபோல கடந்த ஐந்தாண்டு காலத்தில் மைய அரசினுடைய ஊதியக் குழு அறிவித்த ஊதிய விகிதத்தைப் பல மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ளாதபோதுகூடத் தமிழக அரசு இங்கேயுள்ள அலுவலர்களுடைய நிலையை உயர்த்துவது, நடுத்தர வர்க்கமும், அதற்குக்கீழ் நிலையிலே உள்ள வர்க்கத்தினுடைய நிலையும் உயர்வதற்குப் பயன்படும் என்ற முறையில் எடுத்துக்கொண்ட காரணத்தால், அந்த அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியத்தாலும் அவர்களுக்கு

வழங்கப்பட்ட அகவிலைப் படியாலும், விவசாயிகளுக்கு மின்சாரம் இலவசமாக வழங்குவதை ஒரு கொள்கையாகத் தொடர்ந்து மேற்கொண்டதாலும் ஒரு காலகட்டத்திலே அதற்கு வரையறுத்த கட்டணம் இருந்தாலும்கூட, பின்னர் முழுவதையுமே நீக்கி இலவசமாக வழங்குகிற ஒரு முறையை மேற்கொண்டதாலும், பொது விநியோகத்திலே வழங்குகிற அரிசியை விலையேற விடக்கூடாது என்பதற்காக—3 ரூபாய் 50 காசுக்கே வழங்குவதைத் தொடர்ந்து நீடித்ததாலும்—மத்திய அரசு அப்பொழுது அரிசி விலையை ஒரு காலகட்டத்தில் உயர்த்தியபோதும்—அப்பொழுதுகூட நீடித்ததாலும், பேருந்து போக்குவரத்துக் கட்டண விகிதாச்சாரத்தை உயர்த்தினால், அது சாதாரணமான மக்களுக்கு அதிக இடர்ப்பாடாக இருக்கும்; பாதிக்கப்பட்ட அந்த மக்கள் கூக்குரல் எழுப்புவார்கள் என்ற அந்த அடிப்படையிலேயும், செய்த பல்வேறு செயல்கள் காரணமாகவும், அவற்றுடன் சத்துணவு, இலவச கைத்தறி புடவை, வேட்டி இவையெல்லாம் சமுதாயத்தினுடைய அடித்தட்டு மக்களுக்குப் பயனளிக்கும் என்ற காரணத்தால், நிறைவேற்றியதன் காரணமாக, கடந்த கால அரசினுடைய செயல்பாட்டில் பொருளாதாரத்திலே இன்றைக்குக் கடன் சுமை ஏறிவிட்டது என்று இந்த அரசு கருத இடமிருந்தாலும்கூட, சமுதாய நன்மைக்காக இந்த அரசு ஏற்றுக்கொள்ளவேண்டிய சுமைதான் அது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஒரு வேண்டுகோளாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஒன்று, குழந்தைகளுடைய ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதிலே இந்த அரசுக்கு அக்கறை இருப்பதாகப் பல்வேறு அறிவிப்புகள் தெரிவிக்கின்றன. குழந்தைகளின் நலனுக்கு மிகவும் பயனுள்ள ஓர் ஊட்டச் சத்தாக முட்டை கருதப்படுகிறது. நான் தினம் முட்டை சாப்பிடலாம். அதற்காக நான் பேசவில்லை. குழந்தைகளுக்கு அந்த வளர்கிற வயதிலே மிக இன்றியமையாததாக இருப்பது முட்டை என்ற ஒரு கருத்து நிலவுகிறது. அதற்குச் சமமாக வேறு எதைக் கொடுத்தாலும்கூட அது அந்த அளவுக்கு nutritious food-முழு அளவில் குழந்தைகளுக்குப் போய்ச் சேர்கிறதா என்றால் அதனால் ஒரு குறைபாடு வருகிறது. குறிப்பாக, ஓர் ஏட்டிலே பார்த்தேன். உருளைக் கிழங்கைத் தரும்படி பணித்திருக்கிறார்கள். ஒரு உருளைக் கிழங்கைத்தான் ஆறாகப் பங்கிட்டு ஆறு குழந்தைகளுக்குத் தர வேண்டியிருக்கிறதாம். மொத்தம் 30 குழந்தைகள் இருக்கின்றன. ஐந்தாறு உருளைக் கிழங்குதான் வாங்க முடிகிறது என்று ஓர் ஏட்டிலே வந்தது. அது உண்மையோ இல்லையோ எனக்குத் தெரியாது. வேறு வகை



சத்துணவு இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஆனால் முட்டையைப்போல இன்றியமையாத சத்தாக அவை கருதப்படவில்லை. இன்னொரு பக்கம் முட்டை வியாபாரிகள்—வியாபாரிகள் என்றால் தனிப்பட்ட வியாபாரிகளைக் கருதிச் சொல்லவில்லை. மொத்த உற்பத்தி செய்கிறவர்கள், இரண்டாயிரம், மூவாயிரம் உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் Egg farm—கோழிப் பண்ணை வைத்திருக்கிறவர்கள். அவர்கள் உற்பத்தி செய்கின்ற முட்டைகள் வாராவாரம் செலவாகும் நிலைமை இல்லாத காரணத்தால் அவர்களுக்கு விலை குறைகிறது. நஷ்டம் வருகிறது என்றாலும் அவர்களுடைய தொழில் நஷ்டத்தைப்பற்றி எனக்குக் கவலையில்லை. பயன்படக்கூடிய ஒரு பொருளைக் குழந்தைகளுக்குப் பயன்படுத்துவதற்கு சத்துணவில் முட்டையைப் பயன்படுத்துவதை அரசு கருதவேண்டும். ஏனென்றால், அதனால் ஏற்படுகிற செலவுத் தொகை, இழப்பைவிடப் பலன் அதிகம். அது எப்படிப் பயன்மிகும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்..

அதைப்போல இன்னொன்று. கைத்தறி இலவச வேட்டி, சேலை நிறுத்தப்பட்டிருப்பதை, அந்தப் புள்ளிவிவரத்தைப் படிக்கிறபோது எடுத்துக் காட்டினேன். அதற்கு என்னென்ன காரணங்கள் சொல்லப்பட்டன? 40 கோடி ரூபாய் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது, இன்னும் ஏறத்தாழ 100 கோடி ரூபாய் வழங்கப்பட வேண்டும். கைத்தறி புடவை, வேட்டி வாங்கி Co-optex Godown-கிடங்கிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதை வழங்குவதற்கு, யாருக்கு வழங்குவது என்ற தகுதியைத் தீர்மானிப்பதற்காக ஒரு புள்ளிவிவரம் எடுப்பதற்கு அரசு முன்வந்தது. அந்தப் புள்ளிவிவரம் எடுக்கிறபோது அதிலே ஏற்பட்ட சில குழப்பங்கள் காரணமாக புள்ளி விவரம் எடுப்பது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, அது யாருக்கும் வழங்காமல் அப்படியே தேங்கிக் கிடக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அது நிர்வாகத்திலே ஏற்பட்ட குறை அல்ல. எடுக்கப்பட்ட கொள்கை முடிவு காரணமாக அது தேங்கிக் கிடப்பதாக ஏடுகளிலே நான் பார்க்கின்றேன்.

முற்பகல் 11-00

அந்த ஏழைகளுக்கு வேட்டி, புடவை வழங்க வேண்டும் என்பது பொதுவாக எல்லாரும் ஒத்துக்கொள்ளக்கூடிய கொள்கைதான். அந்த வேட்டி, புடவை ஏழைகளுக்குப் போய்ச் சேருவது மட்டுமல்ல அதன் பலன்—அதை உற்பத்தி செய்கிற அந்தச் சாதாரணமான நெசவாளி இந்தக் குறிப்பிட்ட வேட்டி, குறிப்பிட்ட புடவை மட்டும்தான்

தயாரிக்கிறவர்களாக நாட்டிலே பல இடங்களிலே இருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களை எனக்கும் 40, 50 ஆண்டு காலமாக ஓரளவிற்குத் தெரியும். ஒவ்வொரு ஊரிலேயும் உள்ளவர்கள் ஒவ்வொரு வகையான துணியைத்தான் கைத்தறியில் தயாரிப்பார்கள். அதிலே மக்கள் பயன்படுத்தக்கூடிய, ஏழைகள் பயன்படுத்தக்கூடிய அப்படிப்பட்ட புடவைகள் சில வட்டாரங்களிலேதான் தயாரிக்கிறார்கள். அதைத்தான் கோ-ஆப்டெக்ஸிலே வாங்குகிறார்கள். அதுவும் நான் தமிழ்நாட்டிற்குள்ளே தயாரிக்கிறதைத்தான் சொல்கிறேன். வேறு எங்கு தயாரித்தாலும் அதை வாங்குவது முறையல்ல என்பது பல ஆண்டுகளாக திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே ஏதாவது குறைபாடு ஏற்படலாம். குறைபாடு இல்லாத இடமேயில்லை என்பதை நான் அரசிற்கு நினைவூட்டுகிறேன். குறைபாடு வராமல் இருக்காது. நான் எழுதுகிற கட்டுரையிலேகூட தமிழில் தப்பு இருக்கிறது. எனக்குத் தமிழ் படிப்பதில், தமிழில் ஆர்வம் உண்டு. ஆனாலும் எழுதும்போது என்னை அறியாமலேயே சில தவறுகள் வரத்தான் செய்கின்றன. அதைப்போல குறைபாடு இருக்கும்போது அதற்கு உரிய நடவடிக்கை எடுத்து மறுபடியும் திருத்தி செயல்படுத்த வேண்டும். நாம் பெற்றெடுத்த குழந்தை தவறிக் கீழே விழுகிறபோது அங்கே சாணம் இருந்து, அந்தச் சாணத்திலே விழுந்துவிட்டால் சாணத்திலே விழுந்த குழந்தை என்று அதைத் தள்ளிவிட்டுப் போய்விட முடியாது. அதைப்போல எதிலும் சில குறைபாடுகள் வரலாம்.

அரசாங்கம் என்பது ஒரு பெரிய இயந்திரம். அறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள். அரசு போடுகிற திட்டங்கள் எல்லாம் மக்களை முழுவதும் போய்ச் சேரவில்லை என்றால் அது ஒரு காரணம். பலர் சேர்ந்து பணியாற்றும் நிலையே. கையிலே உள்ள ஒரு பனிக்கட்டியை—ஐஸ்—அதை ஒரு வரிசையின் கடைசியிலே உள்ளவர் இடத்திலே கொடுக்கச் சொல்லி வரிசையிலே பக்கத்திலே உள்ளவர்களிடத்திலே கொடுத்தால் அது அத்தனை பேரிடத்திலே கைமாறி கடைசி கைக்குப் போகிறபோது அது நீராகத்தான் போய்விடும். அது இயற்கையிலேயே ஏற்படக்கூடிய ஒரு குறைபாடு. வேறு சில குறைபாடுகள் இருந்தாலும் அவை போக்கப்பட வேண்டும். ஆனால் இந்தக் கைத்தறி வேட்டி, புடவை ஆகியவற்றை வழங்காதது காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்பு பெரும் அளவிலே இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது, இந்த 1½ கோடி பேர் 1¼ கோடி பேருக்கு வேட்டி, சேலை கொடுப்பது என்கிற அந்த ஒரு திட்டத்தை



மட்டும் உள்ளடக்கியதாக இல்லை. இன்னொரு பக்கம் ஏறத்தாழ பல இலட்சம் நெசவாளிகள் அதனால் ஒரு வார காலமாவது பிழைப்பதற்கு, தொழில் நடத்துவதற்கு, நெசவு செய்வதற்கு பெரிய வாய்ப்பு இருக்கிறது. அதனால் இதைக் கைவிட்டு விடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, அரிசிக்கு வரி 2 சதவிகிதம், கோதுமைக்கு 2 சதவிகிதம், பருப்புகளுக்கெல்லாம் 4 சதவிகிதம் என்று இந்த வரி போட்டிருப்பதிலே, நியாய விலைக் கடை அரிசிக்கு எந்தவிதமான வரியும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. அதுவரையில் மகிழ்ச்சி. ஆனால் மற்றவர்கள் வெளியிலே விற்கின்ற அரிசிக்குக்கூட இந்த 2 சதவிகிதம் வரி போட்டிருப்பது ஒரு வெறுப்பை ஏற்படுத்துகிறது. இது psychological factor என்றுகூடச் சொல்லலாம். இவ்வளவு நாளாக நாங்கள் வரி கட்டவில்லை, இப்போது அரிசிக்குக்கூட நாங்கள் கணக்கு வைத்துக்கொண்டு வரி கட்ட வேண்டும் என்பதிலே தொடங்கி, விலை ஏறும் என்பதிலேயும், ஆலையிலே அரிசி உற்பத்தி செய்பவர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பதிலேயும் பெரும் கவலை தெரிவிக்கின்றனர். இந்த மாதிரி உணவுப் பொருளான staple food என்று சொல்லக்கூடிய அரிசிக்கேகூட வரி போடக்கூடிய நிலைமை தமிழ்நாட்டிலே ஏன் வரவேண்டும் என்னும் கேள்வி எழும்பி, பல்வேறு விளைவுகளைத் தந்திருக்கின்றன. எனவே அந்தக் கோணத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

உணவுப் பொருள்களுக்கு வரி விலக்க வேண்டும் என்று இங்கே திரு. எஸ்ஆர்பி. அவர்கள் பேசுகிறபோது சொன்னதாக நான் கருதுகிறேன். உணவுப் பொருள்களுக்கு இருந்த வரியை எடுப்பதுதான் கடந்த 4 ஆண்டு காலம், 5 ஆண்டு காலம் தொடர்ந்து அறிவித்து நிறைவேற்றி வந்திருக்கிறோம். நான் அந்தப் பட்டியல்களை எல்லாம் வைத்திருக்கிறேன். அமைச்சருக்கு வேண்டுமானால் தரவும் தயாராக இருக்கின்றேன். அதாவது, இப்போது எந்தெந்தப் பொருள்களுக்கு வரி போட்டிருக்கிறோமோ அதிலே உணவுப் பொருட்கள், எண்ணெய்கள், சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய அந்தப் பொருட்கள், இன்றியமையாத பொருட்களாய் கட்டாயமாக மக்கள் பயன்படுத்தியே தீரவேண்டிய பொருட்களுக்கு எல்லாம் 4 ஆண்டு காலத்திலே தொடர்ந்து வரி நீக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-05

விவரம் சொல்ல நேரமில்லை, இருந்தாலுங்கூடச் சொல்கிறேன். 1996-97-லே பருப்பு, மிளகாய், தனியா, மஞ்சள், புளி, சீரகம், பெருங்காயம், வெல்லம் ஆகியவற்றுக்கு முழுமையான வரிவிலக்கு. சீயக்காய், வெள்ளியினால் ஆன மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு இவற்றிற்கும் முழுமையான வரி விலக்கு. நெல் உமி, நொய் அரிசி, தேங்காய் மட்டை— முழுமையான வரி விலக்கு. 100 கோடிக்குக் குறைவாக விற்பனை உள்ள நிறுவனங்களுக்குக் கூடுதல் விற்பனை வரி முழுவதுமாக நீக்கம்.

இதனால் 70 ஆயிரம் பேருக்கு மேற்பட்ட வணிகர்கள் பயன்பெறுவார்கள். சமையல் எரிவாயு 11.6 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக வரி குறைக்கப்படுகிறது. இப்படி கடந்த 4 ஆண்டு காலம் தி.மு.க. ஆட்சியில் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது வியாபாரிகளுடைய வேண்டுகோளையெல்லாம் கேட்டு, அவ்வப்போது எது எதைக் கட்டாயமாகக் குறைப்பது நன்மை பயக்கும் என்று கருதி செய்யப்பட்டது.

விவசாயிகள் பயன்படுத்தும் யூரியா உரத்திற்கு 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதம், சொட்டு நீர்ப் பாசன சாதனங்களுக்கு 11 சதவீதத்திலிருந்து 4 சதவீதம். பனியன் உள்ளிட்ட பின்னலாடைகளுக்கு 4 சதவீதத்திலிருந்து ஒரு சதவீதம், பருத்திக்கு 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதம், இன்னும் தட்டி, முறம், கூடைகள், தேங்காய் ஓடுகள், சீயக்காய் பொடி, தொன்னை, இவற்றிற்கு முழு வரி விலக்கு, இப்படி ஒரு பெரிய பட்டியல் போடுமாறு 3 ஆண்டுகளில், 4 ஆண்டுகளில் தொடர்ந்து வழங்கப்பட்டது. இவை வியாபாரிகளுடைய தனிப்பட்ட நன்மைக்காகக்கூட அல்ல. பொருட்கள் விலையேற்றத்தை எப்படியும் இது குறைக்கத்தான் செய்யும். ஒரு நாலணா ஏறுகிற விலை 20 பைசா தான் ஏறும். ஆகவே, இது ஒரு வகையில் விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த உதவும் balancing factor. ஆகவே, அந்த முறையில் இன்னுமொரு முக்கியமான கருத்து.

விற்பனை வரியோ அல்லது வருமான வரியோ எவ்வளவு அதிகமானவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்று கருதப்படக் கூடாது. எவ்வளவு எண்ணிக்கையிலே குறைவானவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்பதுதான் அதனுடைய பயனை அதிகப்படுத்த உதவும். இந்த வரிகள் விதிப்பதில் இது அடிப்படை நோக்கமாக



இருக்கலாம். 10 இலட்சம் வியாபாரிகளிடத்திலே வசூலிக்கக்கூடிய வரியினாலே கிடைக்கக்கூடியதிலே 10, 15 விழுக்காடுதான் 5 இலட்சம் வியாபாரிகளிடத்திலே வசூலித்தால் குறையும். அதிகமான வியாபாரிகளிடத்திலேயிருந்து விற்பனை வரி வசூலிப்பதற்காக எடுத்துக்கொள்கிற முயற்சிகள் காரணமாக அரசு அலுவலர்களுடைய பணி, அவர்களுடைய உழைப்பு, நேரம், உழைப்பு நேரம் என்கிற வரைக்கும்தான் நான் சொல்ல முடியும். அதற்குப் பிறகு இடையில் என்னென்னவோ இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் ஒரு எல்லை ஏற்படுத்தி அந்தச் சிக்கல்கள் வளர்ந்துகொண்டே போவதைத் தவிர்ப்பதற்கும், எவ்வளவு பொருட்களுக்கு வரி குறைக்க முடியுமோ, வரி இல்லாத ஒரு நிலைமை இருக்க முடியுமோ, அதற்கு வழிகாண வேண்டும். கட்டாயமாக இருந்தால், எதற்கு வேண்டுமானாலும் வரி போடலாம், அது வேறு. கட்டாயம், புகையிலைக்கு நீங்கள் எவ்வளவு வரி போட்டாலும் போடலாம்.—நான் புகையிலை போடுவதை விட்டுவிட்டேன். அதனால் தைரியமாகச் சொல்கிறேன். (சிரிப்பு)—ஆகவே, வரி போடலாம் அல்லது வேறு விதமான சமுதாயத்திற்குக் கேடு பயக்கக்கூடிய பொருட்கள் அல்லது வசதியுள்ளவர்கள் மட்டுமே பயன்படுத்துகிற பொருட்கள் அல்லது கேளிக்கைக்குத் தொடர்பான பொருட்கள் அவற்றிற்கு வரி போடுவதைப் பற்றி நான் குறைபட எனக்கு நியாயம் கிடையாது. ஆனால், இப்போது நான் ஒரு விளக்கத்துக்காக இதைப் படிக்கிறேன்.

'நமது மாநிலத்தில் ஏற்கெனவே வரி விதிக்கப்படாமலிருந்த அரிசி மற்றும் கோதுமையின் முதற்கட்ட விற்பனை மீது 2 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ளது. வெல்லம், மிளகு, பருப்பு வகைகள் போன்ற சாதாரண மக்கள் பயன்படுத்தும் பொருட்களுக்கு 4 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ளது. வரி விலக்கு செய்யப்பட்டிருந்த சித்தா, யுனானி, மருந்துகள் மீதும், சாம்பிராணி மீதும் 4 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ளது.' அதிலே வேடிக்கையான ஒரு காரணம் அதன் பின்னணியாகச் சொல்லப்படுகிறது என்ன என்றால், அலோபதி மருந்துகளுடைய விலை ஏறும். அவை நாளுக்கு நாள், மார்க்கெட்டிங் அடிப்படையிலே விலை உயரும். ஆகவே, இந்தப் பொருட்களுக்கு, சித்தாவுக்கும் வரி போடுகிறோம். அதுதான் விலை உயரும் என்றால், இதற்கு ஏன் வரி போட வேண்டும்? அது வேறு, இது வேறு. இன்னும் சொல்லப்போனால், அதோடு போட்டிப் போட்டு சித்தாவோ, ஆயுர்வேதாவோ வளர முடியாது. அந்த மருந்துகளை சமுதாயத்திலே மெல்ல மெல்ல பயன்படுத்துகிற பழக்கத்தை வளர்க்க வேண்டியிருக்கிறது.

இந்தியாவிலே தமிழ்நாடு ஒன்றுதான் சித்த மருத்துவத்திற்குக் கை கொடுக்க வேண்டிய மாநிலம். ஆயுர்வேதத்திற்கு 10, 12 மாநிலங்களிலே மிகவும் முக்கியத்துவம் தரும் பல்கலைக்கழகங்கள்கூட நடைபெறுகின்றன. யுனானிக்கு வேறு பல மாநிலங்களிலே அதற்குத் தேவையான அளவிற்கு ஊக்கம் தரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

தைக்கப்பட்ட கைக்குட்டைகள் மீது 4 விழுக்காடு வரி. பிறகு பல பொருள்களுக்கு entry tax—நுழைவு வரி. அலுமினியம், கல்நார் சிமெண்ட் தகடுகள், கருங்கல், செராமிக் ஓடுகள், காகிதம், கோதுமைப் பொருட்கள், இரும்பு உள்ளிட்ட 15 வகையான பொருட்களுக்கு நுழைவு வரி புதியதாக விதிக்கப்பட்டுள்ளது. இதிலே அலுமினியம் பற்றி நான் கேள்விப்பட்டதெல்லாம் ஏழைகள் பயன்படுத்துகிற பாத்திரங்களுக்கு அலுமினியம் பயன்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், பிச்சை எடுக்கிறவர்கள்கூட கையிலே அலுமினியம் பாத்திரம்தான் வைத்திருப்பார்கள். எவர்சில்வர் இருக்காது. ஆகவே, இப்படிப்பட்ட பொருட்களுக்கு இந்த வரி வேண்டுமா என்பதை entry tax தேவைதானா என்பதை ஆலோசிக்க வேண்டும்.

பட்டுப் புடவைகளுக்குக்கூட வரி விதிக்க ஆடம்பர வரிச் சட்டம் திருத்தியமைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அதை திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும், நேற்றைக்கு முன்தினம் பேசியவர்களும், தி.மு.க. சார்பிலே பேசிய திரு. கோ.சி. மணி அவர்களும், கைவிடுமாறு கூறினர். பட்டுப் புடவை என்னதான் அது விலை கூட இருந்தாலும், அது நம்முடைய நாட்டின் கலாச்சாரத்திலே ஒரு பெருமைக்குரிய சின்னமாக ஆகிவிட்டது.

முற்பகல் 11-10

மகாத்மா காந்தியடிகள் பட்டைப் பயன்படுத்துவதை ஒத்துக் கொள்ளாதவர்கள். சிலபேர் பயன்படுத்தாமல் இருப்பதை ஒரு முறையாகக்கூட வைத்திருக்கலாம். ஏனென்றால் கலாச்சாரத்திலே இடம் பெற்றுவிட்ட பின்னர் அந்தக் கொள்கைகள்கூடப் பல நேரங்களில் மறைந்து போய் விடுகின்றன. ஆனால், பட்டுப் புடவைகளில் 3,000 வரையிலே விலையுள்ள புடவைக்கு எல்லாம் வரி என்று சொன்னால்,—50,000, இலட்சம் ரூபாயிலே கூடப் புடவை இருக்கிறது. அது வேறு. 3,000, 4,000, 5,000-ல் உள்ள புடவைகளுக்கு எல்லாம் வரி என்று சொன்னால்,



அது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை. பெரும்பாலும் Subsidy மூலமாகத்தான் கைத்தறியைக் காப்பாற்றி இருக்கிறோம். ரூபாய்க்கு 30 பைசா வரையில், ஆண்டு முழுவதும் Permanent subsidy கொடுத்துத்தான் கைத்தறியைக் காப்பாற்றுகிறோம். பருவ காலங்களில் மட்டும் 10 பைசாவாக இருந்தது. விழாக்காலங்களில் பண்டிகைக் காலங்கள் மட்டும் இருந்தது. அப்புறம் 20 பைசா ஆயிற்று. அப்புறம் ஆண்டு முழுவதும் வழங்கப்பட்டது. இப்போது ஏறத்தாழ என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் 30 பைசா Subsidy-யைக் கொடுத்துத்தான் கைத்தறியைக் காப்பாற்றுகிறோம். இல்லையென்றால், கைத்தறி குற்றுயிராகத்தான் ஆகி இருக்கும். கதரும் அப்படித்தான் பாதிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், வெறும் மனித உழைப்பை மட்டும் கொண்டு தயாரிக்கப்படுகிற பொருள்களுக்கு சமுதாயத்திலே நாளுக்கு நாள் தேவை குறைந்து வருகிறது. அல்லது பயன்பாடு குறைந்து இருக்கிறது. அதைப் பயன்படுத்தித்தான் தீரவேண்டுமென்ற நிலைமை இருக்குமானால் எந்த அளவுக்கு அவற்றுக்கு ஓர் ஊக்கம் தரப்படவேண்டுமோ, அது இன்றைக்குத் தரப்படவில்லை. ஆகவே, பட்டுப் புடவைகளுக்கு வரி என்பதுகூட நம்முடைய நிலையில் அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை.

எனக்கு ஒருவர் சொன்ன கருத்து அது சரியா அல்லவா என்றுகூட எனக்குத் தெரியாது. ஒவ்வொரு 3 மாதத்திலேயும் பட்டுப் புடவை வியாபாரிகள், விற்ற துணி போக விற்காத துணிகளுக்கு அவர்களுடைய inventory மூலமாக பட்டியலில் எவ்வளவு துணி இருக்கின்றனவோ, அந்த அடிப்படையிலே அவற்றிற்கு வரி வசூலிக்கப்படும் என்று ஒருவர் சொன்னார். நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி இருக்காது என்றுதான் நான் சொன்னேன். Inventory அடிப்படையில் கடையில் இருக்கிற stock-ஆக உள்ளவற்றின் அடிப்படையிலே வரி வாங்குவதாக இருந்தால், அது விற்காதபோது அவன் எப்படி வரி கட்டுவான்? ஆகவே, அப்படி அது இருக்காது என்று நான் அந்த நண்பருக்குச் சொன்னேன். இருந்தாலும்கூட, இந்த வரி விகிதம் தேவையற்றது என்பதை நான் சொல்கிறேன். தேவையற்றது என்று சொன்னால், எங்களுக்கு வருமானம் வேண்டுமே என்று அமைச்சர் சொல்லக்கூடும். அது வேறு, வருமானம் வேண்டும். எனினும் இந்த வரி மூலமாக அந்த வருமானம் வேண்டாம் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதேபோல் Value Added Tax என்பது வரி விதிப்பில் மத்திய அரசு கொண்டு வந்ததொரு கொள்கை. இப்போது இரண்டு மூன்று ஆண்டுகளாக அது பேசப்பட்டு வருகிறது. அடுத்த

ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் Value Added Tax நடைமுறைக்கு வருமென்றும் அதன்காரணமாகத்தான் நாம் இங்கே பல்வேறு விதமாக விற்பனை வரியை மாற்றியமைக்கிறோம் என்றும் ஒரு கருத்து அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது. அது பற்றி நான் சொல்ல விரும்புகிறேன்.

Value Added Tax என்பது ஒரு வரி விதிப்பு முறை. உலகத்திலே எல்லா நாடுகளிலேயும் அது வெற்றிபெறவில்லை. அது வெற்றி பெறுமா, பெறாதா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், இந்த Value Added Tax குறித்து மத்திய சர்க்கார் பல்வேறு மாநிலங்களுடைய நிதியமைச்சர்களை அல்லது முதலமைச்சர்களைக் கலந்தாலோசித்த நிலையில், அது உடனடியாக நடைமுறைக்கு வருவது கடினம் என்ற கருத்து ஏற்பட்டு அதனால் அதை ஒத்திவைத்து இருப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன். உண்மையா அல்லவா என்று எனக்குத் தெரியாது. ஒத்திவைத்து இருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். அல்லது வரும் ஏப்ரல் 1 ஆம் தேதி வரைதான் அதை ஒத்திவைத்து இருக்கிறார்களா என்பதும் எனக்குத் தெரியாது. அப்படி இருக்குமானால் அந்த Value Added Tax நடைமுறைக்கு வரும் அடிப்படையில் 8 விழுக்காடு வரி என்ற பொருள்கள் எல்லாம் 12 விழுக்காடு, 16 விழுக்காடு வரைக்கும் உயருவதாக தெரிகிறது. ஆனால், அது ஒரு நடைமுறைத் திட்டம். அதற்கு ஒரு common formula என்று வைத்திருப்பார்கள். அந்த அடிப்படையிலே இந்த 8 விழுக்காடு வரி உள்ளவை எல்லாம் திடீரென்று 10 ஆக, 12 ஆக, 16 ஆக உயருவதாகத் தெரிகிறது. ஒரு கருத்து வருகிறது. அப்படி 8 விழுக்காடு எல்லாம் 12 விழுக்காடாக ஆக வேண்டுமானால் அது வருகிற ஆண்டிலே அந்த Value Added Tax-ஐ நடைமுறைப்படுத்துவதை அவர்கள் அறிவித்தவுடன் அந்த முறையை நாம் மேற்கொண்டு விடலாம். இப்போதே மேற்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இல்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், நெல் கொள்முதல் செய்வது என்பது பற்றி ஒரு கருத்து கூறப்பட்டது. கடந்த ஆண்டு ஏராளமாகக் கொள்முதல் செய்து அதை வைத்துவிட்டுப் போய்விட்ட காரணத்தால் நமக்கு 1400 கோடி அளவுக்கு ஒரு பெரிய பொறுப்புச் சுமையை கடந்த ஆட்சி ஏற்றிவிட்டது என்று கூறப்படுகிறது. இந்த 1,400 கோடி ரூபாயிலே என்னதான் அரசாங்கம் செலவு பண்ணினாலும், 1300 கோடி ரூபாய் விவசாயிகளிடம்தான் போயிருக்கிறது. 1300 கோடி ரூபாய் அரசாங்கம் விவசாயிகளிடம்தான் கொடுத்திருக்கிறது. கைத்தறித் துணி வாங்கினால் எப்படி அந்தக் கைத்தறி



நெசவாளர்களுடைய கூட்டுறவுச் சங்கத்திற்குத்தான் போகிறதோ அதுபோல எவ்வளவு கொடுக்க நேரிட்டது என்று சொன்னாலும் அது விவசாயிகளுக்குத்தான். காலம் காலமாக அவர்களுடைய நிலையை நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்களானால் தஞ்சை மாவட்டத்தில் இருந்து 5, 10 ஏக்கராவுக்கு மேற்பட்ட நிலம் வைத்திருந்த விவசாயிகள் எல்லாம் மூப்பனார் குடும்பத்தைத் தவிர பலபேர் மாவட்டத்திலிருந்து வெளியே வந்துவிட்டார்கள். ஏனென்றால், அவர்கள் ரொம்ப வசதியானர்கள். பெரிய அரசியல் நடத்தக்கூடியவர்கள். அவர்கள் வேண்டுமானால் அங்கேயே இருக்கலாம். சாதாரணமானவர்கள், நடுத்தர விவசாயிகள் எல்லாம் வெளியேறிவிட்டனர். எனக்குத் தெரிந்து, எங்கள் கிராமத்திலே 10, 12 வீடுகள், அந்தக் கிராமத்திலே படித்தவர்கள் 12 பேர்; 12 பேர் ஊரிலே இல்லை. படிக்காதவர்கள், வேறு வழியே இல்லாதவர்கள் எல்லாம் அங்கேதான் இருக்கிறார்கள். அதனாலே விவசாயம் நாளுக்கு நாள் நம்மை பாதித்துக்கொண்டிருக்கிறது. அப்படிப் பாதிக்கிற காரணத்தாலே அவர்கள் உற்பத்தி செய்த நெல்லை விற்க முடியவில்லையென்றால் அவர்களால் வாழ்க்கை நடத்த முடியாது. இன்னும் தற்கொலைக்குத் துணியவில்லை. அந்த இடத்திற்குத் தள்ளப்படுகிறார்கள். ஒரு தொழிற்சாலையை மூடிவிட்டால், அந்தத் தொழிற்சாலையிலே வேலை செய்கிற தொழிலாளி என்ன கதிக்கு ஆளாகிறானோ அதுமாதிரிதான் இவர்கள் நிலையும் உள்ளது.

முற்பகல் 11-15

இரண்டாவது, நெல் உற்பத்தி செய்கிறபோது, அவன் எப்படியோ கடன் வாங்கி உற்பத்தி செய்துவிடுகிறான். அந்த உற்பத்தியிலும் சில நேரங்களிலேதான் நல்ல விளைச்சல் கிடைக்கும். ஆனால், அதற்குள்ள பலனை அவன் பெறவில்லை. இந்தச் சூழ்நிலையிலேகூட தஞ்சைப் பகுதியில் அரசு கொள்முதல் சுணக்கத்தாலும், இடையில் நிறுத்தப்பட்டதாலும், நெல் விலை மிகவும் குறைந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி என்று கருதுகிறேன் அல்லது வேறு ஒருவர் சொன்னார் என்று கருதுகிறேன். ஒரு மூட்டை 100 ரூபாய் அளவிற்குக்கூட தனிப்பட்டவர்களிடத்திலே விற்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். 450 ரூபாய் எங்கே? 100, 150-க்குக் கூட நெல்லை விற்றுவிட்டு பிழைப்பு நடத்த வேண்டிய நிலைமையிலே பல பேர் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன்.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 ஏப்ரல் 8

அதேபோல் வட ஆற்காடு, ஆரணி, வேலூர் பகுதிகளில் நெல் மூட்டைக்கு *100* ரூபாய் குறைந்து—ஏற்கெனவே விற்ற விலை ரூ. *450* என்றால், இப்போது ரூ. *350*-க்குத்தான் விற்கிறது. அதற்கு இரண்டு காரணங்கள். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னாலே ஆந்திராவிலே, கேரளாவிலேயிருந்து அரிசி இங்கே வரவில்லை என்றும் கேரளாவிற்கு அனுப்புகிற அரிசி அனுப்ப முடியவில்லை என்றும் கூறுகின்றனர். அது ஓர் இடையூறு. ஆனால், இப்போது வெளி மாநில அரிசியும் வரக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது. அந்த நிலைமை இருப்பதன் காரணமாக நெல் கொள்முதலில் அரசுக்கு இழப்பு ஏற்பட்டாலும் நெல் உற்பத்தியாளர்கள் முற்றிலும் பாதிக்கப்படாமல் பாதுகாத்திட வேண்டும் என்று திரு. கோ.சி. மணி அவர்கள் இங்கே கேட்டுக்கொண்ட அடிப்படையில் தொடர்ந்து நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, அன்றைக்கு நிதியமைச்சர் கூறினார். நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் திரு. மணி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்ட விலைவாசி நிலவரத்தைப் பற்றி அமைச்சர் ஒரு புள்ளிவிவரம் கொடுத்தார். அந்த விவரங்கள் எல்லாம் பத்திரிகையிலே வந்திருக்கின்றன. அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த விவரத்தில் நான்குதான் அதே விலையிலே இருக்கின்றன. கடலைப் பருப்பு, அவர் சொன்னார் *25* ரூபாய்; அது *25* ரூபாய்தான். ரேடியோ ஆயில், அமைச்சர் சொன்னார் *49* ரூபாய், அது இன்றைக்கும் *49* ரூபாய்; *50* காசுகள்தான். பாமாயில் *34* ரூபாய் என்று அமைச்சர் சொன்னார்; அது *34* ரூபாய்தான். பூண்டு *48* ரூபாய் என்று சொன்னார்; அது *40* ரூபாய்க்கே கிடைக்கிறது. ஆனால் பொன்னி அரிசி ரூ.*19.50* என்று அமைச்சர் சொன்னார்; திரு. மணி கூட *19* ரூபாய் என்றுதான் சொன்னார்; அது இன்றைக்கு *22* ரூபாய் மிளகாய் *29* ரூபாய், அமைச்சர் சொன்னார்; நான் விசாரித்துப் பார்த்துவிட்டேன் அது *44* ரூபாய். ஒரு வேளை *42* ரூபாயிலேகூட கிடைக்கலாம். கேட்பவர்கள் திரு. தம்பிதுரை மாதிரி செல்வாக்குடன் இருந்தால் *42* ரூபாய்க்கும்கூட கிடைக்கும். துவரம் பருப்பு *25* ரூபாய் அமைச்சர் சொன்னார்; அது இன்றைக்கு *32* ரூபாய். உளுத்தம்பருப்பு *30* ரூபாய் அமைச்சர் சொன்னார்; அது *32* ரூபாய். நல்லெண்ணெய் *42* ரூபாய் அமைச்சர் சொன்னார்; அது *44* ரூபாய். கடலை எண்ணெய் *42* ரூபாய்; அது இன்றைக்கு [illegible] ரூபாய். தேங்காய் எண்ணெய் அமைச்சர் சொன்னார் *52* ரூபாய்; அது இன்றைக்கு *60* ரூபாய். அதற்காக குற்றம் சொல்லவில்லை, நான். நிலைமை என்னவென்றால், விலைவாசி ஏறிக்கொண்டேதான் இருக்கும். தக்காளி மாதிரி சில பொருட்கள், ஒரு வாரம் திடீரென்று விலை இறங்கும், தலை



2002 ஏப்ரல் 8] [பேராசிரியர் க. அன்பழகன்]

குப்புற கவிழ்ந்தது போல இறங்கும். அப்புறம் *15* நாட்கள் கழித்து மறுபடியும், விலை ஏற ஆரம்பித்து, ஏற்கெனவே இருந்த விலையைவிட அரை ரூபாய் அதிகம் ஆகும். அப்படி விலைவாசி ஏற்றம் ஏற்படுவது என்பது ஒரு தொடர்கதை.

இந்த அவையிலே இருக்கிற பல பேர் நம்பமாட்டார்கள். நான் ஓர் அணா கொடுத்து மதியச் சாப்பாடு சாப்பிட்டிருக்கிறேன். ஓர் அணா, *1936*-லே. ஒரு ரூபாய்க்கு *16* அணா, நான் சென்னையிலே இருக்கிற பெரிய ஓட்டலுக்கு *15* வருடங்களுக்கு முன்பு ஒரு தடவை போனேன். சிங்கப்பூரிலேயிருந்து என் நண்பர் ஒருவர் வந்தார்; அவரும் பேராசிரியர். அவரை அழைத்துக்கொண்டு போனேன். சாதாரணமாக நான் அதிகமாகச் சாப்பிட மாட்டேன். இரண்டு பேருக்கும் சேர்த்து *125* ரூபாய் பில் கொடுத்தார்கள். கை கழுவிய தண்ணீருக்கு ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோ. தற்செயலாக *100* ரூபாய்தான் கையிலே வைத்திருந்தேன். (சிரிப்பு)—அதற்கு அப்புறம் இன்றையவரையில் எந்தப் பெரிய ஓட்டலுக்கும் நான் போவதில்லை. எவ்வளவு பெரியவர்கள் வந்தாலும், நீங்கள் போய்ச் சாப்பிடுங்கள் என்று அனுப்பிவிடுவேன்—என்னை யார் என்று தெரிந்த காரணத்தாலே விடுதியாளர் நீங்கள் போங்கள்; அப்புறம் வாங்கிக்கொள்கிறோம் என்று சொல்லிவிட்டார்கள். ஊரிலே விளம்பரம் ஆகியிருந்ததால் இந்த இலாபம் ஒன்று இருக்கிறது. நான் சொல்வது *1971*-ல். அந்த நண்பர் இப்போது இறந்துவிட்டார்.

*முற்பகல் 11-20*

எதற்காகச் சொல்கிறேன் என்றால், விலைவாசி ஏற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகத் தொடர்கிறது. அதனால் மக்களுக்குத் தேவையான அடிப்படையான பொருட்களின் விலை ஏறும் என்பதால் அந்தப் பொருட்களிலே விற்பனை வரியைத் தவிர்க்க அரசு முயற்சிக்க வேண்டும். எந்த வகையிலும் மக்களுக்கு நன்மை செய்வதற்காக இருக்கிற ஓர் அமைப்புதான் அரசாங்கம். இன்னும் சொல்லப்போனால், மக்களால் முடியவில்லையென்றால் அரசாங்கம்தான் ஈடுகொடுத்தாக வேண்டும். மக்களாலே முடியாதபோது அரசாங்கமும் கவனிக்கவில்லையென்றால் அப்புறம் அது நாடாக இருக்காது. ஆகவே, அந்த இழப்புக்களை ஏற்றுக்கொண்டதற்கு நாம் கவலைப்படத் தேவையில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 ஏப்ரல் 8

அதேபோல ஒரு பொதுவான கருத்து. தமிழ்நாட்டில் ஏறத்தாழ ஒரு கோடியே 30 இலட்சம் எக்டேர் பரப்பளவு நிலம் இருக்கிறது. அதிலே என்னுடைய எண்ணம் 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலமாக இருக்க முடியும். விளைச்சலே இல்லாத நிலம் என்ற பெயரால் இருக்கிற எல்லா நிலமும் விளைச்சலுக்கு வராது, வர முடியாது, கொண்டு வரவே முடியாது. அந்த territory எப்படி இருக்கிறதோ, அதற்கு ஏற்ப பயன் இருக்கும். இந்த தரிசு நிலங்களைப் பற்றி அரசாங்கத்திற்கு 1996-97-ல் டாக்டர் வ.செ. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு ஆய்வு அறிக்கை பெறப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டில் அப்பணி முடியும் தருவாயில் இருந்தது. அதற்கு அடுத்த ஆண்டு மாநில திட்டக் குழுவின் ஆலோசனையுடன் அது ஆய்வு நடத்தப்பட்டது. தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் 15% தரிசு நிலம் இருக்கும் என்று கணக்கிடப்பட்டு அதைத் திருத்த தரிசு நில மேம்பாட்டு ஆணையம் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டது. Waste Land Development Authority என்று 1999-2000-ல் அறிவிக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டில் 5.56 கோடி ரூபாய் செலவில் 10 மாவட்டங்களில் 25 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களில் முந்திரி, வேம்பு, பழச்செடிகள் பயிரிடப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் 75 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் 24 மாவட்டங்களில் basically மேம்படுத்தப்படும் என்று கூறப்பட்டது. அந்த அடிப்படையில் பல பணிகள் நடைபெற்றிருக்கின்றன. அதிலேயும் டாக்டர் வ.செ. குழந்தைசாமி அவர்கள் வேளாண்மை விஞ்ஞானி என்று மதிக்கப்படுகின்ற திரு. எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களைப்போல நிலத்தடி நீர் பற்றி ஆய்வு நடத்தி அதைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கான வழிமுறைகளில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். அவர்கள் கல்வி தொடர்பான பல்வேறு துறைகளிலும் மேம்பட்டவர்கள்.

இப்போதும்கூட ஆளுநர் உரையில், 16-வது பத்தியிலே, வேளாண்மைப் பயன்பாட்டிற்காக, பெருமளவில் தரிசு நிலங்களைச் சீரமைப்பதாக அளித்த உறுதிமொழியை இவ்வரசு ஏற்கெனவே செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. என்றும் கடந்த ஆண்டு வெளி நிதி ஆதாரங்கள் மூலம் நீர் வரத்து மேம்பாட்டு முகவரமைப்பு இப்பெரும் திட்டத்தைச் செயல்படுத்தும் என்றும் 10 மாவட்டங்களில் 1,35,905 ஏக்கர் தரிசு நிலத்தை மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. தரிசு நிலங்களைக் கண்டறிதல், நீர்வரத்துப் பகுதி ஒவ்வொன்றுக்கும் திட்டம் தயாரித்தல், நாற்றுப் பண்ணைகள் அமைத்தல் ஆகியன இத்திட்டத்தில் அடங்கும். தரிசு நில மேம்பாட்டுக்கான பல்வேறு



2002 ஏப்ரல் 8] [பேராசிரியர் க. அன்பழகன்]

திட்டங்களின் கொள்கைகள், செயல்பாடுகளை முடிவு செய்ய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் தரிசு நில மேம்பாட்டு அதிகார மன்றம் ஏற்படுத்தப் பட்டுள்ளது என்பது வரவேற்கத்தக்கது. அது எந்தக் கோணத்திலேயும், கடந்த 4 ஆண்டுகளாக எடுத்துக்கொள்ளப்பட்ட சிறு, சிறு மேம்பாட்டுப் பணிகளாக இருந்தாலும்கூட, அது பயன் தரவேண்டிய ஒரு கால கட்டத்திற்கு வருகிறபோது, இந்த அரசு அதை முழு அளவில் நிறைவேற்றுவதிலே மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், இந்தத் தரிசு நில மேம்பாடு என்பது ஆணைகள் மூலமாக நிறைவேற்ற முடியாது. எல்லாவற்றையும்விட இரண்டு, மூன்று ஆண்டுகளிலே நிறைவேறாது. இது ஒரு தொடர் கதையாக, 15, 20 ஆண்டு காலத் திட்டமாக இருந்தால்தான் தரிசு நில மேம்பாடு என்பது பயன்பாட்டுக்கு வரும். இல்லையென்றால் பயன்பாட்டுக்கு வராது. மேம்பாடு என்பது, ஒவ்வொரு வகையில், அளவில், அமையும். அதாவது தரிசு நிலம் என்பது ஒரே வகையாக இருக்காது. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கும். ஓர் இடத்தில் 500 எக்டேர் இருக்கும். ஓர் இடத்தில் 5,000 எக்டேர் இருக்கும். ஓர் இடத்தில் 300 எக்டேர் இருக்கும். ஓர் இடத்தில் தண்ணீர் பக்கத்தில் 10 மைல் தொலைவில் இருந்து கிடைக்கக்கூடும். ஓர் இடத்தில் தண்ணீர் கிடைக்கவே கிடைக்காது. ஓர் இடம் கடற்கரை ஓரமாக இருக்குமானால் அங்கே இருக்கிற தரிசு நிலம் பயன்படாது. ஏற்கெனவே வளர்ந்திருக்கிற தாவரங்களுக்கு ஏற்பத்தான் தரிசு நிலத்தின் மேம்பாடு தீர்மானிக்கப்படும். இப்படி எத்தனையோ வகை. There are several factors which account for this landscape.

*முற்பகல் 11-25*

ஆகவே, அவற்றைச் சரி செய்ய வேண்டுமானால், மேம்படுத்த வேண்டுமானால் ஒரு பெரிய அளவிலே விரிவான செயல் திட்டம் வேண்டும். அது ஒரு 10, 20 ஆண்டு காலத் திட்டமாக அமைய வேண்டும். அது, இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, தனிப்பட்ட ஏழை விவசாயிகள் பயன்படுத்தி செயல்படக்கூடிய சில இடங்கள் இருக்கலாம். ஒரு சாதாரண விவசாயி, ஒரு 10 ஏக்கராவை வைத்துக்கொண்டு அதிலே ஒரு சிறு விவசாயத்தை அல்லது ஒரு புஞ்சை தானியத்தை விளைவிக்கக்கூடிய வாய்ப்பு ஒரு சில பகுதிகளிலே இருக்கும். சில பகுதிகளிலே பெருமளவு முதலீடு செய்தால்தான் artesian well போல போட்டுத்தான் அந்த வழியிலேதான் அந்த இடத்தை

மேம்படுத்த வேண்டிய நிலைமை இருக்கும். சில இடங்களிலே 2 ஆண்டுகள் ஒரு பயிர் கருவேல மரம்போல ஒன்றை போட்டு ஓர் 5 ஆண்டுகள் வளர்ந்துவிட்டு, அது மக்கிப் போனதற்குப் பின்னர் அல்லது அது வெட்டப்பட்டதற்குப் பின்னர் வேறு பயிர் போட முடியும். சோளக் கொல்லையிலே சோளத் தட்டைகளை எல்லாம் எரித்துவிட்டுத்தான் அடுத்த முறை பயிரிட முடியும். கரும்புத் தட்டைகளையும் அதுபோல எரித்துவிட்டுத்தான் அடுத்த முறை பயிரிட முடியும்.

அதுபோல, பல பயிர்கள் வளரத் தடையாக இருப்பதன் காரணமாக இவற்றை நான் சொல்கிறேன். தி.மு.க. அரசும் இதிலே மிகுந்த அக்கறையோடு இருந்தது. செயல்படுத்துகிற கடமை இப்போது உங்களுக்கு வாய்த்துள்ளது. அதைப் பெரும் அளவிலே செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கடந்த ஆட்சிக் காலத்தைப் பற்றி வேண்டுமென்றே அல்லது மாறுபாடு காரணமாக, குறைபாடுகள் சொன்னாலும்கூட, ஆளுநர் உரையிலே பக்கம் 8-லே ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அமைத்த நிதிக் குழுக்களினால், மத்திய நிதிப் பகிர்வில், தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்களவு மறுக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது. இது, தி.மு.க. முதல்வர் கலைஞர் அவர்கள் நிதியமைச்சர் என்ற பொறுப்பிலே தந்துள்ள நிதிநிலை அறிக்கையிலேயே தெரிவித்து மத்திய அரசு இந்தப் பங்கைத் தரவேண்டுமென்று கேட்டிருப்பதையே வலியுறுத்துவதற்கு நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

வரிவிதிப்பு நடவடிக்கை, நல்ல நிருவாகம், மக்கள் தொகை கட்டுப்பாடு, தனி நபர் வருவாய், அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாடு போன்ற பல்வேறு குறியீட்டுச் சாதனைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில், அறிவார்ந்த நியாயமான வரிப் பகிர்வு நடைமுறை ஒன்றைப் பன்னிரெண்டாவது நிதிக் குழு பின்பற்ற வேண்டுமென்று இவ்வாசு வலியுறுத்தும் என்று சொல்லப்பட்டுள்ளது. நானும் அதற்கு உடன்படுகிறேன். எனக்கு இதிலே மாறுபாடு இல்லை. மேலும், சமூகப் பொருளாதார மேம்பாட்டில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ள காரணத்திற்காக தமிழ்நாடு தண்டிக்கப்படக் கூடாது என்பதில் கவனமெடுத்துக் கொள்வதே முக்கிய நோக்கமாகும் என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்தச் சமூகப் பொருளாதார மேம்பாடு போன வருஷம் மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன்



அவர்கள் பொறுப்பேற்றதற்கப்புறம் வந்ததா? இது ஒரு தொடர் கதை. காமராஜர் காலத்திலேகூட மற்ற மாநிலங்களைவிட திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இருக்கிறபோதே சில தொழிற்சாலைகள் அதிகமாகத்தான் இங்கே வந்தன. அதற்குப் பின்னர் தொடர்ந்து எப்படி எப்படியோ தொடர்ந்து ஒரு 10, 20 ஆண்டுக்கால அளவில் உருவானது இது. இந்தியாவிலேயே வெள்ளைக்காரன் காலத்திலேயே, அவர்களின் ஆட்சி நடைபெற்றபோதே நிர்வாகத்திலே சிறந்திருந்தது சென்னை மாநிலம் என்று பெயர் பெற்றது; ஜஸ்டிஸ் பார்ட்டி காலத்திலேயே. ஆகவே, இது ஒரு வரலாறு. இந்த நிலைமை எதற்கு நான் சொல்கிறேன் என்றால், கடந்த 5 ஆண்டுக்கால தி.மு.க. ஆட்சியினாலே எல்லாமே கெட்டுவிட்டது போன்ற ஒரு தோற்றம் தெரிகிறபோது சில வகையிலே வரவு செலவு கணக்குகளிலே உங்களுக்கு நெருக்கடி உண்டாகலாம். என்றாலும் பல பணிகள் நடைபெற்ற காரணத்தால்தான் இந்த நிலைமை.

அதேபோல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேற்று இந்தியத் தொழில் கூட்டமைப்பின் வருடாந்திர மண்டலக் கூட்டத்தில் பேசுகிறபோது இந்தியாவில் தமிழகம்தான் அதிகமான வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 3-வது இடத்தை வகிக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக நான் நன்றி சொல்ல வேண்டும். 3-வது இடத்தை வகிக்கிறது என்ற புள்ளிவிவரம் அவர்களால் நேற்று வெளியிடப்பட்டது. ஏற்கெனவே தமிழ்நாடு பின்தங்கிப் போய் விட்டது. மிகமிகப் பின்தங்கி விட்டது என்று ஒரு கருத்து கூறப்பட்டது. இந்த, 3-வது, 2-வது, முதலாவது இடம் என்பது மாநிலங்களிடையே 6 மாதத்திற்கு ஒரு தடவை ரொட்டேஷனிலே மாறும். அந்த வரிசை எண் அப்போதைக்கப்போது மாறும். அதனாலே 3-வது இடம் என்று அவர்கள் சொன்னது, ஏற்கெனவே நடைபெற்ற ஆட்சியிலேயும் முறையாகப் பணிகள் நடைபெற்ற காரணத்தினாலேதான் அந்த 3-வது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறோம். வெளிநாட்டு நேரடி முதலீட்டில் தமிழகம் முதன்மையாகத் திகழ வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம் என்று கூறப்பட்டுள்ளது. அந்த நோக்கம் நிறைவேறுவதற்கு ஒரு பின்னணி நமக்கு இருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோல, அரசாங்கமே மாறும். நான் அமைச்சராக இருந்த இடத்திலே திரு. தம்பிதுரை அவர்கள் அமைச்சராக இருப்பார்கள். இது ஒரு சாதாரண மாற்றம். சாதாரணம் என்றால் அவரை நான்

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 ஏப்ரல் 8

சாதாரணம் என்று சொல்லவில்லை. நான் இல்லாமல் இருப்பது சாதாரணம். அதற்குப் பெயர்தான் ஜனநாயகம். நானேதான் இருக்க வேண்டுமென்று ஒன்றும் ஜனநாயகத்திலே கட்டாயமும் இல்லை; அது முறையும் இல்லை. ஆனால், பொறுப்பிற்கு வருகிறவர்கள், Relay race போல, Flag race அல்லது Relay race என்பார்கள். ஒருவர் கொடுக்கிற கொடியைப் பிடித்துக்கொண்டு ஓடுகிற ஓட்டத்தைப் பொறுத்தும், அவர் கொண்டு போய் கொடுப்பதை வாங்கிக்கொண்டு அடுத்தவர் ஓடுவதில்தான் அந்த Team வெற்றி பெறும். அதேமாதிரி, தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வருகிறவர் யாராக இருந்தாலும், தொடர்ந்து இந்த ஓட்டத்தில் முதல் நிலை பெறுவதிலேதான் அக்கறையாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதை விட்டுவிட்டு, அவன் ஒழுங்காக ஓடுவதை விட்டு யாரெல்லாம் ஒழுங்காக ஓடவில்லை என்று மற்றவர்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டே இருந்தால் அவரது ஓட்டமும் கெடும். அவன் ஓடவே மாட்டான், விழுந்தாலும் விழுந்து விடுவான்." ஆகவே, வெற்றி காண்பதற்கான அந்த நோக்கம் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

அதேபோல, கிருஷ்ணா நீரைக் குறித்து இங்கே பல மாதிரியான வாதங்கள் நடந்தன. ஆனால் அந்த வாதத்திற்கு எல்லாம் ஒன்றும் அழுத்தமான பொருள் இல்லை. Krishna Scheme is different from Krishna Water என்பது தெளிவாகும். கிருஷ்ணா திட்டம் என்பது அதற்கான வாய்க்கால் மேலும் 11 கிலோ மீட்டர் வெட்ட வேண்டியது, வெட்ட முடியாதபடி நீதிமன்ற வழக்குகள் காரணமாக தடைபட்டிருக்கிறது. அந்த அரசு அக்கறை எடுத்துக் கொண்டாலுங்கூட நீதிமன்ற வழக்கிலே முடிவு கிடைக்கவில்லை. ஆனால், இன்றைக்குப் பத்திரிகைகளிலே, இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகளிலே, Krishna water at zero point tonight என்றும், இன்னொரு பத்திரிகையிலே Substantial increase in Krishna water flow என்றும் செய்திகள் வந்துள்ளன. ஆகவே, வருவது எல்லாம் கிருஷ்ணா நீர் என்று சொல்வது அவர்கள் மட்டும் அல்ல. இங்கே அரசு அறிக்கையிலேகூட ஆந்திரப் பிரதேச அரசின் ஒத்துழைப்புடன் கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் விரைவில் நிறைவேற்றி முடிக்கப்படும் என்ற கருத்து இடம் பெற்றுள்ளது. இதைக் குறிப்பிடுவது ஒரே ஒரு காரணத்திற்காகவே. ஆட்சி மாறினாலும் நம்முடைய பணிகள் தொடர்கின்றன. ஒவ்வொரு வகையான பணியிலேயும் ஒவ்வொரு விதமான நன்மை இருக்கிறது.



2002 ஏப்ரல் 8] [பேராசிரியர் க. அன்பழகன்]

அடுத்து, கடந்த வாரம், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு ஹட்கோவின் சிறந்த செயல்பாடுகள் விருது வழங்கப்பட்டிருகிறது. எதற்காக ஹட்கோவின் சிறந்த செயல்பாடுகள் விருது வழங்கப்பட்டது எனில், ஒக்கியம் துரைப்பாக்கத்தில் குடிசைவாழ் மக்களின் மறுவாழ்விற்காக 3,892 குடியிருப்புகளை அடிப்படை கட்டமைப்பு வசதியுடன் கட்டியுள்ளது. சுத்தமான குடிநீர், சுகாதாரம், மின்வசதி ஆகியவற்றுடன் குடியிருப்பு வசதி ஏற்படுத்துவோருக்கு பாராட்டு வழங்குகிற முறையிலே வழங்கப்பட்டது. இதுவும் ஒரு 5 ஆண்டுக் காலம், 10 ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகிற தொடர் முயற்சி என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோல, பட்ஜெட்டிலே நிதியமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டு இருக்கிறார். See para 54. "ரூபாய் 40 கோடி செலவில் செயல்படுத்தப் பட்ட துறை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் (Sector Reforms Programme) கோயம்புத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களைச் சிறந்த சாதனை படைத்த மாவட்டங்களாக மத்திய அரசு மதிப்பிட்டுள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டங்களில் சமுதாயப் பங்கேற்பை அமைப்பு ரீதியாக உறுதி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்குக் கிடைத்த வரவேற்பினால் ஊக்கப்படுத்தப்பட்ட மாநில அரசு, அடுத்த ஆண்டு காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர் ஆகிய மாவட்டங்களுக்கு இத்திட்டத்தை நீட்டிக்கக் கருதியுள்ளது." இது ஒரு மாவட்டத்திலே முன்னேற்றமான நல்ல சூழல் உருவானதைக் குறிக்கின்றது. குடிநீர்த் திட்டத்தையெல்லாம் பொது மக்களுடைய பங்கேற்புடன் (participation) நடத்துவது என்பதாகும். அதுவும் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிற காரியம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்த ஆண்டு பட்ஜெட்டிலே ஒளிவுமறைவற்ற நிதி நிர்வாகம் மற்றும் வெளிப்படையான ஆட்சி முறை அமைய வேண்டும் என்ற உறுதிப்பாட்டிற்கிணங்க தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்று சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்டது. அந்த வெள்ளை அறிக்கையை நாம் பார்த்தோம். ஏற்கெனவே 1998-99-லேயே தகவல் பெறும் உரிமைச் சட்டம் (Right to Information Act) நமது மாநிலத்தில்தான் முதன்முதலாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்மூலம் நிர்வாகத் தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் எளிதில் பெற இயலும் என்று அறிவித்து அப்போதே அதற்கொரு அடிப்படை அமைக்கப்பட்டது. அப்புறம்

பொதுமக்களுடன் அதிகம் தொடர்பு கொண்டிருக்கிற அலுவலகங்கள் மற்றும் துறைகள், தங்கள் அலுவலக வளாகங்களில் தகவல் வழங்குவதற்கும், உதவி வழங்குவதற்கும் மையங்களை நிறுவி, பொதுமக்கள் அறிய விழையும் தகவல்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள வழிவகை செய்ய வேண்டும் என்றும், அப்போது 1998-99-லேயே தெரிவிக்கப்பட்டது. அந்தக் கருத்து இன்றைக்கு நடைமுறைக்கு வந்துகொண்டு இருக்கிறது என்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் 10 நிமிடங்கள் கொடுக்க முடியுமா? இங்கேகூட நம்முடைய திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள்—எஸ்.ஆர்.பி. அவர்கள்—எனக்குப் பெயர்களிலே கொஞ்சம் குழப்பம் வரும். எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகிறபோது கவன ஈர்ப்பின் மூலம், ஒரு பெண்மணி கொலை செய்யப்பட்டது பற்றிக் குறிப்பிட்டு, அதைப்பற்றி முதலமைச்சருடைய பதிலைப் பெற்றார்கள். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் சமுதாயத்திலே நாளுக்கு நாள் வன்முறைக் கொடுமைகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. அவை நாளுக்கு நாள் பலவகையிலும் அதிகமாகி வருகின்றன. கொடிய வகையிலே நடைபெறுகின்றன. அதிலே அதிகமான அளவிற்கு மகளிர் பாதிக்கப்படுகிறார்கள் என்ற ஒரு நிலையும் இருக்கிறது.

*முற்பகல் 11-35*

இன்னும் சொல்லப்போனால், நான் சொல்கிற புள்ளி விவரங்களை, இந்த அரசு என்பதற்காகச் சொல்லவில்லை. இந்த அரசு அல்லாமல் வேறு எந்த அரசாக இருந்தாலும், இந்த நிலைமைகளைச் சமாளிக்க வேண்டிய ஒரு கட்டாயமான நிலைமை இருக்கிறது. 25-3-2002 அன்று ஒரு பத்திரிகையிலே வந்தது. அந்தப் பத்திரிகை மாண்புமிகு அமைச்சர்களுக்கு எல்லாம் பழக்கமான பத்திரிகையாகத்தான் இருக்கும். அதிலே போட்டிருந்தார்கள். தமிழ்நாட்டில் ஒரே நாளில் 8 விபத்துகள், 25 பேர் பலி. எந்தப் பத்திரிகை என்று நான் குறிப்பிட விரும்பவில்லை. ஏனென்றால் விபத்துகள் அதிகமாவதுகூட டிராபிக் அதிகம், வண்டிகள் வாகனங்கள் அதிகம், ஆகவே விபத்துகள் அதிகமாக நடைபெறுகின்றன என்னும் ஒரு பொதுக் கருத்து உண்டு. ஆனால் விபத்துகள் அதிகமாக நடைபெறுவதைத் தடுக்க வேண்டிய ஒரு கடமை அரசுக்கு இருக்கிறது. அந்த ஒரு நாளில் மட்டும் சிமெண்ட் லாரி மீது மணல் லாரி மோதி 9 பேர் பலி; கிருஷ்ணகிரி அருகே 4 பேர் பலி; கடலூரில் மாமியார், மருமகள் இரண்டு பேர் சாவு; மதுரையில் 3 பேர் பலி; ஊட்டி அருகே பெண்கள் 2 பேர் பலி; ஒரே மொபெட்டில் போன 3 பேர் பலி; விக்கிரவாண்டி அருகே 2 பேர் பலி;



ஆக 25 பேர் பலி. மேலும் இந்த விபத்துகள் அதிகமாவதால்கூட, சமுதாயத்திலே ஒரு எண்ணத் தாக்கத்தை உருவாக்குகிறது. கொடுமைகளாலே, அக்கிரமத்தாலே யாராவது கொல்லப்பட்டால்கூட, இதைப் பார்க்கிறவர் அதையும் பார்க்கிறபோது அந்த அக்கிரமத்தினுடைய கொடுமை அளவுகூடத் தெரிவதில்லை. அது பற்றியும் நான் ஒரு புள்ளி விவரத்தைத் திரட்டி வைத்திருக்கிறேன். அந்தப் புள்ளிவிவரத்திலே ஏறத்தாழ ஓராண்டு காலத்திலே 102 கொலைகள்; 130 திருட்டு, கொள்ளை; மோசடிச் சம்பவம் 13; கடத்தல் 19; விபத்தில் பலியானோர் 405; இது மேலும் அதிகமாகாமல் காவல் துறை தீவிர நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இதைப் பற்றி தகுந்த ஆலோசனை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று காலையிலே எஸ்.ஆர். பி. அவர்கள் கொண்டுவந்த அந்தக் கவன ஈர்ப்பில், காவல் துறை இன்னும் தீவிரமாகச் செயல்பட வேண்டுமென்ற கருத்து இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது வேறு. நமது காவல்துறையை—ஸ்காட்லாந்து யார்டோடு நாம் ஒப்பிடக்கூடிய அளவிற்கு அல்லது அதற்கு அடுத்த நிலையில் ஒரு காலத்தில் இருந்தோம். இன்றும்கூட இருக்க முயற்சிக்கிறோம் என்பது வேறு. ஒரு குறிப்பிடத்தக்க வகையான கொடுமைகள் கேடுபாடுகள் அதிகமாகிறபோது அதை எந்த வகையிலே tackle செய்வது; அதற்கு தனிப்பட்ட முறையிலே எந்த வகையிலே கவனம் செலுத்த வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். காவலர் குடியிருப்புகளில் இரண்டு இடங்களில் gang, வெளி மாநிலத்திலேயிருந்து வரக்கூடிய கும்பல் 10 பேர், 5 பேராகச் சேர்ந்து ஒரே நேரத்திலே பல வீடுகளிலே புகுந்து திருடிக்கொண்டு போயிருக்கிறார்கள். காவல் துறையினருடைய திறமைக் குறைவுக்கும் இதற்கும் நேரடி சம்பந்தம் இல்லை. ஆனால், காவல் துறை அலுவலர்களே பாதிக்கப்பட்டார்கள் என்கிறபோது, பொது மக்களுடைய மனதிலே இயல்பாகவே தானாகவே ஓர் அச்சம் வந்து குடிபுகுந்துவிடும். ஆகவே, அவற்றிற்கெல்லாம் என்ன செய்வது என்பதைப் பற்றி உனடியாக ஆய்வு நடத்த வேண்டும் என்று தெரிவிக்க எனக்கு ஒரு கடமை இருக்கிறது.

அதைப்போல அண்மையிலே 2 நாட்களுக்கு முன்னர், ஈரோடு பக்கத்திலே உள்ள திங்களூரில், அங்கே உள்ள காவல் நிலையத்திலே ஒரு தாக்குதல் நடைபெற்றதாக ஒரு செய்தி வந்தது. அதற்குக் காரணமாக இருந்த செய்தி, யாரோ ஒரு முதியவரை, 70 வயது பெரியவரை காவலர்கள்

கைது செய்தார்கள்; அப்படி கைது செய்ததற்கு நியாயமில்லை என்று மக்கள் கருதினார்கள்; அது ஒரு கூக்குரலாயிற்று; அது வேறுவிதமாக வளர்ந்து வன்முறையாயிற்று. அதனுடைய விளைவு, காவல் துறையினர், பலரைத் தாக்கி விரட்டினர். அவர்கள் பக்கம் நியாயம் இருப்பதாகக்கூட அவர்கள் பேசலாம். ஆனால் பாதிக்கப்படுவது பொதுமக்கள். 136 பேர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். கோயம்புத்தூரிலே கொண்டு போய் வைத்திருக் கிறார்கள். கைது செய்யக்கூடாது என்பது என்னுடைய வாதம் அல்ல. ஆனால், அந்த மக்கள் அச்சமின்றி, தத்தம் குடிசைகளில் அன்றாட வாழ்க்கை நடத்த முடியாத நிலைமைக்கு இன்றைக்கு ஆளாகி இருக்கிறார்கள். அந்த ஊர், பெயர் எல்லாம் என்னிடத்தில் இருக்கிறது. அதையெல்லாம் படிக்கவில்லை. அங்கே குடியிருக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இது சாதாரணமாகவே காவல் துறைக்கு நம்மையே தாக்கினரா என்னும் எண்ணத்தால் வரும் prestige question. நம் மீது கல் எறிந்தாரா என்று சினம் வருகிறபோது அப்படியெல்லாம் ஏற்படுவது வழக்கம்தான். ஆனால் அந்த நிலைமை வளராமல் மேலதிகாரிகள் சென்று அந்த நிலைமையைக் கட்டுப்படுத்தி, அந்த மக்கள் பாதிப்பை உடனடியாகத் தவிர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இன்னும் இரண்டு செய்திகளைச் சொல்லி நான் உரையை முடிக்க விரும்புகிறேன்.

அண்மையிலே, மலிவுவிலை மதுவை இந்த அரசு மொத்தமாக நிறுத்திவிட்டது. எனக்கு அதைப் பற்றி வருத்தமில்லை. ஆனால் மலிவு விலை மது கொண்டு வருகிறபோது என்ன காரணம் சொல்லப்பட்டது என்று கேட்டால், கள்ளச் சாராயத் தொழில் பரவலாக நடப்பதற்கும், அதிலே பல பேர் பலியாவதற்கும் ஒரு சூழ்நிலை இடம் தருகிறது; அதைத் தவிர்க்க வேண்டுமானால் இந்த மலிவு விலை மதுவைக் கொண்டுவந்தால்தான் முடியும் என்ற கருத்து சொல்லப்பட்டு, கொண்டு வரப்பட்டது. இப்போது 2 மாதத்திலே 50 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுவிட்டது என்று நிறுத்தப்பட்டிருக்கிறது. இரண்டுக்கும் காரணம் இருக்கிறது. கொண்டு வந்ததற்கும் ஒரு காரணம் இருக்கிறது; நிறுத்தப்பட்டதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. ஆனால் இதனை ஒரு கொள்கையாக மக்கள் கருதுகிறார்கள். தி.மு.க. ஆட்சியிலேகூட மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கலைஞரை வந்து பார்த்து மறுபடியும் கடைகளைத் திறக்காதீர்கள் என்று சொன்னபோதும் இந்தக் கருத்து இருந்தது. மது விலக்கை அரசாங்கத்தால் வெற்றிகரமாக நடத்த முடியாது என்ற ஒரு கருத்தும் உலகம் முழுவதும்



பரவலாக இருந்தது. மதுவைக் கைவிட ஊக்கப்படுத்தலாமே தவிர, மதுவிலக்கை வெற்றிகரமாக 100% வெற்றி பெறச் செய்ய முடியாது என்று பலர் கருதினர்.

முற்பகல் 11-40

இரண்டாவது, அரசிற்கு வரவேண்டிய வருமானத்தை வேறு யாரோ கொண்டுபோகிறார்கள்; ஏன், அரசு அதை இழக்க வேண்டும் என்பது. ஆகவே இப்படிப்பட்ட பிரச்சினையில் இராஜாஜி போன்ற பெரியவர்களுக்கு, பெரியாருக்குக்கூட வேறுவிதமான கருத்து இருந்தாலும்கூட, அதுபோல எம்.ஜி.ஆர். அவர்களுக்குக்கூட அன்றைக்கு அவர்கள் அந்தக் கட்சியிலே இருந்தார், அவருடைய கருத்து வேறு வகையானது. இந்த கருத்தெல்லாம் வேறுபாடாக இருந்தாலும்கூட, நிர்வாக முறையிலே மக்களுக்கு நன்மை செய்வதற்குரிய நிதியை ஏற்று செயல்படுத்த முடியாமல் போவதைத் தவிர்க்க, மது விற்பதற்கான அனுமதிகள் வழங்கும் நிலைமை ஏற்பட்டது. 1991ஆம் ஆண்டிலே இன்றைய முதல்வர் பொறுப்பு ஏற்றவுடனே அன்றைக்கு மலிவு விலை மதுவை இரத்து செய்து அப்பொழுது அறிவித்தார். தி.மு.க. ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட மலிவு விலை மதுவை மறுபடியும் முதலமைச்சராக வந்தவர்கள் இரத்து செய்தார்கள். 1993ஆம் ஆண்டு இதை இரத்து செய்ததால் ஓர் ஆண்டிற்கு 390 கோடி ரூபாய் இழப்பு என்று 1993-ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது இரத்து செய்ததாலே 390 கோடி ரூபாய் இழப்பு. இப்பொழுது கொண்டு வந்ததினாலே 50 கோடி ரூபாய் இழப்பு. ஆம், இழப்பு நமக்கு எப்படி எப்படியோ வருகிறது. ஆக, என்ன செய்வது என்பதிலேயே ஒரு திட்டவட்டமான கருத்து இல்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதேபோல, 1-6-1992 முதல் 'Bar' வைக்க அனுமதி வழங்கப்பட்டது. 1993ஆம் ஆண்டு ஜூன் முதல் 'Bar' ஒழிக்கப்படும் என்று அறிவித்த முதல்வரால் இப்பொழுது 'Bar' வைக்க அனுமதி மறுபடியும் வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே நான் கூற விரும்புவது இது. மதுவிலக்கு கொள்கையிலே சில குழப்பங்கள் இருக்கின்றன. அதை நடைமுறைப்படுத்துவதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன என்பது வேறு.

அரசாங்கத்தில் நாம் எடுக்கிற முடிவுகளிலேயே மாறுபாடு. 1991-ல் இரத்து செய்த மலிவு விலை மதுவை இப்பொழுது 2001 இறுதியில் இந்த அரசு மறுபடியும் கொண்டு வந்தது. 1993 ஜூனில் மதுக்கடை 'Bar'கள் மூடப்பட்டன. 2002-ல் மீண்டும் திறக்கப்படுகிறது. இந்த 'Bar'

திறக்கப்படுவதைப் பற்றி மது வியாபாரிகள் சங்கச் சார்பில் எங்கள் வசதிக்கு அந்த 'Bar' திறந்தால் உங்களுக்கு என்ன என்று கேட்கிறார்கள். அங்கே போய் பருகுகிறவர்களும்கூட, நாங்கள் போய் 'Bar'லே உட்கார்ந்து பருகக்கூடாதா என்று கேட்கிறார்கள். பொது மக்களோ, பெண்களோ எங்கள் வீட்டிலே இருக்கிறவர் 'Bar'லே போய் உட்கார்ந்து விட்டால், அவரை யார் கூட்டிக்கொண்டு வருவது என்று கேட்கிறார்கள். அங்கேயே உட்கார்ந்தால் அதனால் வருமான இழப்பு அதிகமாகும் என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆக, இரண்டு பக்கமும் வாதிடுவதற்கு கருத்து இருந்தாலும்கூட, பெரும்பான்மை பொதுமக்கள் இதை எதிர்க்கிறார்கள். மது பருகுகிறவர்களுக்கு ஏதோ ஒரு status—மரியாதை—கிடைப்பது போல ஒரு தோற்றம். ஒரு ஓட்டலுக்குப் போய் சிலபேர் மாலை 4.00 மணியிலேயிருந்து 6.00 மணி வரையிலும் அங்கேயே உட்கார்ந்து உரையாடிவிட்டு பிறகு வருவார்கள்.

எனக்குத் தெரிந்து ஒரு பெரிய கலைத் துறை வல்லுநர்கூட ஒரு நாள் பூராவும் ஓட்டலிலே உட்கார்ந்துகொண்டு இருப்பார். அதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் அது ஒரு fashion ஆகிறது. அதே மாதிரி 'Bar'லே போய் உட்காரும் பழக்கம் வருமானால்கூட குடிப்பது ஒரு முறைகேடான செயல் என்கிற எண்ணம் அடியோடு போகும். இப்பவும் போய்க்கொண்டுதான் இருக்கிறது. ஆனால், 'Bar' மதுவிற்கு ஒரு தடையாக இல்லாமல் மதுவிற்கு ஒரு மரியாதை கிடைக்க வழி செய்துவிடுமோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, மதுவிலக்கை வெற்றிபெறச் செய்ய ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். மது பருகுகிறவர்களுக்குக் கடுமையான தண்டனை அதிலே கடைசி எல்லையான தண்டனை நாடு கடத்துதல் என்று கொண்டு வந்தார்கள். எனக்கு அப்பொழுது பேச வாய்ப்பு இருந்தது. அவரும் என்னைப் பேசச் சொன்னார். நான் அப்பொழுது சொன்னேன்: "இந்தச் சட்டம் நடைமுறையில் வெற்றி பெறாது. காரணம், சமூகக் கேடுகளைக் கடுமையான தண்டனையால் யாரும் திருத்த முடியாது. அப்படிப்பட்ட சமூகக் கேடுகளைக் கடுமையான தண்டனையால் திருத்த வேண்டும் என்று முயற்சிப்பதாயின், அது ஒரு மத நம்பிக்கை உணர்வு இருந்தால் மட்டுமே முடியும்; இல்லையென்றால் முடியாது" என்று ஒரு கருத்தை நான் சொன்னேன். அப்பொழுது அவர் சொன்னார்: "முதலிலேயே இதை நான் பேசியிருந்தால், அதையும் யோசித்து இருப்பேன்" என்று சொன்னார். அப்புறம் அந்தச் சட்டம் நடைமுறைக்கு வரவில்லை: செயல்படவில்லை. முதல் தடவை குற்றம் செய்தால் 3 மாதம், அடுத்த முறை அதே குற்றம் செய்தால் 6 மாதம், அதற்கு அடுத்த முறை குற்றம் செய்தால் நாடு கடத்துவது; நாடு



கடத்துவது என்பது non-practicable; நடைமுறை சாத்தியமல்ல என்ற கருத்தையெல்லாம் நான் சொன்னேன். அவரும் அதைக் கருத்து அளவிலே ஏற்றுக்கொண்டார். ஆகவே, இந்த 'Bar'களை மூடுவது என்று அறிவித்தபோது, முதலமைச்சர் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்கள். 'Bar'களை மூடுகின்ற இந்த முடிவில் இனி எந்தவித மாற்றமும இல்லை. இப்படியாக எடுத்த கொள்கையில் பிடிப்பும், அதை நிறைவேற்ற எடுக்கப்பட்ட முயற்சிகளும், நாட்டு மக்களின் நலனைத் தலையாயதாகக் கொண்டே தொடர்கின்றன; இனியும் தொடரும் என்று முதலமைச்சர் சொல்லியுள்ளார்.

ஆயினும், இவை எதுவும் தொடர்ந்து காப்பாற்றப்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய இலட்சியம் மது விலக்கு. ஆனால் நடைமுறையிலே அதைச் செய்ய முடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே 'Bar' இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதிலே ஓர் ஆழமான மாறுபட்ட கருத்து நிலவுகிறது. 'Bar' மது பருகுகிறவர்களுக்கு ஒரு status—ஒரு தகுதி—இருப்பது போன்ற ஓர் உணர்வை உண்டாக்கிவிடுமோ என்ற எண்ணமும் எனக்கு ஏற்படுகிறது.

நான் அதிகமாக இந்த அவை நேரத்தை எடுத்துக்கொள்ளாமல், என்னுடைய வேண்டுகோளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

குறிப்பாக, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை, வழக்கமாக வருகிற அந்த format—நடைமுறையிலே இல்லை. அதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கலாம். அதன் காரணமாக சில பகுதிகளைப் படிக்கிறபோது — அவ்வளவு தெளிவாக புரிந்துகொள்ள முடியவில்லை. அது என்னுடைய இயலாமையாக இருக்கலாம். நான் பொதுவாக நிதிநிலை அறிக்கையை ஒரு தரம்தான் படிப்பேன். அதைப் புரிந்துகொள்ளத் திரும்பப் படிக்க முயற்சிக்கமாட்டேன். எனக்கு அவசியம் ஏற்பட்டதில்லை. ஆனால் படித்துப் பார்க்கிறபோது, அந்த இடர்ப்பாடு அதிகம் இருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதுபற்றிய குறிப்புகள் எல்லாம் இருக்கின்றன. நான் அவற்றை பேசு எடுக்கவில்லை. Gender Equity என்று ஆங்கிலத்திலே ஒரு தலைப்பு. 'இரு பாலின நேரிய முறை' என்று அதற்கு மொழி பெயர்ப்பு. 'இரு பாலின நேரிய முறை' என்று சொன்னால், அந்த மொழி பெயர்ப்பிலே Gender Equity என்பதன் கருத்து இல்லை. அது 'இருபாலினர் சமத்துவ நெறி' என்று இருக்க வேண்டும். இரண்டு பேருக்கும் சமத்துவம் எல்லா வகையிலும் கிடைப்பதற்குச் சில அடிப்படையான கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. அதுவும் அந்த பதினைந்து அம்சக்

கோட்பாடுகளில் இருக்கிறது. அந்தக் கோட்பாடுகளைப் பற்றிக்கூட நான் சொல்ல விரும்புகிறேன். All pervasive என்பார்கள். அதுமாதிரி, இந்த 15 அம்சம் என்று சொல்வது, குறிப்பிடக்கூடிய திட்டமாக இல்லை; கொள்கையாக கோட்பாடாக இருக்கிறது. திட்டங்கள் வேறு, கொள்கை வேறு. கொள்கை என்பது தொடர்ந்து பல திட்டங்கள் மூலமாக, பல 5 ஆண்டு காலத் திட்டத்திற்குப் பின்னர் அடைவது. ஒவ்வொரு திட்டத்திலேயும் ஒரு குறிப்பிட்ட அளவு வரையறை உண்டு. கல்வித் துறை என்றால் இந்த ஆண்டு இந்தக் குறிப்பிட்ட அளவு என்பது திட்டம். ஆகவே, அந்த முறையிலே ஒரு விரிவான குறிக்கோளாக, all pervasive இருக்கும். பதினைந்து அம்சம் செயல்படுவதற்காக இருக்கிற திட்டங்களாக அது வகுக்கப்பட்டு காட்டப்படவில்லை. அந்த நோக்கத்திலே இதில் பல செய்திகள் வந்திருக்கின்றன என்று சொல்லலாமே தவிர, அந்தக் கொள்கைகளுக்கான திட்டம் இல்லை. 'எல்லோரும் இன்புற்றிருப்பதுவே அல்லாமல், வேறொன்றும் அறியேன் பராபரமே' என்ற அந்தக் கொள்கையின் அடிப்படையிலே தீட்டப்பட்டதாக இது இருக்கிறது. அதாவது இந்த ஆண்டு இவ்வளவு, அடுத்த ஆண்டு இவ்வளவு என்று வரையறுத்து வருகிறபோதுதான் அது ஒரு திட்டமாக்கப்படும், இல்லையென்றால் அது கோட்பாடு. ஆகவே அந்தக் குறிக்கோளை நோக்கி நடைபோடுவதற்கு உள்ளபடியே இந்த அரசு இன்னும் தீவிரமாகச் செயல்படவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

பொதுவாக இந்த அறிக்கையில் வள்ளுவருடைய திருக்குறள் வழக்கமாக இடம்பெறும். அது இடம் பெறவில்லை, அதற்காக நான் இந்தக் குறளைக் குறிப்பிடுகிறேன்.

"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்."

வழிபயக்கும் ஊதியம் என்றால் அதன் பின்விளைவாக ஏற்படக்கூடிய நன்மைகளையும் சூழ்ந்து செய்ய வேண்டும் என்ற அந்த அடிப்படையிலேதான் நிதிநிலை அறிக்கைகளை உருவாக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கிராமப்புற மாணவர்களுக்கு உயர் தொழில் கல்வியில் இடம் கிடைப்பது அரிதாக இருந்ததை எண்ணிப்பார்த்து, அவர்களுக்கு ஒரு பகுதி ரிசர்வேஷனாக ஒதுக்கப்பட வேண்டும். அப்படி இருந்தால்தான் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று தி.மு.க. ஆட்சிக்காலத்திலே 15 விழுக்காடு ஒதுக்கப்பட்டது. எனக்குத் தெரிந்து



300 பேர், அல்லது 250 பேர் இடம் பெற்றார்கள். கிராமப்புற பள்ளிகளிலே படித்து, நேரடிப் போட்டியிலே வெற்றிபெற முடியாதவர்கள் இடம் பெற்றார்கள். அதற்குப் பிறகு இந்த அரசு அதை 25 விழுக்காடாக ஆக்கிற்று. அதில் கொள்கை அடிப்படையிலே எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால் நடைமுறை சித்தாந்தத்திலே அது அடிபட்டுப் போய்விட்டது. அது அடிபட்டது மட்டுமல்லாமல், நீதிமன்றத் தீர்ப்பாலே 15 விழுக்காடு அடிபட்டுவிட்டது. ஆகவே, அதுபற்றி மறுபடியும் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அந்த இட ஒதுக்கீடு கிராமப்புற மாணவர்களுக்கு இன்றியமையாததாக, சமூக நீதிக்கு அடிப்படையான தேவையாக இருப்பதை உணர்த்தி, இட ஒதுக்கீட்டை ஏற்கச் செய்து இடம்பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு செய்தி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே காலையிலேயே அந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டிய ஓர் அவசியம் ஏற்பட்டது. அதற்காகக் கேட்டாலும்கூட, இங்கே உரையாற்ற இருக்கிற காரணத்தால், அந்த உரையிலே சொல்லிக்கொள்ளுங்கள் என்று அவர்கள் அனுமதி வழங்கினார்கள். இன்று, சென்னை மாநகராட்சியிலே 2 வார்டுகளிலே இடைத்தேர்தல் நடைபெறுகிறது. தமிழ்நாட்டிலே வேறு சில இடங்களிலும் உள்ளாட்சி மன்றங்களுக்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது. சென்னையில் ஒரு வட்டத் தேர்தலில் வாக்குப்பதிவு செய்கிற இடத்திலே, ஆளுங்கட்சியினர் முன்கூட்டியே வாக்குப்பதிவு செய்துவிட்டதாக தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் எடுத்துச்சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதை அதிகாரிகள் கேட்கவில்லை என்பதற்காக சாலை மறியலிலே ஈடுபட்டார்கள். காலை 8-30 மணிக்கு மறியலிலே ஈடுபட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம்வழுதியும், அவரோடு 50, 60 பேரும் கைது செய்யப்பட்டு, வேப்பேரி காவல் நிலையத்திலே இருக்கிறார்கள். அந்தச் செய்தி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எனக்கும் வந்திருக்கிறது.

**பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவருக்கு வரும். ஆனாலும் ஒரு வட்டத்தின் சாதாரண தேர்தலிலேகூட நாம் எல்லோரும் சேர்ந்து, எவ்வளவு மாறுபாடு இருந்தாலும், வன்முறையைக் கைவிட்டு ஜனநாயக முறையைக் காப்பாற்றினால்தான் நாம் வாழ முடியும். அதற்கான வழியைக் காணவேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை நான் நிறைவு செய்கிறேன், வணக்கம்.

[2002 ஏப்ரல் 8

## 6. அறிவிப்பு

### உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி 70 பேரோடு கைது குறித்து காவல் துறையிடமிருந்து வந்த செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள் முடிக்கட்டும் என்று காத்திருந்தேன். திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், 70 பேரோடு கைதுசெய்யப்பட்ட செய்தியை, சாலை மறியல் செய்யச் சென்ற காரணத்தால் கைது செய்யப்பட்ட செய்தியை, சென்னை மாநகர காவல் துறை ஆணையர் தெரிவித்திருக்கிறார். சில பிரிவுகள் மேலே வழக்கு போடப்பட்டு இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்.

அடுத்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-50*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நிதியமைச்சர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடுகள்) பேராசிரியர் அவர்களும் சொல்லி விட்டார்கள். நானும் எனக்கு வந்த அறிவிப்பைச் சொல்லிவிட்டேன். அதோடு முடிவடைந்தது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நிதியமைச்சர் பேசட்டும். கடைசியிலே ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்.

## 5. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம் — தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது கடந்த ஐந்து நாட்களாக நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் 27 உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்களது மேலான கருத்துகளை எடுத்து



2002 ஏப்ரல் 8]

இயம்பியிருக்கிறார்கள். அதற்கு நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றியினை முதற்கண் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆக்கபூர்வமான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுடன் தொலைநோக்குப் பார்வையுடன் தயாரிக்கப்பட்ட எங்களது இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தை நான் அவைக்கு சமர்ப்பித்திருக்கின்றேன். நாங்கள் பொறுப்பேற்ற பிறகு அரசினுடைய நிதி நிலைமை மிகவும் மோசமாக இருந்ததை வெள்ளை அறிக்கையின் மூலம் அவைக்கு வைத்தோம்; தமிழக மக்களுக்கும் நாங்கள் தெரிவித்தோம். நான் ஏற்கெனவே இந்த அவையில் கூறியதுபோல, திராவிட முன்னேற்றக் கழக அரசு வெளியேறியபோது, ரிசர்வ் வங்கியிலே 242 கோடி ரூபாய் கடன் பெற்ற நிலையிலும், பல்வேறு Contractors and Suppliers ஆகியோருக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே முடிக்கப்பட்ட திட்டங்களுக்குத் தரவேண்டிய பணத்தை அவர்கள் தாராமல் சென்றுவிட்ட காரணத்தாலும், கிட்டத்தட்ட 700 கோடி ரூபாய் தொகை வழங்கப்படாத நிலையிலும் எங்களது அரசு பொறுப்பேற்றதை அவை அறியும்.

இதுமட்டுமல்ல, நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்திடமிருந்து எங்கள் ஆட்சிக்கு வரவேண்டிய கிட்டத்தட்ட 250 கோடி ரூபாயை திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட காலத்திலேயே முன்பணமாக வாங்கிவிட்ட காரணத்தால், எங்களுக்கு அந்தப் பணமும் ஒரு சுமையாக மாறிவிட்ட நிலையும் அவைக்கு ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல; நெய்வேலி நிலக்கரிக்கு முன்தேதியிட்டு அரசுக்கு வரவேண்டிய பணத்தை, royalty மூலமாக வரவேண்டிய பணத்தை, கோரி வாதிட்டு வாங்கத் தவறிவிட்ட காரணத்தால், 600 கோடி ரூபாய்க்கு மேல் அந்தப் பணமும் ஓர் இழப்பாக அரசுக்கு வந்ததுகூட மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அப்படி நெய்வேலி லிக்னைட்டிற்கு அதிகப்படியான royalty வேண்டுமென்று கேட்டபோது, முன்தேதியிட்டு அரசுக்கு வரவேண்டிய royalty-யைத் தர வேண்டுமென்று மைய அரசு கேட்டபோது, அதற்காக மைய அரசு ஒரு குழுவினை அமைத்தது. அந்தக் குழுவிலே மைய அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்களும் இடம்பெற்றிருந்தார்கள். ஆனாலும்கூட, மாநிலத்திற்கு வரவண்டிய அந்தப் பணத்தை வாதிட்டுப் பெறுவதில் எப்படியோ அதில் அவர்கள் வெற்றி பெறவில்லை; இது வேதனையான ஒன்று என்பதை அவை புரிந்துகொள்ள வேண்டும். ஆந்திர மாநிலத்திலே

இருக்கிற தெலுங்கு தேச இயக்கம் மைய ஆட்சியிலே ஆதரவு இயக்கமாக இருக்கிறது. ஆனாலுங்கூட, ஆட்சிபீடத்தில் எங்களுக்கு இடம் வேண்டாம்; மாநிலத்துக்குத்தான் அதிக உதவி வேண்டும்; மாநில மக்கள் நலன்தான் எங்களுக்கு முக்கிய நலன். பதவி நலன் முக்கிய நலன் அல்ல என்று ஆந்திர மாநிலத்து முதலமைச்சர் மேற்கொண்ட முடிவை ஒருவேளை மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும்; நிதி அதிகாரம் வேண்டும் என்ற அண்ணாவின் கொள்கையில் நம்பிக்கை வைத்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம், டெல்லியிலே மேற்கொண்டிருக்குமேயானால், அந்த 640 கோடி ரூபாய் மாநிலத்திற்கு, தமிழகத்திற்கு நம் மேம்பாட்டிற்கு, மைய அரசு தரவேண்டிய அந்தப் பணத்தைத் தந்திருப்பார்கள். தட்டிக் கேட்கவில்லை. இந்த ஒரு வேதனையான நிலையை தமிழக மக்கள் உணர வேண்டும். அவையும் உணர வேண்டும். தி.மு.க. டெல்லியிலே இதில் செவ்வனே செயல்படவில்லையோ என்ற மக்களின் அச்ச உணர்வை மாற்றும் வகையில் தற்போதேனும் வாதிட்டு, இன்னும் உங்கள் ஆட்சிதான் டெல்லியிலேயிருக்கின்ற காரணத்தால், தராமல் அவர்கள் விட்டுவிட்ட அந்த 640 கோடி ரூபாயை வாங்கித் தர முயற்சிப்பீர்கள் என்ற நம்பிக்கை இந்த அவைக்கு இருக்கிறது. அந்த முயற்சியில் நீங்கள் வெற்றிபெற வேண்டும். இல்லையேல் ஆந்திர மாநில முதல்வர் வழியில் நீங்கள் நடப்பீர்களா என்ற வினாவை மக்கள் எழுப்புகின்ற நிலையை நீங்கள் உருவாக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்.

*முற்பகல் 11-55*

அதைப்போலவே நெல்லைப் பொறுத்தவரைக்கும், மாநில அரசு பொது விநியோக முறைக்கு நெல் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற நோக்கோடு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நெல் கொள்முதல் செய்தது பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பேராசிரியர் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். அப்படி நெல்லைக் கொள்முதல் செய்கிறபோது, 1,445 கோடி ரூபாய் அளவிற்கான கடன் உடனே செலுத்தப்பட வேண்டிய கடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக வந்தபோது, இந்த ஆட்சியின் தலைமையிலே சுமத்தப்பட்டதையும் இந்த அவைக்கு நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னேன். இதிலே ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால், தற்போது நாட்டிலே, "Green Revolution has been accomplished to the maximum extent" என்ற நிலையிலே மைய அரசு அமைச்சர்கூட, எந்த ஆண்டிலும், இந்திய வரலாற்றிலே இல்லாத அளவிற்கு 210 மில்லியன் டன் அரிசி



உற்பத்தியாகிவிட்டதே என்று சொல்லக்கூடிய அளவிற்கு அதிகப்படியான விளைச்சல் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற காரணத்தால், பொது விநியோக முறைக்கு என அதிகப்படியான அரிசி தேவையில்லை, 4 இலட்சம், 5 இலட்சம் டன் அரிசியே போதும் என்ற நிலைதான் தற்போது இருக்கின்ற, கடந்த 7, 8 ஆண்டுகளாக இருக்கின்ற உண்மை நிலை. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 4 இலட்சம், 5 இலட்சம் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்து பொது விநியோக முறையை முன்னர் செம்மையாக நடைமுறைப்படுத்தி வந்தார்கள். ஆனால், அதிகமாக 16 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்ட காரணத்தால், 1,445 கோடி ரூபாய் கடன் பெற்று, அந்த நெல்லைக் கொள்முதல் செய்த காரணத்தால், அரசுக்கு சுமை அதிகமாக ஏற்பட்டது. அந்தச் சுமை மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு மீது, நாங்கள் பொறுப்பேற்றபோது சுமத்தப்பட்டதையும் இந்த அவை அறியும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் உழவர்களுக்கும் நல்ல விலை கிடைக்க வேண்டும். அதே நேரத்தில், அரசுக்கும், பணச் சுமை குறைய வேண்டுமென்ற பொருளாதார நோக்கோடுதான் ஆங்கு நெல், தஞ்சை மாவட்டத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு செல்லக்கூடாது என இருந்த தடையை நீக்கி அந்தப் பகுதியிலே இருக்கின்ற உழவர் பெருமக்கள் என்ன விலைக்கு வேண்டுமென்றாலும், நெல்லை எங்கு சென்று வேண்டுமானாலும், விற்கலாம், காரணம் நெல் உற்பத்தி இந்தியத் துணைக் கண்டத்திலே ஏராளமாக இருக்கின்ற காரணத்தால் அப்படி அந்தத் தடை நீக்கப்படுகிறபோது, அரிசி விலை உயராது என்ற தீர்க்க சிந்தனையோடு அந்தத் தடையை நீக்கினார்கள். இப்படிப்பட்ட அணுகுமுறையை, 4, 5 ஆண்டுகளுக்கு முன்னரே முந்தைய தி.மு.க. அரசு மேற்கொண்டிருக்குமானால், அதிகப்படியான நெல் கொள்முதல் என்ற நிலை அரசுக்கு, பணச் சுமை 1445 கோடி ரூபாய் என்ற ஓர் அவல நிலை தடுக்கப்பட்டிருக்கலாம் என்பதை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதேநேரத்தில் இன்னும்கூட ஒன்று. தஞ்சை மாவட்டப் பகுதிகளிலே இருக்கிற உழவர் பெருமக்கள் இரண்டு, மூன்று வித நெல்லை உற்பத்தி செய்கிறார்கள். ஆனால், மாநிலத்தின் மற்ற பகுதிகளிலே இருக்கிற மக்கள் உயர்தர நெல்லை உற்பத்தி செய்கிறார்கள்.

நண்பகல் 12-00

ஆந்திர மாநிலத்திலே, கர்நாடக மாநிலத்திலே சோனா B.P.T. என்ற நெல்லை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நடைமுறை கொண்டுவரப்பட்ட காரணத்தால் அங்கு உழவர்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்று அரசை அங்கு உழவர்கள் வற்புறுத்துகிற நிலை இல்லாமல் இருக்கின்றது. கடந்த 4 ஆண்டு காலமாக இப்படி கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற, தமிழகத்திலே டீலக்ஸ் என்று சொல்லப்படுகின்ற சோனா B.P.T. என்று கர்நாடக மாநிலத்திலே, ஆந்திர மாநிலத்திலே சொல்லப்படுகின்ற அந்த நெல்லை தமிழக விவசாயிகளுக்கு, அந்த விதையைத் தந்திருப்பார்களேயானால், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதுகுறித்த நல் உணர்வுகளை, அறிவுணர்வுகளை ஊட்டியிருப்பார்களேயானால், அரசு முயற்சி செய்து அந்த நெல் விதைகளை தந்திருப்பார்களேயானால், அந்த உழவர்களுக்கு நல்ல விலை கிட்டியிருக்கும். நல்ல விலை கிட்டக்கூடிய அந்த நெல்லை உற்பத்தி செய்கிறபோது, அரசை கொள்முதல் செய்ய வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தமாட்டார்கள். வெளிச் சந்தையிலேயே அந்த நெல் 11 ரூபாய் 12 ரூபாய் என D.P.L., B.P.T. சோனா வியாபாரிகள் போட்டியிட்டு வாங்குகிற நிலை நாட்டிலே இருக்கின்ற காரணத்தால் தஞ்சைவாழ் மக்களுக்கு, அந்த உழவர் பெருமக்களுக்கு வாழ்க்கைத் தரம் உயரக்கூடிய அளவிற்கு நல்ல விலை கிட்டியிருக்கும். அதைக்கூட கடந்த காலத்தில்-ஒரு பக்கம் தடையைப் போட்டுவிட்டார்கள், ஆனால் இன்னொரு பக்கம் வருமானத்தைப் பெருக்கக்கூடிய உயர் தர நெல்லை உற்பத்தி செய்ய விதைகளைத் தர வேண்டும்; அண்டை மாநிலத்திலே இருக்கிறதே அதை வாங்கித் தர வேண்டும் என்றுகூட முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. அதைவிட வேடிக்கை, கோவையிலே இருக்கிற விவசாயப் பல்கலைக்கழகத்திலும்கூட அந்த B.P.T. சோனாவிற்குச் சமமாக டீலக்ஸ் என்ற ஒரு வகை நெல்லை கண்டுபிடித்து, பரீட்சார்த்தமாக தஞ்சை தாணியிலே அந்த மண் வாகுக்கு ஏற்ப, அந்தச் சூழலுக்கு ஏற்ப அந்த நெல் நல்ல விளைச்சலைத் தருமா என்று ஆய்வு நடத்தியபோது, 5 மூட்டை நெல், ஒரு ஏக்கருக்கு அதிகம் கிடைக்கிறது என்பதைக்கூட கோவையிலே இருக்கிற பல்கலைக்கழக விவசாய விஞ்ஞானிகள் கண்டுபிடித்தும், அதை 3, 4 ஆண்டு காலமாக நடைமுறைக்குக் கொண்டுவராத காரணத்தால்தான் இன்று தஞ்சையிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு இத்தனை வேதனைமிக்க ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது.



அரசினுடைய கஜானாகூட காலி என்ற நிலையிலே 1,145 கோடி ரூபாய் பணச் சுமையை கடந்த கால ஆட்சி வெளியேறும்போது, உருவாக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. பொருளாதார அணுகுமுறையில் சரியான அணுகுமுறை, விவசாயப் பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்படாத காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டது என்பதனை நான் அவைக்குக் கூற விழைகின்றேன். அதுமட்டுமல்ல, அப்படி 16 இலட்சம் டன் நெல்லைக் கொள்முதல் செய்து, விவசாயிகளுடைய நலனுக்காக கொள்முதல் செய்ய வேண்டும் என்று அவர்கள் முடிவு எடுத்தபோது, விவசாயிகளிடமிருந்து மட்டும் அந்த நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. இதுதான் மிக வேதனையான ஒன்று. அப்படி ஒரு கட்டுப்பாட்டைப் போட்டுவிட்டு, நெல்லைக் கொள்முதல் செய்கிறார்கள். ஆனால் வியாபாரிகளுக்கு கட்டுப்பாடு இல்லை. வியாபாரிகள் அந்த நெல்லை எந்த அளவிற்கு வேண்டுமென்றாலும். ஒவ்வொரு குடோனிலும் கொள்முதல் செய்யலாம் என்ற ஒரு நடைமுறையை அவர்கள் கொண்டு வந்த காரணத்தால், வியாபாரிகள் மூலமாக வந்த நெல் ஏகப்பட்ட அளவு இருந்த காரணத்தால், அரசுக்கு அளப்பரிய ஓர் இழப்பு கடந்த கால ஆட்சியிலே உருவானது. அதைத்தான் தற்போது வியாபாரிகளும் கடந்த காலத்திலிருந்து இப்படி நெல்லைக் கொள்முதல் செய்கின்ற காரணத்தால், மூட்டைக்கு 40 ரூபாய் என கிடைக்கிறது, ஈரப் பசையோடு நெல்லைக் கொள்முதல் செய்யலாம் என்ற நிலைகள் எல்லாம் கடந்த காலத்தில் உருவாக்கப்பட்டிருந்த காரணத்தால், தொடர்ந்து வியாபாரிகள் அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தொல்லையாக இப்படி நெல்லை, அவர்கள் பிற மாவட்டங்களிலிருந்து கொண்டு வந்த நெல்லை, குறைந்த விலையிலே ஆந்திர மாநிலத்தில் கிடைக்கிற நெல்லை எல்லாம் லாரி லாரியாக கொண்டு வந்து மூட்டைக்கு 40 ரூபாய் கிடைக்கிறது என்ற நோக்கோடு அந்த நெல்லை தஞ்சையிலே உள்ள குடோனிலே விற்ற காரணத்தினால் 16 இலட்சம் டன் என சென்று அதனால் அரசுக்கு ஒரு மாபெரும் இழப்பு ஏற்பட்டது.

இந்த நிலையைப் போக்குவதற்காகத்தான் இந்த நடைமுறைத் தவறுகளைக் கடந்த காலத் தவறுகளைக் கண்டறிந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தற்போது ஒரு கண்டிப்பான ஆணையையிட்டு வியாபாரிகளிடமிருந்து எக்காலத்திலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் நெல்லைக் கொள்முதல் செய்யக்கூடாது,

அவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். உழவர்களிடமிருந்து அடையாள அட்டை, பட்டா passbook அதேபோல அடங்கல் record போன்ற ஆதாரங்களைக் காண்பிக்கின்ற உழவர் பெருமக்களிடமிருந்து மட்டும்தான் நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்று ஆணையை இட்டு உழவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தற்போது உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-05*

நான் என்னுடைய நிதிநிலை அறிக்கையில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். 2001-2002ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், 6,040 கோடி ரூபாய் திட்டச் செலவு என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், நாடெங்கிலும் இன்று இருக்கிற சூழல், மாறுபட்ட சூழல்; அதை அவை அறியும். தமிழ்நாட்டில் மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டத்திலேயே, there is an economic recession in abundance என்ற முறையிலே, மைய அரசே இதுபற்றி, மாண்புமிகு மைய நிதியமைச்சர் சின்ஹா அவர்கள், அவர்களுடைய நிதிநிலை அறிக்கையில் எடுத்துக் கூறியதைப்போல, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய எல்லாப் பகுதிகளிலும், industrial recession and overall economic recession இருக்கிற காரணத்தால், அந்தப் பாதிப்பு தமிழகத்தையும் தாக்கி இருக்கிறது; அதன் காரணமாக, வரிகள் வாயிலாகக் கிடைக்கின்ற வருவாய்த் தொகை, அனைத்திந்திய அளவிலும், மாநில அளவிலும் பின்னடைவு கண்டுள்ளதைப் போலவே, நாம் முன்னர் திட்டமிட்ட அளவான 3,367 கோடி ரூபாயிலிருந்து, 2,855 கோடி ரூபாயாகக் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால், தமிழக அரசுக்கு— இதுவும் இந்த நிதியைக் குறைத்தது, மைய அரசுதான் குறைத்தது. 3,367 கோடி ரூபாய் மாநில அரசுக்கு அவர்கள் நிதியாகத் தர, மத்திய வரிப் பங்கீட்டு அளவினுடைய வரவு-செலவுத் திட்டத்தில் நிதியாகத் தர ஒத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், இந்தக் காரணத்தைச் சொல்லி, 2,855 கோடி ரூபாய்தான் தரமுடியும் என்று சொல்லிவிட்டார்கள். இப்படி அவர்கள் சொல்லிவிட்ட காரணத்தால், நமக்கு 512 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல; 11-வது நிதிக் குழுவின் பரிந்துரைகளினால், மத்திய வரிப் பகிர்வில், தமிழகத்தின் பங்கை 6.637 சதவிகிதத்திலிருந்து 5.385 சதவிகிதமாக மைய அரசு குறைத்துவிட்டது. அப்படி குறைத்த காரணத்தால், 2000-லிருந்து 2005-ஆம் ஆண்டு வரை, 2,946 கோடி ரூபாய்



அளவிற்கு மைய அரசு நமது மாநில அரசுக்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் குறைத்துவிட்டார்கள். இப்படிக் குறைத்ததிலே, 589 கோடி ரூபாய் அரசுக்கு ஒரு பெரும் இடியாக, பாதிப்பாக ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட இந்த இழப்புகளைச் சரிகட்ட வெளிச் சந்தையில் கடன் வாங்க வேண்டுமென்று மைய அரசை அனுமதி கேட்டாலும்கூட, இந்த இழப்பீட்டை முழுமையாகச் சரிகட்டாத வரையில், மத்திய அரசு மாநில அரசுக்கு அதிக உதவி தரமாட்டோம் என்ற ஒரு நிலையை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, industrial recession, economic recession என்று நான் சொன்னேன். Purchasing power of the people, consumption of goods and services என்பவை எல்லாம் மிகவும் குறைந்துவிட்ட நிலையில்தான், நமக்குப் பலவித பாதிப்புகள் தற்போது ஏற்பட்டிருக்கின்றன. These are basically taxes on consumption of goods and services. தற்போது விவரித்தவாறு, தமிழகத்தினுடைய பொருள்கள் — மக்கள் வாங்குகிற சக்தி குறைந்துவிட்ட காரணத்தால், நமக்குப் பலவிதத்தில் வருவாய்க் குறைவு ஏற்பட்டிருக்கிறது. Sales Tax-ஐப் பொறுத்தவரைக்கும், 16 சதவிகித வரி வளர்ச்சி இருக்குமென்றே ஆரம்பத்தில் நாங்கள் கணக்கிட்டோம். ஆனால், இந்த recession காரணமாக, உற்பத்திப் பெருக்கம் அதிகம் இல்லை ஒருபுறம்; சிறுதொழில்கள் எல்லாம் பாதிப்புக்குள்ளாகியிருக்கிற நிலை. இப்படிப்பட்ட நிலையிலே, நாங்கள் எதிர்பார்த்ததைவிட வளர்ச்சி விகிதம் மிகவும் குறைந்துவிட்ட காரணத்தால், இந்த ஆண்டு நாங்கள் 10 ஆயிரம் கோடி ரூபாய் வரி வருமென்று எதிர்பார்த்தோம். ஆனால், அதற்கு மாறாக, 8,909 கோடி ரூபாய்தான், வணிக வரிகள் மூலமாக, அரசுக்கு வரி கிட்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல; அப்படி கடன் வாங்கியாவது இந்தப் பிரச்சினையைச் சமாளிக்கலாமா என்று அரசு முயற்சி செய்கின்றபோது, எந்தவொரு மாநில அரசும், தம் திட்டங்களுக்காக, வெளிச் சந்தையிலிருந்தோ, நிதி நிறுவனங்களிடமிருந்தோ கடன்பெற நினைத்தால், அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநில அரசு, மத்திய அரசினுடைய முன் அனுமதியைப் பெற்றுத்தான் கடன் வாங்க வேண்டும் என்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்தத் தட்டுப்பாட்டை— இந்தக் கட்டுப்பாட்டைத் தவிர்க்க, தமிழ்நாடு உட்பட பல மாநிலங்கள் நேரடியாக நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறாமல், மாநில அரசினுடைய அரசு நிறுவனங்களான TIDCO, TWARD போன்ற நிறுவனங்கள் மூலமாகக் கடன்பெற்று, திட்டங்களைக் கடந்த காலத்தில் செயல்படுத்திக் கொண்டு வந்திருந்தார்கள். ஆனால், தற்போது நிலைமை மாறாக இருக்கிறது. தமிழக அரசு இதுவரை பல ஆண்டுகளாக குடிநீர்த்

[திரு. சி. பொன்னையன்] [2002 ஏப்ரல் 8

திட்டங்களை, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலமாக கடன் பெற்று செயல்படுத்தி வந்தது. காவலர் வீட்டுவசதித் திட்டங்களை, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் மூலமாக கடன் பெற்று செயல்படுத்தி வந்தது. இதற்கு கடந்த காலத்தில் மத்திய அரசு அனுமதி தந்தது. சாலை மற்றும் இரயில்வே, திட்டங்களை, TIDCO நிறுவனம் மூலமாக கடன் பெற்று நாம் திட்டங்களை செயல்படுத்தி வந்தோம். மைய அரசு கடந்த காலத்தில் இதற்கு அனுமதி தந்தது.

*பிற்பகல் 12-10*

அதைப் போலவே, Radial Roads — ஆரச் சாலைகளை மேம்படுத்தும் திட்டம், கோயம்பேடு பேருந்து நிலையம், கூவம், அடையாறு போன்ற ஆறுகளைத் தூர் வாரும் திட்டம் ஆகியவற்றிற்குங்கூட சென்னைப் பெருநகர் மேம்பாட்டுக் கழகம் மூலம் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற மத்திய அரசு கடந்த காலத்தில் அனுமதி தந்தது. இந்த வகையில் கடன் பெறுதல், மறைமுகமாக மாநில அரசின் கடன் என்ற காரணத்தைச் சொல்லி, சமீபத்திலே கடந்த அக்டோபர் மாதத்தில் மத்திய அரசு இவ்வாறு மாநில அரசுகள் கடன் பெறுமாயின் அவற்றிற்கும் மத்திய அரசினுடைய முன் அனுமதி பெற வேண்டும் என்று மாநில அரசுக்கு ஒரு கட்டளையையிட்டு இருக்கிறது. பல நேரங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏன் இதற்கு நிதி இல்லை, குறிப்பிடப்படவில்லையே, குறிப்பிடப்படவில்லையே என்று சொன்னார்கள். அப்படி குறிப்பிடப்படாததற்குக் காரணம், அரசினுடைய நிதி ஒதுக்கீட்டின் மூலமாக பல திட்டங்களுக்கு அரசு நிறுவனங்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுகின்ற இது காறும் இருந்து வந்த உரிமையை மத்திய அரசு பறித்துவிட்ட காரணத்தால், அதைத் தராத காரணத்தால், அதைத் திட்டம்-சாரா செலவு, நிதி ஒதுக்கப்படாத Non-budgetary allocation என்ற முறையிலே கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டது. மத்திய அரசு, இப்படிப்பட்ட ஒரு முறையை எடுத்துவிட்ட காரணத்தால் மத்திய அரசு மாநில அரசின் கடன் வாங்கும் திறனைக்கூட தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து எடுத்துக்கொண்டது என்பதனை மாண்புமிகு அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும் குறிப்பாக இதிலே முக்கியமாக ஒன்றைச் சொல்ல வேண்டும். Open Market borrowing. R.B.I. borrows on behalf of the State Government. அந்த Open Market borrowing என்று சொல்லக்கூடிய, வெளிச் சந்தையிலிருந்து வாங்குகிற அந்த



2002 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

கடனுக்குக்கூட மத்திய அரசு தற்போது கட்டுப்பாட்டை விதித்துவிட்டது. அதைப் போலவே, Negotiated Loans—மாநில அரசைப் பொறுத்தவரைக்கும், எல்.ஐ.சி., ஹட்கோ போன்ற அமைப்புகள் மூலமாக அவர்கள் தருகின்ற பணத்தை நாம் பேச்சுவார்த்தை மூலமாக தண்ணீர் திட்டங்கள்— Water Supply Schemes, Infrastructure development ஆகியவற்றிற்கு வாங்கலாம். அப்படி வாங்குவதற்கு மத்திய அரசினுடைய அனுமதி தேவை. ஆனால், தற்போது அப்படிப்பட்ட கடன்களை வாங்குவதற்குக் கூட கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்துவிட்டது.

அதுமட்டுமல்ல, Bonds and Debentures என்று சொல்லக்கூடிய அந்த முறையிலே மாநில அரசைப் பொறுத்தவரைக்கும் guarantee கொடுத்து TIIC, TIDCO போன்ற அமைப்புகள் மூலமாக கடனைப் பெற்று பல வளர்ச்சித் திட்டங்களை இதுகாறும் நடைமுறைப்படுத்தலாம் என்ற நிலை இருந்தது. ஆனால், மத்திய அரசு தற்போது வேறு ஒரு முறையை நடைமுறைக்கு கொண்டுவந்து விட்டது. அப்படி TIDCOவினுடைய திட்டத்திற்கு Bonds மூலமாக பல வங்கிகள் கடனைக் கொடுக்கின்றபோது, அந்த Bonds திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருகின்ற டிட்கோவுக்கு மாநில அரசு guarantee தருகிறது. அந்த மாநில அரசினுடைய பொருளாதார நிலை என்ன என்பதனைக் கண்டறிய வேண்டுமென்று மத்திய அரசு ஓர் உத்தரவு இட்டுவிட்டது.

உலக வங்கி, International Monetary Fund, Asian Development Bank ஆகிய அன்னிய வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் இந்திய நாட்டுக்குப் பணத்தைத் தருகிறபோது அல்லது இந்திய அரசின் மூலமாக மாநிலங்களுக்குப் பணத்தைத் தருகிறபோது, எந்த ஒரு திட்டத்திற்குப் பணத்தைத் தந்தாலும், whether the project is a viable project, whether the project is a bankable project என்பதனைக் கண்டறிந்து, appraisal செய்து appraisal-லிலே அந்தத் திட்டமே வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தக்கூடிய அளவிற்கு, if it is a profitable venture, if it is a viable venture, பணம் தரலாம் என்று வெளி நாடுகள் கடன் தருகிறபோது, அந்த முறையை மேற்கொள்கிறார்கள். ஆனால், நமது மத்திய அரசு மிகவும் வேதனைக்குரிய அளவிற்கு, மாநில அரசுகளின் Financial Power - என்று சொல்லக்கூடிய பண அதிகாரத்தை முழுவதும் பறிக்கக்கூடிய அளவிற்கு அவர்கள் தற்போது எப்படிப்பட்ட உத்தரவை இடுகிறார்கள் என்றால், TIDCO கடன் வாங்குகிறது; தண்ணீர் திட்டத்திற்காக TWARD போர்டு கடன் வாங்குகிறது. அப்போது அதற்கு மாநில அரசு கியாரண்டி தருகிறது. ஆனால் தற்போது வங்கிகளுக்கு எப்படிப்பட்ட உத்தரவை

[திரு. சி. பொன்னையன்] [2002 ஏப்ரல் 8

மைய அரசு அனுப்பியிருக்கிறது என்றால், ரிசர்வ் வங்கிக்கு எப்படிப்பட்ட உத்தரவை அனுப்பியிருக்கிறது என்றால், அந்த TWARD போர்டு கடன் வாங்குகிறது என்றால், TWARD போர்டுக்கு தமிழ்நாடு அரசு ஒரு உறுதியைத் தருகிறது, guaranteeயைத் தருகிறது என்றால், தமிழக அரசுக்கு உறுதி தரக்கூடிய அளவுக்கு, அவர்களுடைய பொருளாதார நிலை சரியாக இருக்கிறதா என்ற ஆய்வினைச் செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில்தான் கடனைத் தரவேண்டுமென்று மைய அரசு இப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாட்டை தற்போது விதித்துவிட்டது. இதன் காரணமாக மாநில அரசு நிதி ஆதாரங்களை அதிகமாகத் திரட்டக்கூடிய வாய்ப்புகளை, மைய அரசு இந்த அதிகாரத்தை தன் கையில் கடந்த அக்டோபர் மாதம் எடுத்துக்கொண்ட காரணத்தால் இப்படிப்பட்ட ஓர் இடர்பாடு ஏற்பட்டு இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, அவர்களது கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-15*

இதற்கு ஒரேயொரு வழி. நாம் இதையெல்லாம் மீறி தற்போது பல திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்றால், நம் கையில் இருக்கிற ஒரேயொரு வழி B.O.T. - என்று சொல்லக்கூடிய Build, Operate and Transfer என்ற திட்டங்கள் மட்டும்தான், that too, subject to the viability of the project. அப்படிப்பட்ட திட்டங்களுக்கு மட்டும் மைய அரசு அனுமதி தருகிறது. அப்படிப்பட்ட திட்டங்களை எங்கெங்கு கொண்டு வர முடியும்? சாலைகளை அமைக்கலாம், Toll collection மூலமாக அந்த வருமானத்தைப் பெற்று, வாங்கிய கடனை அவர்கள் பெற்றுக்கொண்டு அந்தக் கடன் எல்லாம் திருப்பிச் செலுத்தப்பட்ட காலத்திற்குப் பிறகு, அந்தச் சாலை அரசினுடைய பொறுப்புக்கு வந்துவிடும்.

அடுத்து, தண்ணீர். திருப்பூரிலே ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். திருப்பூரிலே குடிநீர் திட்டத்தை பொறுத்தவரைக்கும் இந்த B.O.T. என்ற ஸ்கீம் மூலமாக அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர தனியார்கள் முதலீடு செய்கிறார்கள். மக்களிடமிருந்து தண்ணீர் வரியினை வசூல் செய்து அந்தக் கடனைக் கட்டுவதற்கு Escrow agreement மூலமாக ஓர் உடன்பாட்டை மேற்கொண்டு அப்படி அந்தத் தண்ணீர் வரியிலிருந்து கடனைத் திருப்பிச் செலுத்துகிற ஒரு நிலை உருவாகும்போது அப்படி பணம் கிடைக்கிறது. ஆனால் ஒரு வளருகிற நாட்டில், ஏழ்மை மிகுந்து இருக்கிற



2002 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

நாட்டில், வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்து இருக்கிற நாட்டில் இப்படிப்பட்ட அணுகுமுறையில் மட்டும் நாம் திட்டங்களை ஈடேற்ற முடியாது. மாநில அரசுக்கு மைய அரசு நிதியை ஒதுக்குகிற அந்த முறையினை மாற்ற வேண்டும். அப்படி மாற்றுகிற சூழ்நிலையில்தான் அந்தப் பிரச்சினைகள் தீரும் என்ற நிலையை அவைக்கு நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

கடந்த நிதியாண்டில் திட்ட அளவினை—ஏன் திட்ட அளவை ரூ.6,040 கோடியிலிருந்து 5,200 கோடி ரூபாயாக குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதற்குள்ள காரணங்களை நான் எடுத்துச் சொன்னேன். நமது மாநிலத்தில் மட்டுமல்ல, மராட்டிய மாநிலத்தில் ரூ.10,834 கோடி என்று திட்ட மதிப்பீடு இருந்தது. ஆனால் நம்மைவிட அதிகமான பிரச்சினை அவர்களுக்கும் அங்கு இருக்கிற காரணத்தால் அவர்கள் அதை ரூ.10,834 கோடியை, ரூ.5,500 கோடியாகக் குறைத்துவிட்டார்கள். அதைப்போலவே மேற்கு வங்க அரசுகூட, ரூ.7,111 கோடியிலிருந்து 5,797 கோடி ரூபாயாக ஆங்கு இருக்கிற சூழல் காரணமாக மைய அரசு உதவி கிட்டாத காரணத்தால் மாநிலத்திலே இருக்கிற recession காரணமாக அவர்களும் குறைத்துவிட்டார்கள். கர்நாடக அரசைப் பொறுத்தவரையில் ரூ.8,940 கோடியிலிருந்து அவர்கள் ரூ.7,484 கோடியாக குறைத்துவிட்டார்கள். கேரள அரசு ரூ.2,260 கோடியை குறைத்துவிட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை தற்போது உருவாக்கப்பட்டு இருக்கிறது. மைய அரசினுடைய நிதிப் பங்கீட்டு அணுகுமுறையில் அவர்கள் மேற்கொண்டிருக்கிற மாறுபட்ட அணுகுமுறை காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் அவைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றை நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். அப்படி மைய அரசு மாநில அரசுகளுக்கு நிதியினை ஒதுக்குகிறபோது பல அணுகுமுறைகளை மேற்கொள்கிறது. உதாரணமாக, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் வளர்ந்துவிட்ட ஒரு மாநிலம் என்று சொல்கிறார்கள். வளர்ந்துவிட்ட மாநிலம் என்று சொல்கிற காரணத்தால் இங்கு மக்கள் தொகைப் பெருக்கம் குறைக்கப்பட்டிருக்கிறது. More infrastructural facilities have been provided in the State of Tamil Nadu. Literacy percentage has increased to a considerable extent என்ற இப்படிப்பட்ட காரணங்கள் எல்லாம் முன்னேறிய மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டுகள் [illegible]



காப்பகம்
224489.
சென்னை-600 008

*பிற்பகல் 12-20*

Per capita income கூட தமிழகத்திலே அதிகம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதையும் எப்படிக் கணக்கிடுகிறார்கள் என்றால் 6 கோடி மக்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள். தமிழகத்தினுடைய ஒட்டு மொத்த வருமானம் the corporate and income tax that goes to the Government of India அதைக் கணக்கெடுக்கிறார்கள். அப்படி ஒரு 10 ஆயிரம் கோடி தமிழகத்திலே இருந்து corporate tax மைய அரசுக்கு செல்லுமே என்றால் அதை தமிழகத்திலே இருக்கிற 6 கோடி மக்கள் தலையிலே வகுத்து அதையும் ஒரு காரணமாகக் கொண்டு per capita income-அடிப்படையாகக் கொண்டு per capita income-ஐ decide செய்வதற்கு இப்படி ஒரு வரையறையை மேற்கொள்கிறார்கள். அப்படி மேற்கொள்கிறபோது ஒரு 19 ஆயிரம் ரூபாய் சராசரி தமிழகத்திலே per capita income என்றால், பட்டினி கிடக்கின்ற மக்கள், ஏழை எளிய மக்கள், உண்ண உணவு இன்றி தத்தளிக்கிற மக்கள், கட்டிய சேலைகளை மாற்றுவதற்குக்கூட வக்கின்றி, வகையின்றி தடுமாறுகின்ற மக்கள், below poverty line என்று சொல்லக்கூடிய அளவுக்கு வறுமைக் கோட்டினுடைய எல்லைக்குகீழே வாழ்கிற மக்கள், 35 சதவிகிதம் மக்கள், தமிழகத்து மக்கள் என்று இருக்கின்றபோது, அவர்கள் ஏதோ சில காரணங்களைச் சொல்லி தமிழகம் வளர்ந்துவிட்ட மாநிலம் என்று சொல்லி நமக்கு ஒதுக்கக்கூடிய நிதியை மிக அதிகமாக, அதிகமான அளவுக்கு, தேவையான அளவுக்கு ஒதுக்காமல், மிக அதிகமான அளவுக்கு குறைத்துவிட்ட காரணத்தால், தற்போது நாங்கள் நிதி ஒதுக்கீட்டிலே, இந்தக் குறைப்பை தவிர்க்க முடியாமல் மேற்கொள்ள நேரிட்டது என்பதை இந்த அவைக்கு எடுத்துச் சொல்ல நான் விழைகிறேன். இன்னும்கூட ஒன்று. இன்னொரு criteria சொல்கிறார்கள். எந்த ஒரு மாநில அரசு அதிகமான சொந்த வருமானம் பெறுகிறதோ அந்த மாநிலத்திற்கு அதிகமான சலுகைகளை செய்யலாம் என்ற ஒரு வரையறை மைய அரசிடம் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் அவர்கள் அதைக் கடைப்பிடிப்பது இல்லை.

உதாரணமாக, ஆந்திர மாநிலத்தை எடுத்துக் கொண்டால் ஆண்டுக்கு அவர்களுடைய சொந்த வருமானம் வெறுமனே 10,458 கோடி ரூபாய்தான். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் 12,566 கோடி ரூபாய். கர்நாடக மாநிலத்தினுடைய வருமானம் 9,214 கோடி ரூபாய். அதுவும் தமிழகத்தினுடைய வருமானத்தை விட குறைவு. குஜராத் மாநிலத்திலே 9,160 கோடி ரூபாய். பீகாரில் வெறுமனே 2,935



கோடி ரூபாய்தான். உத்திரப்பிரதேசத்திலே 10 ஆயிரம் கோடி ரூபாய். ஆனால் மைய அரசு 12,566 கோடி ரூபாய் சொந்த வருமானம் உள்ள நமக்கு 2,901 கோடி ரூபாயைத்தான் ஒதுக்குகிறார்கள். ஆனால், 2,935 கோடி ரூபாய் மட்டுமே குறைந்த வருமானம் உள்ள முன்னேறாத மாநிலமாக, முன்னேற முயற்சிகளை மேற்கொள்ளாத மாநிலமாக இருக்கின்ற பீகாருக்கு அவர்கள் ஒதுக்குகிற தொகை 6,574 கோடி ரூபாய். இந்த பாரபட்சத்தை அவர்கள் அந்த share of central tax-லே தருகிறார்கள். அதைப்போலவே 12,566 கோடி ரூபாய் சொந்த வருவாய் என்று நாம் வைத்து இருக்கிறோம். நமக்கு மைய அரசு share of central tax-லே தருவது வெறுமனே 2,901 கோடி ரூபாய். ஆனால் ஆந்திரப்பிரதேசம், நம்மைவிட 2,500 கோடி ரூபாய் குறைவான சொந்த வருமானத்தில் இருக்கிறது. 10,458 கோடி ரூபாய்தான். நமக்கு அவர்கள் ஒதுக்குவது 2,901 கோடி ரூபாய். ஆனால் அவர்களுக்கு ஒதுக்குவது 4,017 கோடி ரூபாய். இப்படிப்பட்ட பாரபட்சத்தை மைய அரசு மேற்கொள்கிறது. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கட்சி ஆதரிக்கிற மைய அரசு ஒதுக்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற உணர்வோடு இருக்கின்ற நாம் இதை மைய அரசிடம் எடுத்துச் சொல்ல வேண்டும், வாதிட வேண்டும். நமது உரிமையை விட்டுக் கொடுக்கக்கூடாது. ஆக, (குறுக்கீடு) இல்லை, இல்லை. I am not yielding Please, I will conclude. No. No.

**THIRU DURAIMURUGAN:** You mentioned my name.

**HON. THIRU C. PONNAIYAN:** I give an opportunity to give your reply at the end. I am not telling any allegation. I am not telling any charge.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *துரைமுருகன், உட்காருங்கள். நிதி அமைச்சர் அவர்கள் நீங்கள் கவனமாக இருக்கின்றீர்களா என்று பரிசோதிப்பதற்காக சொன்னாரேதவிர, உங்களை எழச் சொல்லவில்லை. உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துரைமுருகன் அவர்களைப் பற்றியோ, திமுகவைப் பற்றியோ, நான் குறை சொல்லவில்லை. நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்குச் சொல்லுகிறேன்.* (Interruption) Kindly do not stand in the way.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் பேசி முடிக்கட்டும். வாய்ப்பு தருகிறேன்.*

[திரு. சி. பொன்னையன்] [2002 ஏப்ரல் 8

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நீங்கள் இப்படி பண்ணினால் 4 மணிக்குத்தான் அவை முடியும். தயவு செய்து (குறுக்கீடு) ..... Kindly I will conclude. Before concluding ....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்கட்சித் துணைத் தலைவர் உட்காருங்கள்.

*பிற்பகல் 12-25*

**HON. THIRU C. PONNAIYAN:** I request not to interrupt before I express my views in full. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் சொல்வதற்கு காரணம் நமக்கு 12,566 கோடி ரூபாய் வருமானம் இருக்கிறது. எந்த ஒரு மாநில அரசு அதிகப்படியான வருமானத்தைப் பெறுகிறதோ, நல்ல வரி விதிப்பு முறைகளைக் கொண்டு நன்கு, செம்மையாக நடைபெறுகிறதோ அந்த மாநிலத்திற்கு உற்சாகம் தரவேண்டிய விதிமுறைகளை டெல்லி வைத்திருக்கிறது. ஆனால் நமக்கு அவர்கள் ஒதுக்குகிற நிதி ரூ. 2901 கோடிதான். இந்த நிலை மாற வேண்டும். டெல்லியிலே இருக்கிற, அந்த ஆட்சியிலே இடம் பெறாத, தோழமையாக இருக்கிற ஆந்திரப்பிரதேசத்தினுடைய முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள், அந்த அமைச்சரவையிலே இடம் பெறாமலேயே 4,017 கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறார். அந்த அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கிற நீங்கள் இதில் ஏன் ஏமாந்தீர்கள்? தமிழ்நாடு ஏன் மறுக்கப்பட்டது என்பதற்காகச் சொல்கிறேன். இதில் ஏமாறக்கூடாது. எதிர்காலத்தில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும், தொடர்ந்து ஆட்சியிலே இருக்கிறீர்கள். Discretionary quota போல், வரையறை இல்லாமல், ஒரு discretionary allocation-ஐ போல், மைய அரசு செய்கின்ற நிலை மாற்றப்பட வேண்டும். உங்களது பங்கு ஆங்கு இதற்கு செம்மையாக இருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் பல்வேறு மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதிக் குழு தந்த formula அடிப்படையில் ஒதுக்கப்படுகிற அந்த நிதி, தமிழகத்திற்குக் குறைவாகவும், பீகார், ஒரிஸ்ஸா போன்ற பின்தங்கிய மாநிலங்களுக்கு அதிகமாக இருப்பதையும் எடுத்துச்சொல்லி, இதிலே தி.மு.க. மத்திய அரசிலே பங்குபெற்று வருகிற காரணத்தால், அதை வலியுறுத்தாத காரணத்தால், ஏமாந்து விட்டது என்ற கருத்தை எடுத்துச் சொல்கிறார். இந்தக் கருத்து அடிப்படையில் கலைஞர் அவர்கள்



2002 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

முதலமைச்சராக இருந்த காலத்தில் இந்த பார்முலா தவறு, இந்த முறை தவறு, முன்னேறிய மாநிலங்கள் அந்த முன்னேற்றம் காரணமாக எந்தவகையிலேயும் பாதிக்கப்படக்கூடிய ஒரு பார்முலாவை மத்திய நிதிக்குழு மேற்கொள்ளக்கூடாது என்று அப்போதே அவர்கட்கு எழுதியும் பேசியும் இருக்கிறார், வெற்றி பெறவில்லை என்பது வேறு. அந்தக் கொள்கையை முழு அளவில் தி.மு.க. ஆதரிக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே இன்னும் ஒன்று. It is an allocation by way of discretion என்ற முறையிலே மைய அரசு செய்கிறது. தமிழ்நாடு அரசுக்கு grants from Central Government 1,497 கோடி ரூபாய் மட்டுமே தருகிறது. ஆனால் இந்த கிரான்ட்ஸைப் பொறுத்தவரைக்கும் there is no specific formula. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல் தனி பார்முலா முறையிலே அந்த கிரான்ட்ஸ் தரப்படுவதில்லை. சாமர்த்தியத்தின் அடிப்படையில் பெறுகிறார்கள். மைய அரசோடு அவர்களுக்கு இருக்கிற உறவைப் பயன்படுத்திப் பெறுகிறார்கள். அப்படி அந்த உறவைப் பயன்படுத்திப் பெறுகின்ற வாய்ப்பு தமிழகத்தினுடைய அரசுக்கு, எங்களுக்குத் தற்போது இல்லை என்றாலும்கூட, டெல்லியிலே இருக்கிற அரசு, உங்கள் அரசு என்ற காரணத்தால், நீங்கள் இதையும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். முயற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். தமிழகத்திற்கு நாங்கள் 12,566 கோடி ரூபாய் வரி வருமானத்தைப் பெருக்கிய போதும், வெறுமனே 1,497 கோடி ரூபாய்தான் தந்திருக்கிறார்கள். ஆனால், ஆந்திரப்பிரதேசத்திற்கு 2,547 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். இப்படி கிட்டத்தட்ட 1,100 கோடி ரூபாய் கிரான்ட்ஸ் என்ற முறையிலே பல்வேறு திட்டங்களுக்கு டெல்லியிலே — இங்குதான் நான் சொல்கிறேன். டெல்லியிலே ஆட்சியிலே இருக்கிற கட்சியுடன் நீங்கள் இருக்கிற காரணத்தால், தமிழகத்தை அரசியல் பாகுபாடுகளுக்கு அப்பால் நின்று, தமிழகத்தை புரட்சித் தலைவி ஆளுகிறார்களா, யார் ஆளுகிறார்கள் என்ற குறுகிய வட்டத்திற்குள் செல்லாமல், தமிழகத்தை முன்னிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்றால், மைய அரசோடு அமைச்சரவையில் இருந்துகொண்டு போராடி, நமது மாநில மக்கள் முன்னேற்றத்திற்கு, தமிழ்ச் சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்கு எப்படி ஆந்திர மாநிலத்து முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் அமைச்சரவையில் இடம் பெறாமலேயே அந்த மாநில வளர்ச்சிக்கு நிதியினைப் பெறுகின்றாரோ, அதுபோல் நீங்கள் — நான் அரசியல்

நோக்கோடு இதைச் சொல்லவில்லை— இந்த முயற்சியிலே அதிகமாக ஈடுபட வேண்டும். காரணம், நமக்கு 1,497 கோடி ரூபாய் . . .

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் அந்த details என்னவென்று சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், அந்த details சொல்லி விடுகிறேன். ஒன்றே ஒன்றைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், நிதி அமைச்சர் அவர்கள் சொல்லிவிடட்டும். நீங்கள் விளக்கம் எதுவும் கேட்பதாக இருந்தால், நிதியமைச்சர் பேசி முடித்தவுடன் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 1,497 கோடி ரூபாய் .... (குறுக்கீடு) I will give more information to honourable Duraimurugan. After listening to further information ...... (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், கோபப்படாதீர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** I will be yielding after you listen to me.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்த பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

***திரு. துரைமுருகன்:** விளக்கம்கூட கேட்பதற்கில்லை என்று சொன்னால், நாங்கள் எதற்காக இங்கே உட்கார்ந்திருக்க வேண்டும். அவர்பாட்டுக்குச் சொல்லிக்கொண்டே போகிறார். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-30

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள் விளக்கம் கேட்டார்கள், அவர் விளக்கம் சொன்னார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அவர் பேசி முடித்த பிறகு உங்களுக்கு வாய்ப்பு நிச்சயமாகத் தரப்படும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர்கள் மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்பொழுதும் அதுதான் நடைமுறை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நீங்கள் முயற்சிக்க வேண்டுமென்று சொன்னதற்குக் கோபம் வருகிறது, எதற்கெடுத்தாலும் கோபப்படக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு தெரிவித்துக்கொள்கிறேன், நிதி அமைச்சர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு நீங்கள் விளக்கம் கேட்கலாம். எப்போதும் அதுதான் நடைமுறை. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தமிழக மக்களுடைய நலனில் நீங்கள் (குறுக்கீடு) நான் சொல்வதெல்லாம் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பேச்சிலே நீங்கள் குறுக்கிட்டால் இன்னும் நேரம் நீளும். அதைத்தான் அவர் குறிப்பிட்டுச் சொல்கிறார். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Let me complete my sentence.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். நிதியமைச்சர் பேசி முடித்த பிறகு நீங்கள் விளக்கம் கேட்கலாம். அதுதான் நடைமுறை. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** நிதியமைச்சர் சொல்வதற்கு நாங்கள் விளக்கம் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வது, நான் பேசி முடித்த பிறகு நீங்கள் பேசுங்கள். நீங்கள்

பேச வேண்டாமென்று சொல்லவில்லை. உங்கள் கருத்துகளைச் சொல்ல வேண்டாமென்று நான் சொல்லவில்லை. தயவுசெய்து உங்கள் கருத்துகளைச் சொல்லுங்கள். நான் பேசி முடித்துவிடுகிறேன், அதற்காகச் சொன்னேன். நான் சொல்ல வேண்டியதை மட்டும் விளக்கிவிடுகிறேன். கிரான்ட் என்பது Discretionary allocation *(குறுக்கீடு)* நான் சொல்லி முடிக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.கழகத்தின் சார்பில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, அவர் சொன்ன எத்தனையோ கருத்துகளுக்கு எங்களுக்கு உடன்பாடு இல்லை. அப்பொழுது நான் பலமுறை எழுந்து பதில் சொல்லியிருக்க முடியும். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது குறுக்கிடக் கூடாது என்பதற்காக நான் அமைதி காத்தேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* எல்லோரும் அமைதி காத்தார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரை அளிக்கும்போது எல்லாவற்றுக்கும் அவர் விளக்கம் அளிப்பார் என்று நாங்கள் அனைவரும் அமைதி காத்தோம். இப்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரை தந்து கொண்டிருக்கிறார்கள். அவர் பேசி முடித்த பிறகு மாண்புமிகு துரைமுருகன் அவர்களும், மற்றவர்களும், யார் வேண்டுமானாலும் விளக்கங்கள் கேட்கலாம். நிதியமைச்சர் அவர்களும் பதில் தருவார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மத்திய அரசு, மாநில அரசுக்கு, தமிழக அரசுக்கு ஒதுக்குகின்ற அந்த நிதியில் அவர்கள் வரையறுத்திருக்கின்ற, அதிக வருமானம் பெறக்கூடிய அளவிற்கு மாநிலம், தன் நிருவாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டுமென்ற ஒரு நிலையினை நடைமுறைப்படுத்திய காரணத்தால், 12,566 கோடி ரூபாய் வருமானம் பெற்றும்கூட, நமக்கு 1,197 கோடி ரூபாயை மட்டும் ஒதுக்கிவிட்டு, உத்திரப்பிரதேச மாநிலத்திற்கு 5,124 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்திற்கு 2,547 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோன்று குஜராத மாநிலத்திற்கு 2729 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இப்படிப்பட்ட பாகுபாட்டை மத்திய அரசு, Grant என்ற தலைப்பிலே கொண்டு வரவில்லையென்றால், கட்டாயம் இந்த 690 கோடி ரூபாயைக்கூட வரி போட வேண்டாம் என்று ஒரு



நிலையை இந்த அரசு மேற்கொண்டிருக்கும். உபரியான பணம் நமக்குக் கிட்டியிருக்கும். மக்களுக்கு சுபிட்சமான நலத் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தி வரியில்லாத ஒரு பட்ஜெட்டை நாம் தந்திருக்க முடியும். இப்படி வரி போடக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியதே இந்த கிரான்ட் என்ற முறையிலே தமிழக அரசுக்கு, மாநில அரசுக்கு குறைந்த நிதியை ஒதுக்கிவிட்டது காரணம். கிரான்ட் என்ற முறையிலே Discretionary allocation-ல் நமக்கு பாரபட்சத்தைக் காட்டிய காரணத்தால்தான் இந்த நிலை ஏற்பட்டுவிட்டது என்பதை நான் அவைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் பொறுத்தவரைக்கும் எத்தகைய அணுகுமுறைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் இதுகாறும் எடுத்துச் சொன்னேன். தற்போது நாம் சில கடுமையான நடவடிக்கைகளை ஏன் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

மாநில அரசு ஓராண்டில் வாங்கும் கடன் அளவின் உச்சவரம்பு மத்திய திட்டக் குழு, மாநில அரசின் திட்ட அளவை நிர்ணயிக்கும் போதுதான் எடுக்க முடியும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு மாநில அரசுக்கு ஒதுக்குகின்ற நிதியில் பலவிதமான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஐந்து பெரிய இனங்களான சம்பளம், ஓய்வூதியம் மற்றும் சம்பள மானியங்கள்; இரண்டாவதாக வட்டி செலவு; மூன்றாவதாக உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்கள்; நான்காவதாக உணவு மானியங்கள்; ஐந்தாவதாக கடனைத் திருப்பிச் செலுத்துதல் என்ற இந்த ஐந்து இனங்களுக்கும்கூட போதுமானதாக இல்லாத அளவுக்கு நமது வருவாய் இருக்கின்ற நிலை. மற்றும் திட்டம் சாரா செலவுகளும், திட்டச் செலவுகளும் கடன் பெற்றுத்தான் நடத்தவேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது.

*பிற்பகல் 12-35*

கடன் அளவை மத்தியத் திட்டக் குழுவும், மத்திய அரசும் நிர்ணயிக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். எப்படியேனும் எங்கேனும் கடனை வாங்கி திட்டங்களை ஏன் ஈடேற்றக் கூடாது என்ற எண்ணம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கலாம். மத்திய அரசினுடைய அனுமதி இல்லாமல், மத்திய அரசு

நிர்ணயிக்கின்ற அளவினை மீறி நாம் கடனை வாங்க முடியாது. மாநில அரசினுடைய, சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டினுடைய வருவாய் என்ன இருக்கிறதோ, அந்த வருவாயினுடைய அளவை ஒட்டி-அந்த வருவாயினுடைய அளவை ஒட்டித்தான் மாநில அரசு கடன் வாங்க முடியும், கடன் வாங்க வேண்டும் என்ற உத்தரவை மைய அரசு இட்டிருக்கிற காரணத்தால், அந்த மைய அரசுடைய ஒப்புதல் இல்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாத நிலையிலே இருக்கிறோம். நான் குறிப்பிட்டதுபோல, இப்படிப்பட்ட கடுமையான கட்டுப்பாடுகளை மைய அரசு அண்மையிலே கொண்டு வந்திருக்கிறது. மத்திய அரசு தற்போது அது வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள அளவுக்கு தமிழக அரசுக்கு வரிப் பங்கு இந்த வருடம்கூடத் தராமல் குறைத்து விடுமோ என்ற ஓர் அச்சம்கூட இருக்கிறது. 512 கோடி ரூபாய் நடப்பு ஆண்டுக்கு குறைத்துவிட்டார். வருமாண்டுக்குக்கூட அப்படி அந்த நிதியைக் குறைத்துவிடுவார், காரணம், a lot of deficit in Hon. Sinha's Budget. நீங்கள் பார்த்திருப்பீர்கள். அப்படி அந்த deficit-ஐ அவர்கள் சரி செய்யவேண்டுமென்றால், மைய அரசு, ஒன்று இன்னும் they should print currencies, நோட்டை அடிக்கவேண்டும். அல்லது ஏகப்பட்ட கடனை வெளிநாடுகளிலிருந்து வாங்க வேண்டும். That may result in inflationary trend. இந்த inflationary trend-ஐ அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? அது இந்தியப் பொருளாதாரத்துக்குச் செம்மையாக இருக்குமா என்ற அணுகுமுறையில் அவர்கள் செல்லுகிறபோது, அவர்கள் கடைப்பிடிக்கிற நடைமுறை ஒன்றே ஒன்று. மாநில அரசுக்குக் கொடுக்கின்ற நிதியை cut செய்துவிடுவது என்று அவர்கள் நடைமுறையில் கொண்டுவந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்குவார்களேயானால், அடுத்த ஆண்டும் கூட இந்த நிதி நெருக்கடி மைய அரசினுடைய தவறான நிதி ஒதுக்குமுறை, மாநிலங்களுக்கு அவர்கள் ஒதுக்குகின்ற நிதி முறையிலுள்ள கோளாறு, இவை காரணமாக பிரச்சினை மேலும் அதிகமாகுமேயொழிய, பிரச்சினை குறையாது என்ற ஒரு நிலை ஏற்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இதுமட்டுமல்ல, இன்னும் கூட ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மைய அரசினுடைய ஒட்டுமொத்த வருமானம் 2,35,800 கோடி ரூபாய் நடப்பாண்டுக்கு மைய அரசுக்கு வருமானமாகக் கிடைத்திருக்கிறது. 2,35,800 கோடி ரூபாய் வருமானம். ஒரு கோடி, இரண்டு கோடியல்ல. ஆனால் மைய அரசு இப்படி அவர்களுக்கு இந்த ஆண்டு



கிடைத்திருக்கின்ற வருமானமான 2,35,800 கோடி ரூபாயில் தமிழகத்துக்கு அவர்கள் ஒதுக்குவது வெறுமனே 3,322 கோடி மட்டும்தான். இதிலும் 512 கோடி ரூபாயை cut செய்து விடுகிறார்கள். ஒட்டுமொத்த மைய அரசினுடைய வருமானத்திலே தமிழக அரசுக்கு அவர்கள் ஒதுக்குவது 1.4 சதவீதம்தான் நமக்கு நிதியாக ஒதுக்குகிறார்கள். ஆண்டுக்காண்டு மாநில அரசுக்கு நிதியைக் குறைத்துக்கொண்டே வருகிறார்கள். மைய அரசினுடைய வருமானம் ஆண்டுக்காண்டு பெருகிக்கொண்டே போகிறது. ஆனால் மாநில அரசுக்கு அவர்கள் ஒதுக்குகின்ற பணம் ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டே வருகிறது. அந்த நிலை கடந்த ஆண்டும் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக வந்தபோதும், தற்போதும்தான். தொடர்ந்து இந்த வெட்டினை அந்த ஒட்டுமொத்தமாக நிதிப் பகிர்விலே மைய வருமான வரியினுடைய நிதிப் பகிர்விலே ஒரு 590 கோடி, தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 3322 கோடியிலே ஒரு 512 கோடி என இப்படி நிதியைக் குறைத்து விடுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு வந்திருக்கிற வருமானம் 2,35,800 கோடி; நமக்கு ஒதுக்கியிருப்பது 1.4 சதவீதம் என்பதனை அவை புரிந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட சூழலில் நாம் இருக்கின்றோம். இப்படிப்பட்ட. அணுகுமுறையை மைய அரசு மேற்கொள்கிறது. இந்த முறையை அவர்கள் மாற்ற வேண்டும். இதற்கு நடவடிக்கைகளை மைய அரசு எடுக்கவேண்டும். மைய அரசிலே அங்கம் வகிக்கின்ற, மாநிலத்துக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற கொள்கையுடைய தி.மு.க. இதில் ஏனோதானோ என்று இருப்பது தமிழகத்தினுடைய நலனுக்கு நல்லதல்ல. அண்ணாவின் கொள்கையான மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற கொள்கையை நீங்கள் விட்டு விட்டீர்களோ என்ற எண்ணத்தை மக்கள் மத்தியிலே நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள். இந்த நிலை மாற மைய அரசு தற்போது நமக்கு ஒதுக்குகின்ற 1.4 சதவீதம் நிதி என்ற நிலை மாறி, நமக்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கவேண்டும்.

பிற்பகல் 12-40

ஏற்கெனவே இருக்கின்ற வரையறை-மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மைய அரசே மாநிலத்திற்கு நிதிப் பகிர்விலே தருகின்ற அந்தப் பணம் 29.5 விழுக்காடு என்று இருக்கிறது. அந்த 29.5 விழுக்காடு என்ற முறையிலே நிதியினை ஒதுக்குகின்றபோது, மாநிலங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. மைய அரசே எல்லாத் துறைகளையுமே ஒவ்வொன்றாக தன் கையகத்தே தற்போது எடுத்துக்கொண்டது. அதையும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [2002 ஏப்ரல் 8

உதாரணமாக விவசாயத்திற்கு என ஏகப்பட்ட நிதியொதுக்கீடு. அதேபோல குழாய் பம்புகள் போட வேண்டுமென்றாலும் அதற்கும் மைய அரசினுடைய ஒதுக்கீடு கிராமச் சாலைகளுக்கு மைய அரசினுடைய ஒதுக்கீடு, கிராமத்திலே இருக்கிற இன்ன பிற எல்லா பணிகளுக்கும் மைய அரசினுடைய ஒதுக்கீடு என மாநிலத்திற்கு தர வேண்டிய நிதியைத் தராமல், ஒதுக்காமல் மைய அரசு அந்த நிதியொதுக்கீடுகளை எல்லாம் Centrally Sponsored Schemes என்ற முறையிலே அவர்களுடைய அதிகார வரம்பிற்கு எடுத்துச் சென்று, அந்த நிதியை மாநில அரசினுடைய கஜானாவிற்குக் கொண்டுவர வழியில்லாமல், ஒன்று நேரடியாக உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தருகிறார்கள் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழே பணியாற்றுகின்ற அந்த P.O. என்று சொல்லப்படுகிற Project Officer அவர்கள் மூலமாக அந்த நிதியெல்லாம் செல்கிறது. அந்த நிதி ஒழுங்காகச் செலவழிக்கப்படுகிறதா, கண்காணிக்கப்படுகிறதா என்பதனைக் கண்காணிக்க மாநில அரசு மூலமாக இந்த நிதி ஒவ்வொரு மாநிலத்திற்கும் தரப்படுமேயானால் மாநில அரசிற்குத்தான் மக்களிடையே நேரடித் தொடர்பு இருக்கிறது. மாநில அரசு மக்களுடைய பிரச்சினைகளை உணர்ந்திருக்கிறது. எந்தக் கிராமத்திலே, எந்தப் பஞ்சாயத்திலே, எந்தப் பஞ்சாயத்து யூனியனிலே என்ன என்ன பிரச்சினைகளை அன்றாடம் மக்கள் சந்தித்து வருகிறார்கள் என்பது மாநில அரசுக்குத்தான் தெரியும். நேரடி மக்கள் தொடர்பு மாநில அரசிற்குத்தான் இருக்கிறது. அப்படி இருக்கின்ற நிலையில், மாநில அரசு மூலமாக நிதியினை ஒதுக்கி, அந்த நிதி அந்த மக்களைச் சென்றடையக்கூடிய சூழலை அவர்கள் உருவாக்க வேண்டும். Guidelines அவர்கள் தரட்டும். அந்த guidelines-ஐ follow செய்வதும், அந்த guidelines-ஐ implement செய்வதும், மாநில அரசினுடைய ஒரு கடப்பாடு என்ற நிலையை அவர்கள் உருவாக்குவார்களேயானால், இப்படிப்பட்ட ஒரு சூழல் எழாது. மாநிலத்திற்கு அதிகப்படியான நிதி கிடைக்கக்கூடிய நிலை ஏற்படும்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தீர சிந்தித்து ஒரு தொலைநோக்குச் சிந்தனையோடு தமிழகத்தினுடைய பொருளாதார நலிவு மட்டும் அல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களும் சந்தித்து வருகின்ற இந்த நிதி நெருக்கடியிலிருந்து எப்படி ஒரு விமோசனம் பெறுவது என்ற முறையில்தான் மைய அரசிற்கு, பாரதப் பிரதம அமைச்சருக்கும், மாநிலத்திலுள்ள எல்லா முதலமைச்சர்களுக்கும்



2002 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

ஒரு தாக்கீதை, அஞ்சலை எழுதியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கடன் சுமை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணம் இல்லை. வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணம் வெளியில் வாங்க வேண்டும் என்றாலும் மைய அரசு அனுமதி தராத ஒரு நிலை. இப்படிப்பட்ட ஒரு நிலை debt trap என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு கடன் வலையிலே மாநிலங்கள் தத்தளிக்கின்ற நிலையிலிருந்து மாற வேண்டும்.

ஒவ்வொரு மாநிலமும் பொருளாதார ரீதியாக முன்னுக்கு வரவேண்டும் என்றால், அந்த மாநிலத்திற்கு அடிப்படைத் தேவையான, குறைந்தபட்சத் தேவையான கடன் இல்லாத ஒரு நிலை, வட்டியைக் கட்டக்கூட தத்தளிக்கின்ற மாநிலங்கள் இருக்கிறபோது, அந்த நிலையைச் செம்மைப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும், 3000 கோடி ரூபாய் a lumpsum amount ஒரு உதவியாக, கிரான்ட்டாக தமிழக அரசுக்குத் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அப்படித் தந்துவிட்டால் இந்த deficit என்ற நிலை போய்விடும். கடன் தொல்லை என்ற நிலை போய்விடும். மாதம் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 390 கோடி ரூபாய் நாம் வட்டி கட்டிக் கொண்டு வருகிறோம். தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும் நமக்கு உள்ள கடன் 36 ஆயிரம் கோடி ரூபாய். சுமார் 36 ஆயிரம் கோடி ரூபாய் தமிழக அரசுக்கு ஒட்டுமொத்தமாக நாம் வெளியிலே தரவேண்டிய கடன் இருக்கிறது. அந்தக் கடனையும் இன்னும் நாம் தரமுடியவில்லை கடனுக்கு உள்ள வட்டியையும் கட்ட முடியவில்லை என்ற நிலை தமிழகத்தினுடைய பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்துக் கொண்டு இருக்கிறது. இந்த பாதிப்பினால் மாதம் ஒன்றுக்கு 390 கோடி ரூபாய் நாம் வட்டி கட்டிக்கொண்டு வருகிறோம். ஒரு நாள் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 11 கோடி ரூபாய் வட்டி மட்டும் தமிழக அரசு நாம் வாங்கிய கடனுக்காக அந்த 36 ஆயிரம் கோடி கடனுக்காக ஒரு நாள் ஒன்றுக்கு 11 கோடி ரூபாய் நாம் வட்டியைக் கட்டிக் கொண்டு வருகிறோம். இந்தப் பிரச்சினையிலிருந்து மீள வேண்டுமென்றால் ஒன்று வரி விதிக்க வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், this is a State which is already very heavily taxed என்று எல்லோரும் சொல்லக்கூடிய அளவிற்கு அதிகப்படியான வரி பன்னெடும் ஆண்டுகளாக விதிக்கப்பட்டிருக்கிற மாநிலம் தமிழகம் என்று எல்லோரும் சொல்லக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், வரியை விதித்து வருமானத்தைப்

[திரு. சி. பொன்னையன்] [2002 ஏப்ரல் 8

பெருக்க வேண்டும் அல்லது கடனை வாங்கி நாம் நல்ல நலத் திட்டங்களை மேற்கொண்டு capital investment, creation of asset என்ற முறையிலே வளர்ச்சித் திட்டங்களிலே முதலீடு செய்து அந்த வளர்ச்சித் திட்டங்களின் மூலமாகப் பொருளாதாரத்தைப் பெருக்கி, பணப் புழக்கத்தை அதிகமாக்கி purchasing power-ஐ மக்கள் கையிலே உருவாக்கி, அதன் மூலமாக sales tax revenue இதர revenue எல்லாவற்றையும் ஊக்குவிக்க முடியுமானால் அதைச் செய்யலாம். அதற்கு இருக்கிற தடைக்கல், கடன் வாங்குவதற்கும் தற்போது ரிசர்வ் வங்கி, மைய அரசு தமிழக அரசினுடைய பணத்தன்மை, திறமை எப்படியிருக்கிறது, viability of the State Government எப்படியிருக்கிறது என்ற முறையிலே ஆய்வினை நடத்தி, அவர்கள் இப்படியொரு கட்டளை இட்டுவிட்ட காரணத்தினால், கடன் வாங்க முடியாத நிலைமையும் இருக்கிறது.

பிற்பகல் 12-45

நாம் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்க வேண்டுமென்றாலும்கூட, உலக வங்கி, Asian Development Bank போன்ற வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்க வேண்டுமென்றாலும்கூட, நமக்குள்ள, வாங்கியிருக்கின்ற கடனை கட்டியாக வேண்டும் வட்டியினை கட்டியாக வேண்டும். கடனற்ற நிலை என்பதனை நாம் உருவாக்கியாக வேண்டும். அப்படி உருவாக்கினால்தான், கடன் வாங்கி வளர்ச்சித் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்த முடியும். இதற்கு உதவியாகத்தான் 3 ஆயிரம் கோடி ரூபாய் ஒட்டுமொத்தமாக ஒரேயடியாக ஒரு grant என்ற முறையிலே நிதியாக மத்திய அரசு மாநில அரசுக்குத் தருமேயானால், இந்தப் பிரச்சினை முழுமையாகத் தீர்ந்துவிடும். அதை அடித்தளமாக வைத்து, நல்ல திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென்று மாநில அரசு முயற்சி செய்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுதியிருக்கின்ற இந்தக் கருத்துக்கு மேற்குவங்க முதலமைச்சர் ஆதரவு தெரிவித்துள்ளார். நேற்றுகூட என்னிடம் மேற்கு வங்க நிதியமைச்சர் அவர்கள் பேசினார். உங்களுடைய முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிற அஞ்சலை எங்களுடைய முதலமைச்சர் பார்த்தார். மிகவும் ஒரு நல்ல யோசனை. இது ஒன்றுதான் சிறந்த யோசனை. இதைவிட்டால் வேறு வழியேயில்லை. நாம் விரைவிலே பாரதப் பிரதமரைச் சந்திப்பதற்கு பல மாநிலங்களோடு தொடர்புகொள்ள வேண்டுமென்று எங்கள் முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். மராட்டிய மாநில முதலமைச்சரோடு பேசிவிட்டோம், குஜராத் முதலமைச்சரோடு



2002 ஏப்ரல் 8] [திரு. சி. பொன்னையன்]

பேசிவிட்டோம், சந்திரபாபு நாயுடு அவர்களோடு நாங்கள் பேசியிருக்கிறோம், கர்நாடக மாநிலத்தோடு பேசியிருக்கிறோம். விரைவிலே ஒரு opinion create செய்து, தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய கோரிக்கையை ஓர் அகில இந்திய கோரிக்கையாக வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) நாம் மத்திய அரசிடம் இதை வாதாடுவோம் என்று நேற்று என்னிடம் மேற்கு வங்கத்தினுடைய நிதியமைச்சர் மாண்புமிகு திரு. தாஸ் குப்தா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலையில் மாநில அரசு இருக்கின்ற காரணத்தால்தான் இந்த நிதி ஒதுக்கீட்டிலே இந்த அளவிற்கு ஒரு குறைப்பு ஏற்பட்டது என்பதை நான் அவைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கின்ற 15 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் அரசே அடுத்த ஆண்டிற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது என்பதனை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் கூறுகிறபோது, அந்த 15 அம்சத் திட்டம் என்பதே ஒரு goal என்ற முறையிலே, ஒரு principle, ஒரு கொள்கை என்ற அளவிலே இருக்கிறதேயொழிய, அது திட்டங்களோடு இணைக்கப்படவில்லை என்று சொன்னார். நான், நிதிநிலை அறிக்கையை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்க்குமாறு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த 15 அம்ச திட்டத்தை ஒவ்வொரு துறையிலும் எந்தெந்த இடத்திலே, எந்தெந்த முறையிலே நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதனை ஆய்ந்து, அந்த அடிப்படையில் 15 அம்சத் திட்டம் அனைத்துத் துறைகளிலும் நடைமுறைக்கு வருமாறு பின்னப்பட்டுத்தான் நிதிநிலை அறிக்கையிலே அது தரப்பட்டிருக்கிறது என்பதனை நான் அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரைக்கும், this is a budget with a direction aimed at achieving the objectives set out in the Hon. Chief Minister's 15 Point Programme என்பதனை நாங்கள் தெளிவாக்கியிருக்கிறோம். நிதிநிலை அறிக்கையிலே ஒன்றுமேயில்லை, ஒன்றுமேயில்லை என்று சில மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். வெளியிலே சிலர் சொன்னார்கள். பத்திரிகையிலேயும் சிலர் எழுத வைத்தார்கள் எழுதினார்கள். அதற்கு நான் சில உதாரணங்களை மட்டும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் சில முக்கியமான திட்டங்களைக் கோடிட்டு காட்ட விழைகின்றேன். தொடர் பசுமைப் புரட்சி கொண்டுவரும் வகையில் விவசாய பெருமக்கள் பயனடைய வகை செய்யும் ஒரே தவணையில் கடனைத் தீர்க்கும் சலுகைத் திட்டம், 40 கோடி செலவில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்.

*பிற்பகல் 12-50*

தோட்டக் கலை வளர்ச்சித் திட்டம், சிறு மற்றும் நடுத்தரப் பாசன திட்டங்களை நவீனப்படுத்துதல், மீனள மேம்பாட்டு இயக்கம், தருமபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கால்நடை மற்றும் எருமை இனப்பெருக்கத்திற்கான ஒரு புதிய திட்டம். குடிநீர் வசதி செய்திடும் வகையில் 8,000 கைப் பம்புகளை சிறிய விசைப் பம்புகளாக மாற்றியமைத்து 6,500 ஊரகக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கும் திட்டம், சென்னையில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் நீரைச் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கும் திட்டம், புதிய வீராணம் திட்டத்திற்காக 77 கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கம் காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர் மாவட்டங்களில் குடிநீர் வசதி மேம்படுத்தும் துறை சீரமைப்புத் திட்டம், 200 துணைச் சுகாதார நிலையங்களைக் கட்டும் திட்டம், 25 ஆரம்பச் சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தும் திட்டம், சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனையை இரண்டாவது கட்டமாக 21 கோடி ரூபாயில் நவீனப்படுத்தும் திட்டம், அரசு, தனியார் பங்கேற்புடன் இந்திய முறை மருத்துவ அடிப்படையில் உலகத் தரம் வாய்ந்த மருத்துவமனையை சென்னையில் ஏற்படுத்தும் திட்டம், முதியோர்களுக்கு தரமான மருத்துவ வசதிகளை அளிக்கும் வகையில் மருத்துவ வசதி அட்டை முறையை இலவசமாக வழங்குகிற திட்டம், கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களுக்கு சந்தை வசதி மூலமாக அவர்கள் பொருளாதாரத்தை பெருக்குகின்ற நோக்கோடு கிராமச்சந்தை மேம்பாட்டுத் திட்டம், அதிக ஆதாயம் தரத்தக்க வணிகப் பயிர் உற்பத்திக்கான வழிமுறைகள் குறித்து ஒரு இலட்சம் உழவர்களுக்கு மூன்று ஆண்டு கால அளவில் பயிற்சி அளிப்பதற்கான ஒரு புதிய திட்டம், அதைப்போலவே, வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும், கிராமப்புற விவசாய விளைபொருட்களை ஒட்டி value added agro products என்ற முறையிலே அவர்களுக்கு விவசாயத்தை ஒட்டிய தொழில்களை



ஊக்குவிக்கக் கூடிய அளவிற்கு குறைந்தபட்சம் 1 கோடி ரூபாய் முதலீட்டிலே ஒவ்வொரு பிளாக்கிலும் ஒரு தொழிற்சாலை என்ற திட்டம், ஆதிதிராவிடர்களுக்கு 31,000 வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம், அதுபோலவே 183 கோடி ரூபாய் செலவில் கிராம மற்றும் நகரப் பகுதிகளில் வாழ்கிற மகளிர்களுக்கு ஒருங்கிணைந்த துப்புரவு வளாகங்கள் கட்டுவதற்கான திட்டம், எரிசக்தி பாதுகாப்பிற்காக மின்வாரியத்தின் மூலமாக 1209 கோடி ரூபாயிலே முதலீடு செய்யும் திட்டம், கட்டமைப்பு வசதிகள் பெருக்க 245 கோடி ரூபாயிலே ஊரகப் பகுதிகளில் முழுமையாக தொடர்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான திட்டம், போக்குவரத்து நிறுவனங்களிலே 227 கோடி ரூபாய் செலவில் 2775 புதிய பேருந்துகளை வாங்குகின்ற திட்டம்.

அதைப்போலவே Gender Equity என்பதன்கீழ்-இந்த Gender Equity என்பதைப் பற்றி மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். பாலின நேர்மை நெறி என்று அதைப் போடலாம் என்றுதான் யோசித்தோம். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய முந்தைய தி.மு.க. ஆட்சியிலே Gender Equity-க்கு ஒரு மொழி பெயர்ப்பை தந்து, அந்த மொழி பெயர்ப்பிலே பாலின நேர்மை நெறி என மொழி பெயர்ப்பு தந்து, அதை ரெக்கார்டுகளில் நீங்கள் நிரந்தரமாக உங்கள் ஆட்சியிலே கொண்டு வந்து விட்டீர்கள். எனவே, நீங்கள் நல்ல சரியான பொருளைச் சொல்லுங்கள், மாற்றியமைப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. சென்னையிலும், கோவையிலும் மகளிர் நீதிமன்றங்களை அமைக்கும் திட்டம், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கான இலவச மிதிவண்டி அளிக்கும் திட்டம், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காக 45 கோடி ரூபாயிலே விடுதிகள் கட்டும் திட்டம். பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருக்கு 36 கோடி ரூபாய் செலவிலே விடுதிகள் கட்டும் திட்டம், International Research and Development Knowledge Park என்ற பன்னாட்டு ஆராய்ச்சி மற்றும் அறிவியல் திறன் மேம்பாட்டு பூங்கா என்ற ஒரு திட்டம்-இப்படி பல்வேறு திட்டங்களை இந்த அரசு தற்போது இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக நடைமுறைப்படுத்த இருக்கிறது. இப்படி இருக்கிறபோது இந்த வரவு செலவுத் திட்டத்தில் எந்தவித திட்டமுமே இல்லையென்று கூறுவது சரியான ஒன்று அல்ல என்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது Vote on Account and also the Budget Memorandum Part II தெளிவாக இல்லையென்று

சொன்னார். அப்படியல்ல. நிதிநிலை அறிக்கையை நாம் தற்போது சீர்திருத்தி இருக்கிறோம். கடந்த கால நிதிநிலை அறிக்கையை எடுத்துப் பார்த்து அதற்குப் பிறகு வந்த மற்ற வெளியீடுகளைப் பார்த்தால் உறுப்பினர்களுக்கு ஒன்றுமே புரிந்துகொள்ள முடியாது என்ற நிலையே இருந்தது. ஒவ்வொரு துறைக்கும், துறை வாரியாக என்ன நிதி என்பதனைத் தெளிவாக Vote on Account என்ற வெளியீட்டில் தெளிவுபடுத்தி இருக்கிறோம். அதைப்போலவே, நிதிநிலைக் குறிப்பு பகுதி 2-லும், Budget Memorandum Part II அதையும் எடுத்துப் பார்த்தால் எந்தெந்தத் துறைக்கு எந்தெந்த அளவுக்கு நிதியொதுக்கீடு என்பது தெள்ளத்தெளிவாக எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு, புரிந்து கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் வினாக்களை எழுப்பக்கூடிய அளவிற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டுவதற்கு முதலில் புரிந்து ஆக வேண்டும். கடந்த கால பட்ஜெட் முறை எளிதில் புரியாத நிலையில் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த Vote on Account-ஐயும் பார்க்க வேண்டும் நீங்கள். Budget Memorandum Part II-யும் பார்க்க வேண்டும். Budget Memorandum Part I-யும் பார்க்க வேண்டும். மூன்றையும் இணைத்து பார்ப்பீர்களேயானால் இது ஒரு வெளிப்படையான பட்ஜெட்—transparent budget ஒளிவுமறைவு இல்லாமல் என்ன என்ன நிலை எங்கு எங்கு இருக்கிறது என்பதனைக் கூறக்கூடிய அளவிற்கு தெளிவாக்கப்பட்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

*பிற்பகல் 12-55*

அதைப்போலவே 'மொட்டைத் தாத்தன் குட்டையில் விழுந்தான்' என்பதைப்போல் இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்று மாண்புமிகு தி.மு.க. கட்சியினுடைய் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அது மிகத் தவறான ஒன்று. ஆகவே, எந்தெந்தத் துறைக்கு எங்கெங்கே நிதி எப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உண்மை நிலை, 1989-90 ஆவது ஆண்டு தி.மு.க.-வினுடைய தலைவர் மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்கள் நிதியமைச்சராக ஆற்றிய உரையிலே ஒரு சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். அதிலே, நீங்கள் எடுத்துப் பார்ப்பீர்களேயானால், வேளாண்மை, மக்கள் நல்வாழ்வு, பாசனம், வனவளம், மீனளம், கைத்தறி, சாலை வசதி, வீட்டு வசதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன்,



இப்படி ஏராளமான துறைகளுக்கு நிதி ஒதுக்கீட்டைப் பற்றி ஒரு விவரமுமே நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. அல்லது அதை எடுத்துவிட்டு Vote on Account-லே போனாலோ அல்லது Budgetary demands-னுடைய இரண்டாவது பிரிவு நிதிநிலையைப் பார்த்தால், அதிலும் ஒன்றுமே புரியவில்லை. பல பக்கங்களைத் தேடித்தேடிப் பார்த்தாலும்கூட, ஒட்டுமொத்த நிதி என்ன என்பது தெரியாத நிலை இருந்தது. ஆனால், நாங்கள் அப்படிச் செய்யவில்லை. அப்படிப்பட்ட குறைகள் கடந்த காலத்திலே இருந்தன. அந்தக் குறைகள் 1989-90 பட்ஜெட்டிலே மட்டுமல்லாமல் ஒவ்வோர் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயும் கடந்த காலத்திலே இருந்திருக்கின்றன. அவற்றை நிவர்த்தி செய்திருக்கிறோம். Vote on account, Budgetary demand Part I & II மூன்றையும் படித்துப் பார்ப்பீர்களேயானால், மிகத் தெள்ளத் தெளிவாக, குழந்தைகள்கூட புரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு எந்தெந்தப் பிரிவிற்கு என்னென்ன நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அவைக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

தொழில் துறையைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது தமிழகத்தை ஒரு முதன்மை மாநிலமாக மாற்ற பெருமுயற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்பதனைப் பற்றி எடுத்துச்சொன்னார்கள் இரண்டு தினங்களுக்கு முன்னாலே Confederation of Indian Industry-C.I.I. என்ற ஓர் அமைப்பு அது, தென்னாட்டினுடைய அனைத்துத் தொழில்கள்- It may be pharmaceutical industry or chemical industry or engineering industry or textile industry, all heavy, medium and major industries-அவர்கள் அடங்கிய ஒரு மாபெரும் கூட்டம் நடந்தது. தமிழகத்தை ஒரு முன்னிலை மாநிலமாகக் கொண்டு வரவேண்டும் என்ற ஆர்வமுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அந்த நிகழ்விற்கு அவர்கள் அழைத்தார்கள். அதிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாக தன் கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். அப்படிச் சொல்கிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எப்படி எப்படியெல்லாம் தமிழகத்திற்கு அடிப்படை வசதிகளைத் தருவது, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் பொருளாதார வளர்ச்சியிலே Primary Sector என்று சொல்லக்கூடிய Agro Sector, அடுத்து அந்த Secondary Sector என்று சொல்லக்கூடிய தொழிற்சாலைகள் Territory Sector என்று சொல்லக்கூடிய Service Sector ஆகியவற்றையெல்லாம் எப்படி எப்படி ஒரு முன்னேற்ற நிலைக்குக் கொண்டு வர அரசு, திட்டங்களைத் தீட்டியிருக்கிறது என்பதனை மிகத் தெளிவாக எடுத்துச்சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்லியபோது,

சில வினாக்களை அவர்கள் எழுப்பினார்கள். அப்படி அந்த வினாக்களை எழுப்புகிறபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் extempore speech-ஆக, எப்படிப்பட்ட கேள்விகளை அவர்கள் எழுப்பியபோதிலும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டிற்கு இப்படிப்பட்ட பொருளாதார அணுகுமுறையை நான் மேற்கொண்டிருக்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி) வேலையில்லாத் திண்டாட்டம் மிக்க இருக்கிற நாடு தமிழகம். தொழில் துறையிலே முன்னுக்கு வரவேண்டிய மாநிலம் தமிழகம். பட்டினியிலே வாடுகிற மக்கள் ஏராளமாக உள்ள நாடு தமிழகம். இந்த நிலைகள் எல்லாம் மாறுவதற்கு தொழில் துறைக்கு எப்படிப்பட்ட உத்வேகங்களை, உற்சாகங்களைத் தரவேண்டும் என்பதை மிகத் தெளிவாக அவர்கள் எல்லோரும் பாராட்டும் வண்ணம் கூறினார்கள். அப்படி அவர்கள் பேசிய பிறகு அதனுடைய ஒரு முக்கிய Office Bearer-ஆக இருக்கிற திரு. கோயங்கா சொன்னார். (குறுக்கீடு) The National President, All India President of C.I.I. மிகத் தெளிவாகச் சொன்னார். அப்படிப் பேசுகிறபோது, "இப்படிப்பட்ட தெளிந்த சிந்தனையோடு ஒரு பொருளாதாரத் திட்டத்தை, தொலைநோக்குத் திட்டத்தை, தொழில் வளர்ச்சி குறித்து. ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி குறித்து, அது எந்த செக்டாராக இருந்தாலும் சரி, விவசாயப் பொருளாதாரமாக இருந்தாலும் சரி, சிறு தொழில், குறுந்தொழில், பெருந்தொழில் பொருளாதாரமாக இருந்தாலும் சரி அல்லது Service Sector பொருளாதாரமாக இருந்தாலும் சரி, வளர்ந்து வருகிற Bio-technology, I.T., I.T. related பொருளாதார முறையாக இருந்தாலும் சரி, அதற்குத் தேவையான infrastructural facilities சம்பந்தமானவையாக இருந்தாலும் சரி, கிராமப்புறத்தை முன்னுக்குக் கொண்டு வந்து, ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய பொருளாதாரத்தை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற, எதுவாக இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட finger-tip knowledge வைத்திருக்கிற நீங்கள் அகில இந்திய அளவிலே உங்களுடைய உணர்வுகளை இந்த நாட்டுக்குச் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அகில இந்திய அளவில் நாங்கள் ஒரு பெரிய ஏற்பாட்டைச் செய்கிறோம், அகில இந்தியாவிற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அவர்களுடைய அந்த சிந்தனை, அந்தச் செயல்திட்டம் இந்திய நாட்டுக்கே ஒரு வழிகாட்டி திட்டமாக இருக்கின்ற காரணத்தால்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று அவர்கள் வெளிப்படையாகச் சொன்னார்கள்—தென்னாட்டினுடைய அனைத்து தொழில் அதிபர்களும் அங்கு வந்திருந்தார்கள்.





*பிற்பகல் 1-00*

இதை நான் சொல்வதற்குக் காரணம் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதிலே, இந்த 5 ஆண்டு காலததில் தமிழகத்தை பொருளாதார ரீதியாக எப்படி ஒரு முன்னணி மாநிலமாகக் கொண்டு வருவது, அனைத்துத் தரப்பிலும் இருக்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை எப்படி உயர்த்துவது, கடந்த காலத்தில் ஏற்பட்ட நலிவுகளைக் களைந்து எப்படி ஓர் உத்வேகத்தை, முன்னேற்றத்தைத் தருவது என்ற சிந்தனை திட்டத்தோடுதான் ஆளுநர் உரையும் இங்கே அளிக்கப்பட்டது, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய சிந்தனை, எண்ணங்கள், செயல்திட்டங்களை உள்ளடக்கிய இந்த நிதிநிலை அறிக்கையும் தரப்பட்டிருக்கிறது. அவர்கள் கூறிய கருத்துகளைக் கேட்டு அந்த Confederation of Indian Industries Chairman, அந்த அமைப்பு, வருகின்ற 27-ஆம் தேதி அகில இந்திய தொழில் அதிபர்களுடைய மாநாட்டை நடத்துவதற்கு புரட்சித் தலைவி அவர்களிடம் தேதி கேட்டு, அவர்களும் சம்மதித்திருக்கிறார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், புரட்சித் தலைவி அவர்களுடைய நோக்கம், ஒரு தொலைநோக்குச் சிந்தனை உள்ள நோக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய 15 அம்ச திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் ஒரு குறைவான நோக்கோடு பார்க்க வேண்டாம் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

சுதந்திரம் அடைந்து 55 ஆண்டு காலமாக நமது பொருளாதாரத்தை நாம் சரியான அணுகுமுறையில் மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாக இன்று நாட்டிலே இருக்கின்ற நிலை முற்றிலும் மாற்றப்பட வேண்டிய ஒரு நிலையாக இருக்கிறது என்பதனை நான் அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வேலையில்லாத் திண்டாட்டம் வெகுவாக இருக்கின்ற நிலை, படித்துவிட்ட மக்கள் அதிகம் என்ற நிலை, கிராமத்திலே இருக்கின்ற நலிந்த பிரிவு மக்களுக்கும் கல்வியினை நாம் தந்துவிட்ட காரணத்தால் அவர்கள் படிப்பினை முடித்து விட்டு அரசு மூலமாக வேலை கிடைக்காத நிலை, தனியார் துறையிலும் வேலை இல்லை என்ற நிலை, விபரீத விளைவுகள் தமிழகத்திலே உருவாகக்கூடாது, இந்தியத் துணைக் கண்டத்திலே உருவாகக்கூடாது என்பதுதான் நல்ல பொருளாதார அணுகுமுறையாக இருந்தாக வேண்டும். அந்த அடிப்படையில் இன்று because of the global competition major industries are at sufferance.

நமது மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும், நமது நாட்டைப் பொறுத்தவரைக்கும் W.T.O. மூலமாக மேநாட்டு, வளர்ந்த நாடுகளினுடைய தொழில் தாக்கம் இந்திய மண்ணுக்கு வந்தபோதிலும்கூட, நாம் தத்தளிக்கின்ற நிலை இருப்பதற்குக் காரணம் technologically we are yet to upgrade ourselves. அந்த முன்னேறிய தொழில் நுணுக்கங்களை நடைமுறைக்கு நாம் இன்னும் கொண்டுவராத நிலை. அதைப்போலவே raw-material management, cost management என்று சொல்லக்கூடிய அளவுக்கு மூலதனச் செலவை எப்படிக் குறைப்பது என்பதிலும் நாம் அக்கறை காட்டாமல் இருக்கிறோம். வளர்ந்த நாடுகளுடைய தொழில் நுணுக்கத்தைப் பெற்று சீன நாடு they have indigenised and innovated upon the technologies imported and borrowed from foreign countries. அந்த நிலைக்கு அவர்கள் கொண்டுவந்து, சிறு தொழிலுக்கு முக்கியத்துவத்தைத் தருகிறார்கள், குடிசைத் தொழிலுக்கு முக்கியத்துவத்தைத் தருகிறார்கள், குறுந்தொழிலுக்கு முக்கியத்துவத்தைத் தருகிறார்கள். ஏனென்றால் சீன நாட்டிலே மக்கள் தொகை அதிகம். நமது நாடும் அப்படிப்பட்ட நாடுதான்.

மக்கள் தொகை மிக்க இருக்கின்ற தமிழகத்திற்கு எப்படிப்பட்ட பொருளாதாரத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தால் தமிழகத்தை முன்னிலைக்குக் கொண்டுவர முடியும் என்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்ந்தார்கள். ஏகப்பட்ட மக்கள் தொகை இருக்கின்ற தமிழகத்தில், அதிகப்படியான வேலையில்லாத் திண்டாட்டத்தில் தத்தளிக்கின்ற மக்கள் இருக்கின்ற தமிழகத்தில், வேலைவாய்ப்பினைப் பெருக்குவதற்கு நாம் சிறுதொழிலை, குறுந்தொழிலை, விவசாயத்தை ஒட்டிய தொழிலை ஊக்குவிக்க வேண்டும். அந்தத் தொழில்களை எல்லாம் modernize செய்ய வேண்டும். அதற்கு technology input நாம் தரவேண்டும். உற்பத்தி ஆகின்ற பொருட்களை வெளிச் சந்தையில் விற்பதற்கு, வெளி நாட்டிலே விற்பதற்கு தரக் கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தாக வேண்டும். இப்படிப்பட்ட அணுகுமுறைகளை மேற்கொள்ளும்போதுதான் தொழில்கள் நல்ல நிலையிலே இருக்கும், வேலைவாய்ப்பு பெருகும், வறுமை போகும். Below poverty line என்ற நிலையிலே இருக்கின்ற மக்களுக்கு poverty alleviation என்ற ஒரு நிலையை நாம் தர முடியும் என்பதுதான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலையாய நோக்கம். அந்த அடிப்படையில்தான் தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.



பிற்பகல் 1-05

நலிந்து கிடக்கின்ற வேளாண்மை மற்றும் தொழில் துறைகளை ஊக்குவித்து வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்கி தமிழகத்தில் உற்பத்தியாகும் பொருள்களை அதிக அளவு ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல்; ஊரக மற்றும் நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளைப் பெரிய அளவில் மேம்படுத்த வேளாண்மை மற்றும் தொழில் வளர்ச்சியை ஊக்குவித்து மக்களின் வாங்கும் சக்தியை அதிகரித்தல், மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் உற்பத்தித் திறன் குறைந்த துறைகளுக்குப் பதிலாக வேளாண்மை தொழில் கட்டமைப்பு மேம்பாடு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற உற்பத்தித் திறன் மிகுந்த துறைகளுக்கு நிதி ஒதுக்குவதில் முக்கியத்துவம் தருதல்; வெளிப்படையான நிருவாகம், ஊழலற்ற ஆட்சிமுறை ஆகியவற்றின் மூலம் அரசுக்கு ஏற்படும் வீண் செலவுகளைக் குறைத்தல், சிறு தொழில்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலம் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் மற்ற மாநிலங்களிலும், மற்ற நாடுகளில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு அனைத்து வகைகளிலும் இணையாக அதாவது தரம், ரகம், உற்பத்தி முறை, குறித்த நேரத்தில் ஒப்படைத்தல்—quality, variety, important production process and timely delivery ஆகிய பல வகைகளில் இணையாக இருக்கும் நிலையைக் கொண்டு வரவேண்டுமென்ற உன்னதத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம், நடைமுறைப்படுத்துவேன் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அந்த தென்னாட்டு தொழிலதிபர்களுடைய மாநாட்டிலே மிகத் தெளிவாகத் தெளிவுபடுத்தினார்கள்.

அத்தோடு அல்ல, தமிழகத்திலே வேலைவாய்ப்பு இன்றி பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிற துறைகளான Engineering Industries மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள், அவர்களுடைய இயக்கத்தின் சார்பாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களும் எடுத்துச் சொல்லியதைப்போல நலிவுற்றிருக்கிற அந்த Textile அதேபோல நலிவுற்றிருக்கிற leather ஆகிய தொழில்களை ஊக்குவிப்பதற்கு முன்னுரிமை தர தமிழக அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற உத்தரவாதத்தையும்கூட அந்தத் தொழிலதிபர்களுடைய அந்த மாநாட்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

வளர்ந்துவரும் தொழில்களான தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில் நுட்பம் ஆகியவற்றிற்கு விரைவு நடவடிக்கை எடுத்து ஊக்குவிப்பைத் தருவோம் என்ற உத்தரவாதத்தையும் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் புரட்சித் தலைவி அவர்கள் Optic Fibre Connectivity தலைநகரிலிருந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் செல்ல வேண்டும்; சென்னையிலிருந்து உலக நாடுகளுக்கு Uplink Connectivity வேண்டும்; இதன் மூலமாக information அதாவது ஒரு தொழில் வளர்ச்சி, கிராமப்புறத்திலே இருக்கிற விவசாயத் தொழில்களாக இருந்தாலும் சரி, சிறு, குறுந்தொழில்களாக இருந்தாலும் சரி, சீன நாடு எப்படி small-scale cottage industry என்ற முறையிலே பல பொருள்களை உற்பத்தி செய்து உலகச் சந்தையிலே அமெரிக்க பொருள்களுக்குச் சமமாக, தரமாகப் போட்டியிடுகிறதோ அப்படிப்பட்ட நிலையைத் தமிழகத்தில் உருவாக்க வேண்டும்; அதற்காக இந்த I.T. Connectivity, Optic Fibre Connectivity-ஐ நான் பயன்படுத்துவேன்; தமிழகத்தை ஒரு தொழில் துறையில் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்குக் கொண்டுவர நான் எல்லா முயற்சிகளிலும் ஈடுபடுவேன் என்ற அந்த அறிவிப்பை நேற்று முன்தினம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப்போலவே, வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்குவதில் இந்த அரசு மிக முக்கியமான கவனத்தை மேற்கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற பிற மாநிலங்களோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, நாம் ஒருபுறம் சொல்கிறோம், முன்னேறிய மாநிலம் தமிழகம் என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்கிறோம் என்றாலும்கூட கடந்த காலத்தில் தமிழகம் எந்த நிலையில் இருந்து வந்திருக்கிறது என்பதற்கு ஒரு புள்ளி விவரத்தை நான் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரச் Central Planning—Commission Report of the Task Force on Employment Opportunity என்ற தலைப்பிலே Planning Commission இதை வெளியிட்டிருக்கிறது. அதிலே அவர்கள் சொல்லியிருப்பது—மைய அரசு நிதி ஒதுக்கீட்டை நான் சொன்னேன். நிதி ஒதுக்கீட்டில் அதிக வருமானமுள்ள தமிழகத்தைப் புறக்கணிக்கிறார்கள் என்பதைச் சொன்னேன். ஆந்திரத்திற்கு அதிக நிதி தருகிறார்கள் என்று சொன்னேன்; பீகாருக்கும், உத்திரப்பிரதேசத்திற்கும் அதிக நிதி தருகிறார்கள் என்று சொன்னேன். அந்த நிதி ஒதுக்கீடும், முன்னேற்றத் திட்டங்களும் எந்த அடிப்டையில் இருக்க வேண்டும்? வறுமை ஒழிப்பு அடிப்படையில் இருக்க வேண்டும்; Poverty alleviation அடிப்படையில்



இருக்க வேண்டும். அதற்கு வேலைவாய்ப்பு வேண்டும். வேலைவாய்ப்பை உருவாக்குகிற அடிப்படையில் இருக்க வேண்டும். Employment opportunity generation என்ற முறையிலே நிதி ஒதுக்கீடு வரவேண்டும். ஆனால், உண்மை நிலை என்னவென்றால் உத்திரப்பிரதேசத்தை எடுத்துக்கொண்டால், தமிழகத்தைவிட பல மடங்கு நிதியை அதிகமாக மத்திய அரசிடமிருந்து பெறுகின்ற உத்திரப்பிரதேசத்திலே வேலையில்லாமல் இருக்கின்ற மக்களினுடைய எண்ணிக்கை 4.27 சதவீதம் என்ற அறிவிப்பை மத்திய அரசினுடைய planning commission செய்திருக்கிறது. 4.7 சதவிகிதம் மட்டுமே வேலையில்லாத மக்கள் இருக்கிறார்கள் என்ற நிலையிலே இருக்கிற உத்திரப்பிரதேசத்திற்கு அவ்வளவு அதிகமான ஒதுக்கீடு. ஆனால் தமிழகத்தினுடைய நிலையை நான் இறுதியிலே சொல்கிறேன். ஆந்திரப் பிரதேசத்திலே 7.94 சதவிகிதம் வேலையற்ற நிலையிலே இருக்கிறார்கள். பீகார் மாநிலத்திலே 7.35 சதவிகிதம் வேலையற்ற நிலையிலே இருக்கிறார்கள். The percentage of unemployed people., குஜராத் மாநிலத்திலே 4.63 சதவிகிதம் மட்டுமே வேலையில்லாத நிலையிலே இருக்கிறார்கள்.

பிற்பகல் 1-10

அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்திலே நம்மைவிட அதிக நிதி எப்படியோ பெற்றிருக்கிற அந்த மாநிலத்தில் கூட 4.61 சதவிகிதம் மக்கள்தான் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இது மைய அரசு விட்டிருக்கிற தாக்கீது. ஆனால் அதிகப்படியான மைய நிதியைப்பெற்றிருக்கிற மாநிலங்களை ஆந்திரப் பிரதேசத்தைவிட, பீகாரைவிட, குஜராத்தைவிட, உத்திரப்பிரதேசத்தைவிட, கர்நாடக மாநிலத்தை விட, வேலையில்லாத மக்கள் தமிழகத்தில்தான் அதிகம். இங்கே 12.05 சதவிகித மக்கள், வேலையில்லாமல் தத்தளிக்கின்ற மக்கள் என்ற புள்ளிவிவரத்தை மைய அரசே தந்திருக்கிறது. இதனை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் டெல்லியிலே இருக்கிற உங்களுடைய ஆட்சியிலே எடுத்துச் சொல்லி, உங்களுடைய வெளியீட்டிலேயே இப்படி தமிழகத்திலே 12.05 சதவிகிதம் மக்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று கணக்கிட்டு இருக்கிறீர்களே, வேலையற்றவர்கள் குறைவாக இருக்கிற கர்நாடக மாநிலத்திற்கு 4.61 என்று இருந்தும் அதிக நிதி, அதைவிட மிக அதிகமான நிதி தமிழகத்தைவிட double பங்கு நிதி 7.94 மட்டுமே வேலையில்லாத் திண்டாட்டம் என்ற ஆந்திர மாநிலத்திற்கு ஒதுக்கியிருக்கிறீர்களே வடபுலத்து மாநிலங்களுக்கு தங்குதடையில்லாமல் தாராள உதவியினை 4.27 சதவிகிதம்தான் வேலையில்லாத மக்கள் உத்திரப்பிரசேதத்திலே என்று இருந்தபோதிலும்கூட, பீகார் மாநிலத்திலே

7 சதவிகிதம் என்றிருந்தபோதிலும்கூட நிதி இப்படி ஒதுக்கியிருக்கிறீர்களே என்பதனை நீங்கள் எடுத்துச்சொல்ல வேண்டும், இதுகாறும் இந்தப் புள்ளி விவரங்கள் உங்களுக்கு இல்லையென்றாலும்கூட இதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தருகிறேன். தி.மு.க. டெல்லியிலே உள்ள அரசிலே நீங்கள் அங்கம் வகிக்கிறீர்கள். அது உங்களுடைய ஆட்சி. தமிழகம் இந்த அளவிற்குப் பின்தள்ளப்பட்டு இருக்கிறது என்பதனை இந்தப் புள்ளிவிவரங்கள் உங்களுக்குத் தெளிவாக்கும் என்று கருதுகிறேன்.

நீங்கள் மைய அரசோடு, போராடி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சொல்லியிருக்கிறார்களே, 3,000 கோடி ஒருகட்ட நிதி என்று சொல்லியிருக்கிறார்களே, அந்த 3,000 கோடி ஒரு கட்ட நிதியையேனும் உடனடியாக எங்களுக்காக மட்டும் நீங்கள் வாங்க வேண்டாம், உங்களுடைய தோழமைக் கட்சிகள் ஆட்சி செய்கிற மற்ற மாநிலங்களுக்கும் பலனைச் சேரும் என்ற வகையில் வாங்க வேண்டும். புரட்சித் தலைவிதானே என்று எண்ணாமல், இந்தவொரு புள்ளிவிவரத்தைக் காட்டி இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகப்படியான வேலையில்லாத மக்கள் இருக்கிற தமிழகத்திற்கு அதிக நிதியை ஒதுக்கித் தர வேண்டும் என்று டெல்லியிலே ஆட்சி புரிகிற நீங்கள் வலியுறுத்த வேண்டும். இவ்வளவு காலம் ஆட்சியிலே இருக்கிறீர்கள், நீங்கள் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். ஆனால் பதவியிலே இருப்பதைவிட தமிழகத்தினுடைய நலன்தான் முக்கிய நலன் என்ற கருத்துடையவர்களாக சொல்லிக்கொள்ளும் நீங்கள் இந்தக் கருத்தை வலியுறுத்தி ஒருவேளை இந்தக் கருத்துக்கு ஒத்துவரவில்லையென்றால் தமிழகம்தான் எங்களுக்கு முக்கியம், தமிழ்த்தாய்தான் முக்கியம், பட்டினியில் சாகின்ற மக்கள் 12 இலட்சம் மக்கள் இருக்கின்றார்கள், அவர்கள் நலன் கருதி திரு. சந்திரபாபு நாயுடு அவர்களுடைய முறையை நாங்களும் மேற்கொள்வோம் என்று நீங்கள் அச்சுறுத்திவீர்கள் என்றால் கட்டாயம் (மேசையைத் தட்டும் ஒலி) நான் நம்புகிறேன் மைய அரசு உங்களுக்குப் பயந்து எங்களுக்கு, தமிழகத்திற்கு, தமிழக மக்களுக்கு அம்மா கூறிய 3,000 கோடியைக் கட்டாயம் தந்துவிடும். அரசியல் காழ்ப்புணர்வுக்கு அப்பால் நின்று நாட்டு நலன் கருதி இந்த நல்ல அணுகுமுறையை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று உங்களிடம் நான் அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், வயிறு பசிக்கிறது என்பதற்காக உலையிலே கையை விடக் கூடாது. இலையிலே



போட்டதற்குப் பிறகுதான் கையை வைக்க வேண்டும். அவர் முடித்ததற்குப் பிறகு நீங்கள் எழுந்து கேளுங்கள். (சிரிப்பு)

**திரு. துரைமுருகன்:** இது சாப்பாடு சமாச்சாரம் அல்ல. நிதி சமாச்சாரம். நீங்கள் என்ன பண்ணுகிறீர்கள் என்று கேட்டால், என்ன பண்ணுகிறோம் என்பதைச் சொல்ல வேண்டும் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், உட்காருங்கள். அவர் பேசி முடித்தவுடனே சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** I am permitting. I am yielding. I am permitting at the end. துரைமுருகன் நீங்கள் வெளிநடப்புச் செய்ய வேண்டாம். சொல்வதைக் கேளுங்கள். நான் உங்களுக்கு நிறைய தகவல்கள் தர இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சிற்குப் பிறகு மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களுக்கு 1 மணி நேரம் தாருங்கள், அவர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) இன்னும் நிறைய தகவல்கள் தர இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அவர் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடு) சரி, பேராசிரியர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கருத்துகளை மட்டும் தொடர்ந்து பேசியிருப்பாரேயானால், இடையிலே துரைமுருகனோ, மற்றவர்களோ எழுந்திருந்து ஒரு விளக்கம் சொல்லத் தலைப்பட்டிருக்க மாட்டார்கள். நேரிடையாகச் சொல்வது மட்டும்தான் சரியானது, திராவிட முன்னேற்றக் கழகம் அந்த அடிப்படையில் செயல்பட வேண்டும் என்று ஒரு கருத்தைச் சொல்கிறபோது, நீங்கள் சொல்வதே சரி அந்த அடிப்படையில் தி.மு.க., மத்திய அரசாங்கத்தில் உங்களுடைய கருத்தின் அடிப்படையில் போராட வேண்டும் என்று சொல்கிறபோது, உடனடியாக கருத்து விளக்கம் சொல்ல வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்படுகிறது. அந்த அவசியத்தால் திரு. துரைமுருகன் பதில் சொல்வார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எதற்கெடுத்தாலும் நீங்கள் என்ன செய்தீர்கள், நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள், அங்கே ஆளுங்கட்சியாக இருக்கிறீர்களே என்று கேட்டார்கள். நான் கேட்பது இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருப்பது நீங்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதற்கு, இந்த மாதிரி நிதியெல்லாம் கிடைப்பதற்கு இவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? இது ஒன்று. இரண்டாவது, இது வரையிலே மத்தியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அங்கே அமைச்சர்களாக இருக்கிறார்களே அவர்கள் என்ன செய்தார்கள் என்று கேட்கிறார்கள். நான் கேட்கிறேன். இந்த நாட்டினுடைய ஒட்டுமொத்த நன்மைக்காக இங்கேயிருக்கிற அமைச்சர்கள் யாராவது இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது மத்திய அரசில்; ஓரவஞ்சனையாக மத்திய அரசு நடந்துகொள்கிறது; எனவே தமிழ்நாட்டைச் சேர்ந்த நீங்கள் அங்கே அமைச்சராக இருக்கிறீர்கள்; வாருங்கள், உங்களிடத்திலே சொல்கிறோம். எங்களோடு வாருங்கள். நிதியமைச்சரிடத்திலோ, பிரதமரிடத்திலோ நாம் போராடலாம் என்று அந்த அமைச்சர்களைப் போய்ப் பார்த்த அமைச்சர்கள் யாராவது உண்டா?

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும், இனியாவது நடப்பவை நல்லவையாக நடக்க வேண்டும் என்றால் மாண்புமிகு நிதி அமைச்சர், என்னோடு வருவாரேயானால், நானே அவரை டெல்லிக்கு அழைத்துக்கொண்டுபோய், இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மையத்தில் இருக்கிற மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சின்ஹா அவர்களிடம் நான் டெல்லி சென்ற நேரம் பேசியிருக்கிறேன். சென்னைக்கு I.I.T.-க்கு ஒரு நிகழ்வுக்கு வந்தார். வந்தபோதும் இதுகுறித்து மிக விரிவாக, மிக அழுத்தமாக அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். மாண்புமிகு திரு. வெங்கைய நாயுடு அவர்களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நாங்கள் சொல்வது மைய அரசிடம் சொல்ல வேண்டும். மைய அரசிலே இருக்கிற எல்லா அமைச்சர்களிடமும் சொல்ல வேண்டும். நீங்கள் ஏற்கெனவே மைய அரசிலே இடம் பெற்றிருக்கிற காரணத்தால், அது உங்கள் அரசாகவே இருக்கிற காரணத்தால், உங்களிடம் சொல்வதற்கு உங்களை அழைத்துக் கொண்டு போய் யாரிடம் சொல்வது? நீங்கள் எண்ணிப்



பார்க்க வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவேதான் உங்களிடம் நான் இதைச் சொல்வது, நமது ஒட்டுமொத்த நன்மைக்காகச் சொல்கிறேன். தற்போது சொல்கிற சில தகவல்களை நீங்கள் மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லுங்கள். உங்களது அமைச்சர், the most powerful Minister in the Central Cabinet இருக்கிறார். அவர் சொன்னால் பிரதம அமைச்சர் கேட்பார்; நிதியமைச்சர் கேட்கலாம். அதை நீங்கள் நாட்டு நலன் கருதி பயன்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் உங்களிடம் சொன்னேன்.

**திரு. துரைமுருகன்:** அமைச்சர்களை விடுங்கள். இவ்வளவு பெரிய பிரச்சினை குறித்து, ஆளுங்கட்சியினுடைய உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். இதுவரையிலே யாராவது எடுத்துப் பேசியிருக்கிறார்களா? இல்லையே. இரண்டாவது, அது எங்கள் அரசு என்ற காரணத்தால்தான் நாங்கள் பங்கு பெற்றிருக்கிறோம். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அதே நேரத்தில் இந்த மாநிலத்திற்குச் சேர வேண்டிய உரிமைகளைக் கேட்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் பின்வாங்கியதில்லை. இதே அவையில் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 2001-2002 வரவு செலவு திட்டத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், பதிலுரை அவர் சொல்லட்டும்.

**திரு. துரைமுருகன்:** இந்த மாநிலத்திற்கு இழைக்கப்படுகிற ஓரவஞ்சனையை, முன்னேறிய மாநிலத்திற்கு மத்திய அரசு தராமல் இருக்கிற நிதியைக் கண்டித்து இதே அவையில் கலைஞர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். எனவே, திராவிட முன்னேற்றக் கழகம், அ.தி.மு.க. என்பதல்ல. இந்த மாநிலத்திற்குச் சேர வேண்டிய உரிமைகளை, நமக்குச் சேர வேண்டிய பங்கைக் கேட்பதிலே திராவிட முன்னேற்றக் கழகம் யாருக்கும் இளைத்து இருக்காது. கட்சி மனமாச்சர்யங்களுக்கு அங்கே இடம் கொடுக்காது. எனவே, அதே கட்சி மனமாச்சர்யங்களுக்கு இடம் கொடுக்காமல் மாண்புமிகு அமைச்சர்கள் அங்கே இருக்கிற அமைச்சர்களிடத்திலே அணுகலாம். அதனாலே பலன் பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் உங்களுடைய எம்.பி.-க்கள் என்ன செய்தார்கள் என்று

கேட்கிறார். எங்களது எம்.பி.-க்களிடம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் தகவல்களையெல்லாம் கொடுத்து, அவற்றை அச்சடித்துக் கொடுத்து, ஒவ்வொரு M.P.-க்கும் நகல்களைக் கொடுத்து, ஒவ்வொரு துறை அமைச்சரையும் சந்தித்து, நீங்கள் இவற்றை வாதிட்டு எப்படியும் நிதியினைப் பெற வேண்டும் என்று பணித்து, அந்தப் பணி ஒருபுறம் செவ்வனே நடந்து கொண்டிருக்கிறது. எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு எங்களது எம்.பி-க்கள் மைய அமைச்சர்களைச் சந்தித்து, அதிகப்படியான நிதியைப் பெறுவதற்கு கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு உங்களுடைய M.P.-க்களுடைய துணை வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய எம்.பி.-க்களுடைய துணை வேண்டும். உங்களுடைய ஆட்சியே மைய ஆட்சியாக இருக்கிற காரணத்தால் இதைச் சொல்கிறேன். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே குறிப்பிட்டதைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். இங்கே சொன்னார்கள். சொல்லக்கூடிய நிலையிலேயிருந்த காரணத்தால் இங்கே சொன்னார்கள். செய்யக்கூடிய நிலையிலே நீங்கள் டெல்லியிலே இருக்கிறீர்கள். மாண்புமிகு திரு. மாறன் இருக்கிறார், செய்து காட்டுங்கள், அப்போதுதான் தமிழகம் உங்களைப் பாராட்டும் என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-20*

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, இடையிலே அரசு விதித்த வரிகளை ஒரு Mini Budget என்று அவ்வப்போது சுட்டிக் காட்டினார்கள். அதைப்பற்றி நான் விளக்க விரும்புகிறேன். மின் கட்டண உயர்வாக ஓர் 1500 கோடி ரூபாயும், பஸ் கட்டண உயர்வாக 1030 கோடி ரூபாயும், உணவு மானியக் குறைப்பு என்ற முறையிலே ஓர் 600 கோடி ரூபாயும், சிக்கன நடவடிக்கைகள் வாயிலாக ஓர் 668 கோடி ரூபாயும், ஒட்டுமொத்தமாக 4010.51 கோடி ரூபாய் வரி அரசுக்கு, அரசு நிறுவனங்களுக்கு வருமானம் வரவேண்டுமென்ற முறையிலே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், உணவு மானியக் குறைப்பு குறித்த அந்த 600 கோடி ரூபாயை நாங்கள் நிறுத்திவிட்டோம், வசூலிக்கவில்லை. அரசு அலுவலர் பொது வைப்பு நிதி மாற்றத்திலே ஒரு 330 கோடி ரூபாயை சலுகையாக மீண்டும் அரசு அலுவலர்களுக்கு அறிவித்துவிட்டோம். மின்கட்டண உயர்விலும்கூட, மின்கட்டணத்தை குறைத்த காரணத்தால், ஒரு 225 கோடி ரூபாய் மக்களுக்கு சலுகை காட்டிய காரணத்தால் அரசுக்கு அது ஓர் இழப்பாகவே அமைந்தது. பஸ் கட்டண உயர்வில்கூட, நாங்கள் உயர்த்திய கட்டணத்தைக் குறைத்த காரணத்தால், 330 கோடி



ரூபாய் அளவிற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கையைக் குறைத்துக்கொண்டது. ஒட்டுமொத்தமாக 1485 கோடி ரூபாய் அரசுக்கு வருவாயாக அந்த வரி விதிப்புகள் அல்லது கட்டண விதிப்புகளால் வரவேண்டிய அந்தப் பணம், நாங்கள் திரும்பப் பெற்றுவிட்டக் காரணத்தால், 1485 கோடி ரூபாய் அரசுக்கு வரவில்லை. அதுமட்டுமல்ல, அப்படி 4010.51 கோடி ரூபாயிலிருந்து இந்த 1485 கோடி ரூபாயை, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏழைகளின் நலன் கருதி, பேருந்தில் பயணம் செய்கின்ற ஏழை மக்களின் நலன் கருதி, மின்கட்டணத்தைப் பயன்படுத்தும் பாமர மக்களின் நலன் கருதி, கிட்டத்தட்ட 1485 கோடி ரூபாயை அவர்கள் குறைத்துவிட்ட காரணத்தால், வந்த வருமானம் ஒட்டுமொத்தமாக ரூ.2525.51 கோடி மட்டுமே. இந்த வருமானம்கூட சென்ற ஆண்டிற்கும், வரும் ஆண்டிற்கும் ஒட்டுமொத்தமாக இந்த 12 மாதங்களுக்காகவே விதிக்கப்பட்டதாகும். இதிலே மின்கட்டண உயர்விலே வந்த 1275 கோடி ரூபாய் அரசுக்கு வரவில்லை. மின்வாரியத்திற்குச் சென்றுவிட்டது.

மின்வாரியத்தைப் பொறுத்தவரைக்கும், உங்களுக்குத் தெரியும். ஆண்டிற்குக் கிட்டத்தட்ட 5000 கோடி ரூபாய் இழப்பு என்ற நிலையிலே இருக்கிறது. அப்படி 5000 கோடி ரூபாய் இழப்பு என்ற நிலையிலேயிருக்கிற மின்வாரியத்திற்கு, 1275 கோடி ரூபாய், அதனுடைய செலவிற்கே போய்விடுகிறது. அப்படி அந்த 1275 கோடி ரூபாய் மின்வாரியத்திற்கு கிடைத்துவிட்ட காரணத்தால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது மின்வாரியத்திற்கு வருமானம் வருகிறதே, அரசு மின்வாரியத்திற்குத் தரவேண்டிய நிதியுதவி, அதனால் உங்களுக்கு மிச்சம்தானே என்று சொன்னார். மிச்சம் சல்லிக்காசுகூட இல்லை. மின் வாரியம் ஏற்கெனவே அரசுக்குத் தரவேண்டிய பணம் ஏராளம். அரசிடமிருந்து மின்வாரியம் ஆண்டுக்காண்டு கேட்கின்ற பணம் ஏராளம். அந்த நிலையிலே இந்தப் பணம் அரசுக்கு, அரசு மின்வாரியத்திற்கு தரக்கூடிய உதவியைக் குறைப்பதற்கு வழிவகை இல்லாத நிலைதான் இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு என்ன ஏற்படும் என்ற கணக்கு தற்போது இல்லை.

அதைப்போலவே, பேருந்துக் கட்டண உயர்வின் காரணமாக ஒரு 700 கோடி ரூபாய், அந்தப் பலன் பேருந்துக் கழகங்களுக்குத்தான் சென்றுவிடுகிறது. பேருந்துக் கழகங்களைப் பொறுத்தவரைக்கும், ஏற்கெனவே அவையிலே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஏகப்பட்ட கடனிலே

இருக்கின்றன. வாங்கிய கடனை கட்டாத நிலை. வாங்கிய கடனை மட்டுமல்ல, தவணை தவறிய கடனையும் கட்டாத நிலை, வட்டி முதற்கொண்டு கட்டாத நிலை. *342* கோடி ரூபாய்க்கு, வாங்கிய டீசல், உதிரிப்பாகங்களுக்கு உள்ள பணத்தைக்கூட கட்டாத நிலை. அப்படி கட்டாத காரணத்தால், மீண்டும் கடன் வாங்கக்கூடிய அளவிற்கு அந்த வங்கிகளிடமிருந்து கடன் வாங்கக்கூடிய அளவிற்கு தகுதியினை இழந்துவிட்ட நிலை. உடைந்துவிட்ட gearbox, உடைந்துவிட்ட clutch plate ஆகியவற்றை மாற்றுவதற்குக்கூட வங்கியிடம் சென்று கடன் கேட்டால், வாங்கிய கடனைக் கட்டுங்கள், வட்டியினைக் கட்டுங்கள், அப்போதுதான் தருவோம் என்று சொல்லக்கூடிய நிலை. இதுதான் போக்குவரத்துக் கழகங்கள் சந்தித்து வந்த நிலை. அந்த நிலையை மாற்றுவதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஏழைகளினுடைய தலையிலே பாரம் கூடாது என்பதற்காக ஒரு குறைந்தபட்சக் 'கட்டணத்தை உயர்த்தியது. அதனால் சம்பளம்கூட அடுத்த மாதத்திற்குத் தரமுடியுமா, முடியாதா என்ற நிலையில் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஒரு சிக்கல் உருவாகக்கூடிய நிலை கடந்த கால அரசினுடைய அந்த அணுகுமுறையில் ஏற்பட்டது என்பதனை அவையிலே ஏற்கெனவே பலமுறை நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

பிற்பகல் *1-25*

இப்படி வருகின்ற அந்த *700* கோடி ரூபாய், அந்தப் போக்குவரத்துக் கழகங்களில், ஓடாமல் இருக்கின்ற, அன்றாடம் ஓட முடியாத நிலையில் இருக்கின்ற, அவ்வப்போது வழியிலே நின்று விடுகின்ற மழைநேரத்திலே ஒழுகிக்கொண்டிருக்கின்ற அந்த வாகனங்களைச் செப்பனிடுவதற்குக்கூட, *700* கோடி ரூபாய் போதவில்லை என்ற நிலையில் இருக்கிறது. எனவே, அரசு தொடர்ந்து போக்குவரத்துக் கழகங்களுக்கு, பேருந்துகளைப் புதுப்பிக்க பணம் தந்தாக வேண்டும். அவர்கள் வாங்கியிருக்கின்ற கடனைத் திருப்பிக் கட்ட பணம் தந்தாக வேண்டும். வட்டி தர பணம் தந்தாக வேண்டும். இந்த நிலை இருக்கின்ற காரணத்தால், இதனால் நம் அரசுக்கு சல்லிக்காசுக்கூட பலனில்லை. அரசினுடைய கருவூலத்திற்கு சல்லிக்காசுகூட வரவில்லை. இதையெல்லாம் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் *550.51* கோடி ரூபாய்தான் (குறுக்கீடு) இல்லை, இல்லை. இந்தப் பணத்தில், நான் தெளிவாகச் சொன்னேன்; இந்த *700* கோடி ரூபாய், *1275* கோடி ரூபாயில் சல்லிக்காசுகூட போக்குவரத்துக் கழகங்களிலிருந்தோ, மின் வாரியத்திலிருந்தோ அவர்கள் தத்தளிக்கின்ற



நிலையில் இருக்கின்ற காரணத்தால், அரசுக்கு வராது; அரசு அவர்களுக்குத் தருகின்ற நிதியை நிறுத்திவிடவும் முடியாத நிலை; தொடர் சுமையிலே, தொடர் கடனிலே அவர்கள் இருக்கின்ற காரணத்தால் அந்த நிலை இருக்கிறது. இப்படி இதைக் கழித்துவிட்டுப் பார்க்கிறபோது, வெறுமனே *550.51* கோடி ரூபாய்தான் அரசுக்கு நிதியாக வருகிறது.

அதிலும்கூட, அரசு ஊழியர்களுக்கு மீண்டும் ஒரு பேச்சுவார்த்தையின்போது, அவர்கள் கோரிக்கையினை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்றுக் கொண்ட காரணத்தால், *30* கோடி ரூபாய் சலுகையாகத் தரப்பட்டது. அதையும் கழித்துப் பார்த்தால், *520* கோடி ரூபாய்தான் வருகிறது. அந்த *520* கோடி ரூபாய்கூட உடனடியாக அந்த நிதியாண்டிற்கானது அல்ல. *12* மாத காலத்திற்கு, வருங்காலத்திற்கும் சேர்த்துக் கணக்கிடப்பட்டது. அந்த குறிப்பிட்ட ஆண்டிற்கு நாங்கள் விதித்த வரி, அரசினுடைய கஜானாவிற்கு வந்தது, கருவூலத்திற்கு வந்தது வெறுமனே *140* கோடி ரூபாய்தான். *4000* கோடி ரூபாய் Mini Budget என்பது சரியான ஒரு தகவல் அல்ல. உண்மைக்குப் புறம்பான தகவல். அதை யாரும் நம்பக்கூடாது. புள்ளிவிவரங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவை, இதை நம்ப வேண்டும் என்பதற்காக இதனை நான் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுகிறபோது, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்கள் குறித்த அறிவிப்புகள் சொல்லப்பட்டன என்றும், ஆனால், அவை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்றும் தெரிவித்தார். முதலாவதாக, வேளாண் வணிகத் துறை என்ற புதிய துறை ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பு நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்தார். இது தவறான தகவலாகும். அரசாணை எண் *326*, வேளாண்மை, நாள் *20-11-2001*-ன்படி புதிய. வேளாண் வணிகத் துறை—Department of Agricultural Marketing and Agri Business என்று ஏற்படுத்தப்பட்டுவிட்டது. அது செயல்பாட்டில் இருக்கிறது. நில உச்சவரம்புச் சட்டங்கள் தளர்த்துவது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கும் ஆணையிடப்பட இருக்கிறது. தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரை மத்திய அரசிடமிருந்து எவ்வளவு உதவி பெறமுடியுமோ அதை ஏற்கெனவே பெற்று வருகிறோம். கூடுதலாக உலக வங்கியை நாடுவதற்காக, விரிவான அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. அதன் மூலமாக உலக வங்கியிடமிருந்து ஒரு குறிப்பிட்ட, கணிசமான நிதியினைப் பெற்று தரிசு நிலத் திட்டத்தை தமிழகத்தினுடைய அனைத்துப் பட்டி தொட்டிகளிலும்

நடைமுறைப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு நீர்வரத்துப் பகுதி முகவரமைப்பு ஏற்படுத்தப்படவில்லை என்று திரு. ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுவும் தவறான தகவலாகும். இதற்காக அரசாணை, G.O. Ms. No.228, வேளாண்மைத் துறை, நாள் 18-9-2001 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு சங்கமாகவும் பதிவு செய்யப்பட்டுவிட்டது.

கடல் மண்டலப் பகுதியிலே எல்லையைப் பிரிக்கும் வகையிலே வழிகாட்டி சிவப்பு விளக்கு மிதவை அமைக்க நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டு வருகிறது. மகளிர் தொழில் முனைவோருக்கு 4 தொழில் பூங்காக்கள் தொடங்கப்படுவது பற்றியும், அமரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை, எம்.ஜி.ஆர். அறிவு நகர் என்று மாற்றுவது பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தை ஏற்கெனவே அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பத்திரிகையாளர் குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகையை ரூ. 50 ஆயிரத்தில் இருந்து ரூ. 2 இலட்சமாக உயர்த்தி, தகவல் மற்றும் சுற்றுலாத் துறை அரசாணை எண் 144, நாள் 28-9-2001 அன்று வெளியிடப்பட்டுவிட்டது. அதுவும் தவறான தகவலாகும். இந்தத் திட்டம் 4-9-2001 அன்று அமலுக்கு வந்துவிட்டது. இதேபோல 20 ஆண்டுகளுக்கு மேலாக பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற ஓய்வூதியத்தை மாதம் ஒன்றிற்கு ரூ.2000-லிருந்து ரூ.3000-ஆக உயர்த்தி, தகவல் மற்றும் சுற்றுலாத் துறையினரால் அரசாணை எண் 190, 29-11-2001-இன்படி ஆணை வெளியிடப்பட்டுவிட்டது. இந்த ஆணையும் 4-9-2001 முதல் அமலுக்கு வந்துவிட்டது. (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

நிதி அமைச்சர் அவர்கள் தங்கள் உரையை நிறைவு செய்ய இன்னும் எவ்வளவு நேரம் தேவைப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒரு மணி நேரம் தேவைப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களும், மற்ற தலைவர்களும் சம்மதித்தால் நாளைக்கு கேள்வி நேரத்தைத் தள்ளி வைத்துவிட்டு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரையை முடித்துவிடலாம்.

## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 9-4-2002 (செவ்வாய்க்கிழமை) ஆம் நாளன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 9-4-2002 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

நிதி அமைச்சர் அவர்களுடைய பதிலுரை நாளை தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை செவ்வாய்கிழமை (9-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2002 ஏப்ரல் 8

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

100. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 2000-2001ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (1961ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

101. 2000-2001ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

102. 2000-2001ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

103. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 2000-2001ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (1971ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

104. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 2000-2001ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ்)



2002 ஏப்ரல் 8]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

66. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

—0—

...வணக் காப்பகம்
22489.
சென்னை-600 008
நூலகம்